
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஒக்டோபர் 24 செவ்வாய்க்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 91 இல. 252 | Tuesday 24, October, 2023 | 12 பக்கங்கள் | 50/-







## அமைச்சரவை அந்தஸ்துள்ள மூன்று அமைச்சர்கள் நியமனம்

### அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர் ஒருவரும் நியமனம்

அமைச்சரவை அந்தஸ்துள்ள மூன்று அமைச்சர்கள் நேற்று (23) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர். இதன்படி, சுற்றாடல் அமைச்சராக கெஹலிய ரம்புக்வெல்லவும், விவசாய அமைச்சராக மஹிந்த அமரவீரவும் சுகாதார அமைச்சராக வைத்தியர் ரமேஷ் பத்திரனவும் நியமிக்கப்பட்டுள்ளனர். விவசாய அமைச்சிற்கு மேலதிகமாகவே பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சராக மஹிந்த அமரவீர நியமிக்கப்பட்டுள்ளார். கைத்தொழில் அமைச்சர் பதவிக்கு மேலதிகமாக வைத்தியர் ரமேஷ் பத்திரன சுகாதார அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். தற்பொழுது நிதி இராஜாங்க அமைச்சராக பதவி வகிக்கும் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, அமைச்சரவை அந்தஸ்தற்ற தோட்டத் தொழில் முயற்சிகள் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.



## 1000kg போதைப்பொருள் படகு இலங்கை நோக்கி

# தென்பகுதி கடல் பகுதி தீவிர கண்காணிப்பில்!

### மேலுமொரு தொகையை கைப்பற்ற ரோந்துப்பணி மும்முரம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கடற்படை மற்றும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு அதிகாரிகள் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில், நாலாயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான 212 கிலோ ஹெரோயின் மற்றும் ஐஸ்போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. இவற்றை பூசா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இருவரே நாட்டுக்கு கொண்டு வந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இது தொடர்பில் ஐவரும் கைதாகியுள்ளனர்.

கடற்படையினருக்கு கிடைத்த தகவல்களுக்கிணங்க கடற்படையினரும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவும் இணைந்து காலிக்கு மேற்கே 168 கிலோ

மீற்றர் தூர கடற்பரப்பில் இச்சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். இதன்போதே இவை கைப்பற்றப்பட்டன.

"தெவுந்தர தமிழ்" மற்றும் "பெபொல்களு" ஆகிய போதைப்பொருள் வர்த்தகத்தில்ஈடுபடும் 04



நேற்று முன்தினம் 212kg போதைப்பொரு–ளுடன் படகில் கைதான இருவரிடம் பொலிஸார், போதைப்பொருள் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளில் அதிர்ச்சித் தகவல்கள்

## மின்சார சபை மறுசீரமைப்புக்கான முன்மொழிவு அமைச்சரவையில்

### மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேககர



இலங்கை மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பான முன்மொழிவுகள் அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படுமென, மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்தார்.

இதுவரை ஆறு மாதங்களுக்கு ஒரு முறை திருத்தப்பட்ட மின் கட்டணத்தை, இனிமேல் 03 மாதங்களுக்கு ஒரு முறை திருத்துவதற்கான பொறிமுறையொன்று தயாரிக்கப்படும் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று (23) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர இவ்வாறு தெரிவித்தார். இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர, மின் கட்டணத் திருத்தம் செய்ய 04

## ஷம்மி கோரிய இடைக்கால தடை உத்தரவு மனு நிராகரிப்பு

இலங்கை கிரிக்கெட் சபை தலைவர் ஷம்மி சில்வா மீது கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க மேற்கொண்டதாக கூறப்படும் அவதூறு தொடர்பில் ஷம்மி சில்வாவினால் தாக்கல் செய்த வழக்கில், இடைக்கால தடை உத்தரவு ஒன்றை பிறப்பிக்குமாறு கோரப்பட்ட மனு கொழும்பு மாவட்ட நீதிபதியினால் நேற்று (23) நிராகரிக்கப்பட்டது.

மனுதாரரான ஷம்மி சில்வா சார்பில் சட்டத்தரணி சன்ஜே பொன்சேகாவின் 04

## தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி விசேட கொடுப்பனவு

### நியாயமான முறையில் வழங்கப்பட வேண்டும்



தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாமான முறையில் தீபாவளி விசேட கொடுப்பனவு வழங்கப்பட வேண்டுமென இ.தொ.கா வலியுறுத்தியுள்ளது. தீபாவளி கொடுப்பனவுகள் குறித்து கம்பனியுடன் பேச்சுவார்த்தை நடத்திய இ.தொ.கா, பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு விசேட கொடுப்பனவுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. கம்பனிக்கு வருவாய் ஈட்டி கொடுக்கும் வகையில் 04

## தொடர் மழையால் நோய்கள் பரவல்

### மூன்று நோய்கள் குறித்து சுகாதாரப்பிரிவு எச்சரிக்கை

நிலவும் மழையுடன் கூடிய காலநிலையால், தற்போது மூன்று தொற்று நோய்கள் நாட்டின் பல பகுதிகளில் பரவி வருவதாக சுகாதார திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.


சில பகுதிகளில் கண் நோய், வயிற்றுப்போக்கு, சுவாசக் கோளாறுகளுடன் கூடிய காய்ச்சல் போன்றவை பதிவாகி வருவதாக சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

இவ்வாறான நிலைமைகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மக்கள் தமது 04

## வங்காள விரிகுடா தாழமுக்கம் சூறாவளியாக மாறலாம்

### வானிலை அவதான நிலையம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வங்காள விரிகுடாவில் நிலை கொண்டுள்ள தாழமுக்கம் எதிர்வரும் 12 மணித்தியாலங்களுக்குள் சூறாவளியாக மாற்றமடைந்து, கிழக்கு ஈசான மூலைப் பகுதியில் பயணிக்கலாமென வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் தகவல் 04

## மட்டு. சொகுசு பஸ்ஸுடன் முச்சக்கர வண்டி விபத்து

### சம்பவ இடத்திலேயே இருவர் பலி



கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கி சென்ற அதிசொகுசு பஸ்ஸுடன் முச்சக்கர வண்டி மோதி விபத்துக்குள்ளானது. இதில் இருவர் ஸ்தலத்தில் பலியாகினர். 04



06

## நெல் களஞ்சியங்களிலிருந்து 10 இலட்சம் ரூபா நெல் மாயம்!

அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் முறைப்பாடு

## பிரதமர் மோடியை சந்திக்க நேரம் கோரி விக்கி கடிதம்

### கட்சி தலைவர்கள் ஒப்பமிட்டதும் பணிகள் பூர்த்தியாகும்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்குமாறு கோரும் கடிதம் மற்றும் வடக்கு, கிழக்கில் காணப்படும் சமகால நிலைமைகளை மையப்படுத்தியதான இராஜதந்திரிகளுக்கான கடிதம் ஆகியன இறுதியாகியுள்ளதாக தமிழ் மக்கள் 04



06

## மண்மேடு சரிந்து விழுந்து உயர்தர மாணவர் உயிரிழப்பு

## ரவிராஜைக் கொலை செய்தவரை விரைவில் அம்பலப்படுத்துவேன்

### சிறிது காலம் பொறுத்திருக்குமாறு யாழில் மனோ தெரிவிப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜைக் கொலை செய்தவர், கொலைக்கு உத்தரவிட்டவர் பற்றி தகவல்கள் கிடைத்துள்ளதாக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் (22) நடத்திய ஊடக சந்திப்பிலே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, 04



## அமைச்சர்களான ஹரீன்–மனுஷவின் மனு மீதான விசாரணை ஒத்திவைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அமைச்சர்களான ஹரீன்பெர்னாண்டோ, மனுஷநாணயகார ஆகியோர்களது மனுக்கள் மீதான விசாரணை எதிர்வரு 27 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. 04

## கட்டாரிலிருந்து இலங்கை திரும்பிய பணிப்பெண் விமானத்தில் மரணம்!



கட்டாரில் வீட்டுப் பணிப் பெண்ணாக பணியாற்றி, நாடு திரும்பிக்கொண்டிருந்த பெண் நேற்று (23) விமானத்துக்குள் உயிரிழந்தார். தனது சேவைக் காலத்தை முடித்துவிட்டு மீண்டும் நாடு திரும்பிக் கொண்டிருந்த வேளையிலே, இப்பெண் உயிரிழந்துள்ளதாக 04

## 23 கோடி ரூபா கொக்கெய்னுடன் வெளிநாட்டு பெண் அதிரடி கைது

### விமான நிலைய சுங்க பிரிவினரிடம் சிக்கினார்



கொக்கெய்ன் போதைப்பொருளுடன் இலங்கைக்கு வந்த வெளிநாட்டுப் பெண்ணொருவரை கட்டுநாயக்க 04

**91 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்**

# தினகரன் நவராத்திரி விழா நிகழ்வுகள்












படங்கள்: நிஸ்சங்க விஜயரட்ண, வாசித பட்டபெந்திகே

## சீனன்கோட்டையில் காதிரிய்யா மனாகிப் தமாம் மஜ்லிஸ் நாளை

பேருவளை, சீனன் கோட்டை குட்டி மலை ஜலாலிய்யா ஜும்ஆப் பள்ளிவாசலில் காதிரிய்யா தரீக்காவின் ஸ்தாபகர் முஹியத்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்களின் ஞாபகார்த்த மனாகிப் மஜ்லிஸின் தமாம் வைபவம் நாளை புதன் கிழமை (25) பள்ளிவாசல் இமாம்களான மௌலவிகளான பஹ்ரி (மிஸ்பாஹி), முஹம்மத் இக்ராம் (நுலாரி) ஆகியோர் தலைமையில் நடைபெறுவதோடு மாத்தறை மின்னதுல் பாஸிய்யா அரபுக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் ரயீஸுல் முகத்தமுஷ்ஷாதுலி மௌலவி எம்.என்.எம் இக்ராம் (அல் பாஸி) விஷேட பேச்சாளராக கலந்து கொள்வார்.

தமாம் மஜ்லிஸில் கலீபதுஷ் ஷாதுலிகளான மௌலவிகள் எம்.எம் ஸைனுல்ஆப்தீன் (பஹ்ஜி), எம்.ஐ.எம் ரபீக் (பஹ்ஜி) ஆகியோர் ஹழரா திக்ர் மஜ்லிஸை நடாத்துவதோடு சீனன் கோட்டை பள்ளிச்சங்க தலைவர் உட்பட பள்ளிச்சங்க உறுப்பினர்கள், மேற்படி பள்ளிவாசல் பரிபாலனக் குழு உறுப்பினர்கள் உலமாக்கள், இஹ்வான்கள் என பலரும் கலந்து கொள்வர்.

குத்புல் அக்தாப் கௌதுல் அஃலம் முஹ்யத்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்களின் ஞாபகர்த்தமாக இந்த மனாகிப் மஜ்லிஸை மஸ்ஜித் நிர்வாகிகள், ஊர் ஜமாஅத்தார்கள் இணைந்து மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தென் மாகாண பாடசாலைகளில் நிலவும்

## ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை இணைத்துக்கொள்ள விண்ணப்பம் கோரல்

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

தென் மாகாண கல்வி அமைச்சு

**தென் மாகாண சபை பாடசாலைகளில் காணப்படும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி ஆசிரியர் வெற்றிடங்களுக்காக கல்விப் பட்டதாரிகளை சேர்த்துக் கொள்ளல் - 2023**

தென் மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் நிலவுகின்ற சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல பாடங்களில் நிலவுகின்ற ஆசிரிய வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவை 111 இற்கு பட்டதாரிகளை இணைத்துக் கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தென் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

தென் மாகாணத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட பட்டதாரிகள் அல்லது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு ஆகக் குறைந்தது முன்னைய மூன்று வருடங்கள் அல்லது அதற்கு கூடியகாலம் கணவன் அல்லது மனைவி தென் மாகாணத்தை வசிப்பிடமாகக் கொண்டிருந்த பட்டதாரிகளுக்கு இதற்கு விண்ணப்பிக்க முடியும். அத்தோடு, விண்ணப்பதாரி 18 தொடக்கம் 35 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம், தமிழ் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களில் கட்டாயம் சித்தியடைந்திருப்பதோடு, தான் பெற்ற பட்டத்துடன் இணைந்ததாக விண்ணப்பம் கோரப்பட்டுள்ள பாடங்களில் மூன்று பாடத்திற்கு தாம் வசிக்கும் பிரதேச செயலாளர் பிரிவு உட்பட அண்மித்த ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு விண்ணப்பிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இம்முறை மொத்தம் 56 பாடங்களுக்கு தென் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களை கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## "டெக்னோ 2023" தேசிய பொறியியல் தொழில்நுட்ப கண்காட்சி BMICH இல்



"டெக்னோ 2023" தேசிய பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கண்காட்சி பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ பிரதம அதிதியாக கலந்து கொண்டார். விமானியும் மற்றும் தொழில்முறை பொறியியலாளருமான விமானப்படை தளபதி தனது ஆரம்ப உரையில், இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப பாதுகாப்பு படையின் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் எந்த அளவிற்கு உதவுகின்றன என்பதை விளக்கினார்.

இலங்கை பொறியியல் நிறுவகத்தினால் (IESL) வருடாந்தம் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கண்காட்சியின் மூலம் எதிர்கால கண்டுபிடிப்பாளர்களை உருவாக்க வழிவகுப்பதோடு இந்த ஆண்டு "டெக்னோ 2023" கண்காட்சியின் கருப்பொருள் ''பொறியியல் தொழில்நுட்பத்தின் மூலம் பொருளாதாரத்தை கட்டியெழுப்புதல்'' என்பதாகும்.

### அநுராதபுரம் மாவட்டத்தில்

## உழுந்து, பயறு செய்கையை விஸ்தரிக்க ரூ. 07 மில். ஒதுக்கீடு



**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுரம் மாவட்டத்தில் 2023/24ஆம் ஆண்டு பெரும்போக செய்கையின்போது உழுந்து மற்றும் பயறுச்செய்கையை விஸ்தரிப்பதற்காகவேண்டி அரசாங்கத்தினால் 7.92 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட விவசாய பணிப்பாளர் எச்.எல்.தேனுவர தெரிவித்தார்.

அநுராதபுரம் அரசாங்க அதிபர் அலுவலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்ற மாவட்ட விவசாயக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அநுராதபுரம் மாவட்டத்தின் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் இம்மாதம் தேவையான உழுந்து மற்றும் பயறு நடுகைக்குரிய விதைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் பயிர்செய்கையில் ஈடுபடும் பயனாளிகளின் பெயர் விபரங்கள் திரட்டப்பட்டு அவர்களுக்கு தேவையான விதையினை வழங்க கமநல சேவைகள் மத்திய நிலையங்கள் ஊடாக தேவையான நடவடிக்கையினை எடுப்பதற்குரிய ஆலோசணை வழங்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட விவசாயப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## சட்டவிரோத துப்பாக்கிகளுடன் இருவர் சந்தேகத்தில் கைது

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

அம்பலாந்தோட்டை, கொக்கலை மற்றும் ரிதியகம ஆகிய பிரதேசங்களிலிருந்து சட்டவிரோதமான முறையில் இரு துப்பாக்கிகளை வைத்திருந்த இரண்டு சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக அம்பலாந்தோட்டை பொலிஸார் தெரிவித்தனர். கொக்கலை வடக்கு கடவர பிரதேசம் மற்றும் ரிதியகம ஆகிய பிரதேசங்களிலிருந்தே இவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். தங்காலை குற்றத் தடுப்புப் பொலிஸ் அதிகாரிகளினால் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போதே சட்டவிரோதமாக வைத்திருந்த துப்பாக்கிகளுடன் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.




பேருவளை அதாலா தொழில்நுட்ப நிறுவனத்தில் தொழிற்பயிற்சியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் சீனன்கோட்டை ஆரம்பப் பாடசாலையின் ஹிரீபத்துல் ஹைரா நினைவு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இவ்வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட பியூட்டி ஜெம்ஸ் நிறுவனத்தின் தலைவர் ஏ.இஸட்.எம் சவாஹிர் ஹாஜியார் பயிற்சியை நிறைவு செய்த மாணவரொருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் கௌரவ அதிதியாகக் கலந்து கொண்ட நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஹ்ஸர் ஸவாஹிர், முகாமைத்துவப் பணிப்பாளர் ரிகாஸ் ஸவாஹிர், சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சரின் பிரதம ஆலோசகரான பொறியியலாளர் லியூ யங்க் ஸ்லொன் உள்ளிட்டோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

# ஊழல் மோசடி முறைகேடுகளால் சுங்கத்திற்கு ரூ. 5800 கோடி நட்டம்

## பாராளுமன்ற தெரிவுக்குழுவில் ஆராய்வு

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

பல்வேறு ஊழல் மோசடிகள் மற்றும் முறைகேடுகள் காரணமாக சுங்கத் திணைக்களத்திற்கு கிடைக்கவேண்டிய வருமானத்தில் 5800 கோடி ரூபா இழக்கப்பட்டுள்ளதாக முறைமை மற்றும் நியதிகள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழு குறிப்பிட்டுள்ளது.

மேற்படி இழக்கப்பட்டுள்ள நிதியை மீள அறவிடும் வகையில் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அந்த தெரிவுக்குழுவின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க நிதியமைச்சு உள்ளிட்ட நிறுவனங்களுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார். மேற்படி சுங்கத்திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் மற்றும் அதனூடாக திறைசேரிக்கு கிடைக்க வேண்டிய வருமானம் ஆகியவை எவ்வாறு கிடைக்காமல் போனது என்பது தொடர்பில் இந்தத் தெரிவுக்குழு, அமர்வின்போது அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியுள்ளது.

அதேவேளை, இந்தோனேசியா, மலேசியா மற்றும் மியன்மார் ஆகிய நாடுகளிலிருந்து நாட்டிற்கு கொட்டைப்பாக்கு ரூபா 750 900 மில்லியனுக்கு இடைப்பட்ட நிதியை செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இதனை, நாட்டில் உற்பத்தி செய்ததாக தெரிவித்து பெரும் இலாபத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் மீள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவுக்குழுவில் கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

தற்போது அதுபோன்று 1493 மெற்றிக்தொன் கொட்டைப்பாக்கு சுமார் 100 கொள்கலன்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. நாட்டிலுள்ள கொட்டைப்பாக்கு வியாபாரிகளுக்கு இதன்மூலம் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் குழுவின் அமர்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# மண்மேடு சரிந்து விழுந்து உயர்தர மாணவர் உயிரிழப்பு



மாத்தறை கொலொன்ன தடயம் கந்த பிரதேசத்தில் வீடொன்றில் மண்மேடு சரிந்து விழுந்ததில், மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.இப்பரிதாபச் சம்பவம் நேற்றுமுன்தினமிரவு (22) ஏற்பட்டுள்ளது.தொரபனே பாடசாலையில் உயர்தரத்தில் கல்வி பயிலும் 17 வயதுடைய மாணவரே, இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இம்மாணவனின் சடலம் ஓமல்பே வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மண்மேடு சரிந்துள்ளமையால் அப்பகுதிக்கு செல்ல முடியாத நிலைமை தற்போது ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக கூறி இந்தியாவுக்கு ஆட்களை கடத்தியவர் கைது

## தமிழ்நாடு தேனீமாவட்டத்தில் இந்திய உளவுப்பிரிவு அதிரடி

இலங்கையில் ஆட்கடத்தல் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர் ஒருவரை தமிழ்நாட்டில் தேசிய விசாரணை முகவர் அமைப்பினர் கைதுசெய்துள்ளனர்.39 வயதுடைய இம்ரான் கான் என்பவரே கைதானவராவார்.இவர், 2021 முதல் தப்பியோடியிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பலமாதங்களாக இவரது நடமாட்டத்தை அவதானித்த இந்தியாவின் தேசிய விசாரணை முகவர் அமைப்பினர், தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தில் இவரை கைது செய்தனர். ஆட்கடத்தல் தொடர்பான பாரிய சதிமுயற்சிகளில் இவர் ஒரு முக்கிய புள்ளி 04

# நெல் களஞ்சியங்களிலிருந்து 10 இலட்சம் ரூபா நெல் மாயம்!



நெல் சந்தைப்படுத்தல் சபையின் களஞ்சியத்திலிருந்த ஒரு தொகை நெல், காணாமல் போயுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

களஞ்சியசாலைகளில் வைக்கப்பட்டிருந்த சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான நெல்லே காணாமல் போயுள்ளது.

இதுகுறித்து, நெல் சந்தைப்படுத்தல் சபையின் உள்ளக ஊழியர்கள் குழு அமைச்சரிடம் முறைப்பாடு செய்துள்ளது. குருநாகல் மாவட்டத்தில் உள்ள ஐந்து நெல் களஞ்சியசாலைகளிலே,நெல் காணாமல் போயுள்ளது.

இந்நிலையில், இச்சம்பவம் தொடர்பான முழுமையான அறிக்கையை மூன்று நாட்களுக்குள் வழங்குமாறு சந்தைப்படுத்தல் சபைத் தலைவருக்கு அமைச்சர் மஹிந்த அமரவீர உத்தரவிட்டுள்ளார்.

இதுதொடர்பான அறிக்கை கிடைத்தவுடன் முழுமையான விசாரணைக்காக குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படும் எனவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

## ஆசிய பிராந்திய நிலைபேறான மாநாடு மலேசியாவில் ஆரம்பம்

ஆசிய பிராந்திய நிலைபேறான போக்குவரத்து மன்றம் மற்றும் முதலாவது ஆசிய பசிபிக் ரயில்வே மாநாடு மலேசியாவில் ஆரம்பமானது. பல நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் இம் மாநாடு நான்கு நாட்கள் மலேசியாவில் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டில்

இலங்கையை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன கலந்து கொண்டார்.

சர்வதேச ரயில்வே சங்கம், 04






# காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

**எனது இல. 3/2/1/140**
**பிரதேச செயலகம்**
**மினுவன்கொடை**

ஒரு பகிரங்க தேவைக்காக கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியினை அரசாங்கம் எடுத்துக் கொள்ள எண்ணியுள்ளது. மேலதிக விபரங்களுக்கு 2022.03.10ஆம் திகதிய 2270/62ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் III பகுதியினை பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| மாவட்டம் | : | கம்பஹா |
| பிரதேச செயலாளர் பிரிவு | : | மினுவன்கொடை |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | : | இல. 107 கணிஹிமுல்ல |
| கிராமத்தின் பெயர் | : | கனிஹிமுல்ல |
| காணியின் பெயர் | : | பரகஹவத்த |
| வரைபட இல. | : | ஆ.வ.கம் 4278 |
| துண்டு இல. | : | 01 |
| விஸ்தீரணம் | : | 0.1624 ஹக்டயார் |

**யூ.டப்ளியூ.ரீ.யூ. ராஜகருணா**
**பிரதேச செயலாளர்,**
**மினுவன்கொடை.**

**விலைமனுக்களுக்கான அழைப்பு(IFB)**

**எரிசக்தி அமைச்சு**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**முத்துராஜவெலயிலுள்ள CPC இடப்பரப்பில் தொடர் (CHAINLINK) வேலியை அமைத்தல்**
**B/40/2023**

1.முத்துராஜவெலயிலுள்ள CPC இடப்பரப்பில் தொடர் வேலியை அமைப்பதற்காக தகைமை மற்றும் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் (DPC) தலைவர் அழைக்கின்றார்.
2.பின்வருமாறு விபரிக்கப்பட்ட 8 மில்லியன் ரூபா மதிப்பீட்டுக் கிரயத்தைக் கொண்டது.
3.இந்த வேலையின் நிர்மாணக்காலம் ஒரு (01) மாதமாகும்.
4.சகல விலைக்கோரல்களும் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் எழுபத்தேழு (77) நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும். (உ-ம்: 2024-01-31 வரை)
5.ஒப்பந்தத்தைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராகவும் **ICTAD** நிறுவனத்தில் C-8 அல்லது C-7 பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
6.விலைமனுதாரர் மீளளிக்கப்படாத 2000.00 ரூபா கட்டணத்தை (ரூபா 1,696.71 + 2.5% SSCL + 15%) செலுத்தி கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 2023-11-09ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/.
7.விலைமனுக்கள் 2023-11-15ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம். வளமுள்ள விலைமனுதாரர்கள் https://eroc.dre.gov.lk/ எனும் இணையதளத்தின் ஊடாக 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் கம்பனிப் பதிவாளரிடம் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். என்பதுடன் PCA 3 சான்றிதழை அவர்களின் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
8.மேலதிக தெளிவுபடுத்தல்கள் (ஏதுமிருப்பன்) பிரதி முகாமையாளர் (ஆதனங்கள்) திரு. J.A.C.K.J. பண்டார அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 011-5455133.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல. 609, டாக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**
**தொ.பே. 011-5455335, தொலைநகல்: 011-5455424**

**விலைமனுக்களுக்கான அழைப்பு(IFB)**

**எரிசக்தி அமைச்சு**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**10 எண்ணிக்கையான EV Charging Station Canopies வழங்குதல், கட்டுருவாக்கம் செய்தல் மற்றும் நிறுவுதல்**
**B/41/2023**

1.பின்வருமாறு விபரிக்கப்படுவதும் 05 மில்லியன் ரூபா மதிப்பீட்டுக் கிரயத்தைக் கொண்டதும் 10 எண்ணிக்கையான EV Charging Station Canopies வழங்குதல், கட்டுருவாக்கம் செய்தல் மற்றும் நிறுவுதலுக்காக தகைமை மற்றும் தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் (DPC) தலைவர் அழைக்கின்றார்.
2.இந்த வேலையின் நிர்மாணக்காலம் இரண்டு (02) மாதமாகும்.
3.சகல விலைக்கோரல்களும் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நாள் முதல் குறைந்தபட்சம் அறுபத்துமூன்று (63) நாட்களுக்கு செல்லுபடியாதல் வேண்டும். (உ-ம்: 2024-01-17 வரை)
4.விலைமனுதாரர் மீளளிக்கப்படாத 2000.00 ரூபா கட்டணத்தை (ரூபா 1,696.71 + 2.5% SSCL + 15%) செலுத்தி கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, 1ஆம் தளம், இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் (பெறுகைகள் மற்றும் களஞ்சியசாலை) அலுவலகத்திலிருந்து 2023-11-09ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/.
5.ஒப்பந்தத்தைப் பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராகவும் மற்றும் **ICTAD** நிறுவனத்தில் குறைந்தபட்சம் EM5, SP5 பதிவை உடையவராகவும் இருத்தல் வேண்டும் அல்லது இதனையொத்த தன்மைகளை உள்ளடக்கிய வேலைகளுடன் மின்சார நிறுவல்கள் மற்றும் உருக்குக் கட்டுருவாக்கம் என்பவற்றில் குறைந்தபட்சம் 5 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6.விலைமனுக்கள் 2023-11-15ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம். வளமுள்ள விலைமனுதாரர்கள் https://eroc.dre.gov.lk/ எனும் இணையதளத்தின் ஊடாக 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்கச் சட்டத்தின் பிரகாரம் கம்பனிப் பதிவாளரிடம் பதிவு செய்துகொள்ளல் வேண்டும். என்பதுடன் PCA 3 சான்றிதழை அவர்களின் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட முகவரியானது:

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலை செயற்பாடுகள்,**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**1 ஆம் மாடி, இல. 609, டாக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09.**
**தொ.பே. 011-5455335, தொலைநகல்: 011-5455424**

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

## விலைக்கோரலுக்கான அழைப்பு

| **ஒப்பந்தத்தின் பெயர்** |
|---|
| திராய்மடு, சுனாமி நினைவாலயத்தில் கொங்கிறீட் வீதியை நிர்மாணித்தல் |
| புன்னைச்சோலை, குமாரபுரம் வீதி 2, 3, 4, 5, 6 மற்றும் 7ஆம் குறுக்குகளில் கொங்கிறீட் வீதியை நிர்மாணித்தல் |
| (மண்முனை வடக்கு பி.சே. பிரிவு) |
| பேத்தாழை, விஷ்ணு கோயில் வீதி பகுதி 1, விஷ்ணு கோயில் 2ஆம் குறுக்கு மற்றும் விஷ்ணு கோயில் 3ஆம் குறுக்குகளில் கொங்கிறீட் வீதியை நிர்மாணித்தல் |
| வாழைச்சேனை, பேத்தாழை, விஷ்ணு கோயில் 2ஆம் பிரிவில் கொங்கிறீட் வீதியை நிர்மாணித்தல் |
| பாசிக்குடா, தாமரைக்குளத்தில் கொங்கிறீட் வீதியை நிர்மாணித்தல் |
| வாழைச்சேனை, கலைமகள் வீதி, கண்ணகிபுரம் வீதி, ராமகிருஷ்ணா வீதி மற்றும் புதுக்குடியிருப்பின் கொங்கிறீட் வீதியை நிர்மாணித்தல் |
| கொக்கட்டிச்சோலை, மகிழந்தீவு உள்ளக வீதிகளில் கொங்கிறீட் வீதியை நிர்மாணித்தல் |
| கொக்கட்டிச்சோலை, பக்தார்குளம் பன்னிச்சயதிமுன்னரை உள்ளக வீதியில் கொங்கிறீட் வீதியை நிர்மாணித்தல் |
| மண்டூர் பகுதி 1, சிங்கபுரம், வைகால் காடு வீதியில் கொங்கிறீட் வீதியை நிர்மாணித்தல் |
| மண்டூர் பகுதி 11, சிங்கபுரம், வைகால் காடு வீதியில் கொங்கிறீட் வீதியை நிர்மாணித்தல் |
| சித்தாண்டி, பூபாலர் மற்றும் நாவலர் வீதியில் கொங்கிறீட் வீதியை நிர்மாணித்தல் |
| திஸ்ஸவீரசிங்கம் சதுக்கம் முதல் எல்லை வீதி தொடக்கம் வரை கொங்கிறீட் வடிகாலை நிர்மாணித்தல் (படிநிலை II) |
| ஒந்தாச்சிமடம், காளி கோயில் பிரதான வீதியில் கொங்கிறீட் வீதியை நிர்மாணித்தல் |

மேற்கூறப்பட்ட வேலைகளுக்காக தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023-10-24ஆம் திகதி முதல் 2023.10.31ஆம் திகதி வரையில் பெருந்தெருக்கள் அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk எனும் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**கைத்தொழில் அமைச்சு**
**(சிறிய மற்றும் மத்திய அளவனா தொழில்முயற்சி அபிவிருத்தி பிரிவு)**
**இலங்கை கைப்பணிச்சபை**
**'லக்சல'**

LAKSALA
All of Sri Lanka

## வெளியிலிருந்து சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக் கோரல் - 2024

1. **பாதுகாப்புச் சேவைகள் (Security Services)**
2. **சுத்திகரிப்புச் சேவைகள் (Clealning Services)**
3. **மனிதவள சேவைகள் (Manpower Services)**

இலங்கை கைப்பணிச் சபை லக்சலவிற்காக வெளியிலிருந்து சேவைகளை பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் மேற்படி சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் மற்றும் நிபந்தனைகளை இலங்கை கைப்பணிச்சபை (நிர்வாகப் பிரிவு) இல. 215, பௌத்தாலோக்க மாவத்த, கொழும்பு-07 என்ற முகவரியில் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரை 2023.10.24 முதல் 2023.11.13 வரை மீளளிக்கப்படாத ரூ. 1500/- கேள்விக் கட்டணத்தை கணக்குப் பிரிவிற்கு செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் விண்ணப்பங்கள் விநியோகித்தல்/ ஏற்றுக்கொள்ளல் 2023.11.13 பி.ப. 1.30 வரை மட்டும் நடைபெறும். அதனடிப்படையில் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் 2023.11.13 பி.ப. 1.30 இற்கு முடிவடைவதுடன், அத்தினத்திற்கு முன்னர் பதிவுத் தபாலில் கிடைக்குமாறு அல்லது கீழ்க்காணும் முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் விண்ணப்பங்களை உள்ளிடலாம். விலைமனுக்கள் உள்ளடக்கப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த சேவையைக் குறிப்பிட்டு "விலைமனுக்கள் சமர்ப்பித்தல் 2024" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

குறித்த தினத்தின் பின்னர் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன், விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அன்றே பி.ப. 1.30 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படும். கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு கீழ்க்காணும் முகவரியில் அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

மேற்படி சேவைக்காக நிறுவனமொன்றைத் தேர்ந்தெடுக்கும் இறுதித் தீர்மானம் இச்சபைக்கு உரியது.

**தலைவர்,**
**இலங்கை கைப்பணிச் சபை - லக்சல,**
**இல. 215, பௌத்தாலோக்க மாவத்த,**
**கொழும்பு-07.**
**தொ.பே.இல. 0112557132**

## பெறுகை அறிவித்தல்

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**
**ஒரு வருட காலத்திற்கு கொலன்னாவ, ஒருகொடவத்த மற்றும் நைலோன் 6 சேவை நிலைய வேலைத்தளம் மற்றும் முத்துராஜவெலயிலுள்ள பீட்டுமன் மற்றும் உராய்வுநீக்கி எண்ணெய் களஞ்சியசாலை கட்டிடத்தொகுதி மற்றும் இபெகூ தலைமை அலுவலகத்திற்கான பீடை கட்டுப்பாட்டுச் சேவை (2024)**
**B/30/2023**

**திருத்தம் மற்றும் நீடிப்பு அறிவித்தல்**

மேற்படி தலைப்பின் கீழ் இந்தப் பத்திரிகையில் பிரசுரமான விளம்பரத்தின் பிரகாரம் ஏற்கனவே குறித்த விலைமனுக்களை பெற்றுக்கொண்ட வளமுள்ள மற்றும் இந்த விலைக்கோரல் செயற்பாடுகளில் பங்குபற்ற ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கவனத்திற் கொள்ளுமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இத்தால் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

**1. திருத்தம்**

அளவுப் பட்டியலின் (BOQ) 06, 07 மற்றும் 08ஆம் பக்கங்களை அகற்றிவிட்டு இபெகூ இணையதளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள இணைப்பை பிரதியீடு செய்யவும்.

**2. நீடித்தல்**

விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 2023.10.30ஆம் திகதி பி.ப. 2.00 மணி எனத் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அது இப்போது 2023-11-13ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதுடன் அதன்பின் கொழும்பு-09, இல. 609, டாக்டர் டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம், 1ஆம் தளம், முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியம்) அலுவலகத்தில் உடனடியாகத் திறக்கப்படும்.

மேலும் விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 49 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும் (உ-ம் 2024-01-01 வரை) மற்றும் விலைக்கோரல் பிணை முறியானது விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 77 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும் (உ-ம் 2024-01-29 வரை)

ஏனைய அனைத்து நிபந்தனைகளும் விலைமனு ஆவணத்தில் உள்ளவாறு மாறாமல் அவ்வாறேயிருக்கும்.

ஏதேனும் சிரமத்திற்கு இபெகூ வருத்தத்தைத் தெரிவிக்கின்றது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர்**
**(பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**இல. 609,**
**கலாநிதி டனிஸ்டர் த சில்வா மாவத்தை,**
**கொழும்பு-09, இலங்கை.**

# ஆசிய பிராந்திய போக்குவரத்து மாநாட்டில் அமைச்சர் பந்துல



15ஆவது ஆசிய பிராந்திய நிலைபேறான போக்குவரத்து கூட்டமும் முதலாவது ஆசிய பசிபிக் ரயில்வே மாநாடும் மலேசியாவில் ஆரம்பமானது. பல நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் இம் மாநாடு நான்கு நாட்கள் மலேசியாவில் நடைபெறவுள்ளது. இம்மாநாட்டில் இலங்கையை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் போக்குவரத்து பெருந் தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன கலந்துகொண்டுள்ளார். சர்வதேச ரயில்வே சங்கம், ஐக்கிய நாடுகளின் பிராந்திய அபிவிருத்தி மத்திய நிலையம், மலேசிய போக்குவரத்து அமைப்பு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றால் ஏற்பாடு செய்யப்படும்' முதலாவது ஆசிய பிராந்திய ரயில்வே மாநாட்டில்' விசேட அதிதியாக போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன கலந்துகொண்டுள்ளார்.

# கதிர்காமக் கந்தனின் திருவுருவச்சிலை பிரதிஷ்டை

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன போதி வளாகத்தில் இன்று (24) காலை 9.30 மணிக்கு கதிர்காமக்கந்தனின் திருவுருவச்சிலை வள்ளி, தெய்வானை சமேதராய் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.

நூற்றாண்டை நெருங்கும் வேளையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக இந்நிகழ்வு அமையவுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் ஹட்சன் சமரசிங்கவின் வழிகாட்டலின் கீழ் பொறியியலாளர் சண். குகவரதன், எம்.டி.எல்.குணரத்ன ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.



இந்நிகழ்வில் வானொலி நேயர்களையும் கலந்துகொள்ளுமாறு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவை பணிப்பாளர் இரட்ணசிங்கம் கணபதிப்பிள்ளை அழைப்பு விடுத்துள்ளார்.

# அமைச்சரவை மாற்றத்தால் பொதுஜன பெரமுன வருத்தம்

## கட்சியின் செயலாளர் சாகர காரியவசம்

அமைச்சரவை மாற்றம் காரணமாக பொதுஜன பெரமுன கட்சி தமது கவலையைத் தெரிவிப்பதாக அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று அந்தக் கட்சி நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அதுதொடர்பில் குறிப்பிட்ட அவர், இந்த விடயத்தில் மேற்கொண்ட தீர்மானம் தவறானது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கை யில், சுகாதார அமைச்சராக பதவி வகித்த கெஹலிய ரம்புக்வெ ல்லவுக்கு எதிராக பொய்க்குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. பின்னர் அவை பொய்க் குற்றச்சாட்டு என்பது நிரூபிக்கப்பட்டது. எனினும் ஜனாதிபதி இத்தகைய சூழ்நிலையில் ஏதாவது ஒரு மாற்றத்தை கொண்டுவந்தால் நல்லது என்ற முடிவில் டாக்டரான ரமேஷ் பத்திரனவை சுகாதார அமைச்சராக நியமித்துள்ளார்.

எனினும் கட்சி என்ற ரீதியில் நாம் கவலையடைய வேண்டியுள்ளது. அது தொடர்பில் நாம் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளோம்.

பாராளுமன்றத்தில் அரசாங்கத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான பலத்தை பொதுஜன பெரமுன கட்சியே வழங்கி வருகிறது. அந்தக் கட்சியிலுள்ள உறுப்பினர்களே அதற்கான பலத்தை கொடுத்து வருகின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் ஐந்து உறுப்பினர்களே உள்ளனர். எனினும் புதிதாக இராஜாங்க அமைச்சர் பதவியொன்றும் அக்கட்சிக் கு வழங்கியுள்ளதை ஏற்கமுடியாது. அது தவறானது. தவறுகளை தவறு என சுட்டிக்காட்டுவதில் நாம் ஒருபோதும் பயப்படப்போவதில்லை. ஜனாதிபதியென்றாலும் தவறு செய்தால் அது தவறுதான். அதைநாம் தவறு என்றே தெரிவிக்க விரும்புகின்றோம்.

ஜனாதிபதி அவ்வாறு செய்யாமல் இருந்திருக்க முடியும். அந்த செயற்பாட்டிற்காக நாம் கட்சியென்ற ரீதியில் எமது எதிர்ப்பைத் தெரிவிக்கிறோம் என்றும் அவர் குறிபபிட்டுள்ளார்.

## தென்பகுதி கடல் பகுதி...

பாதாளக்குழுவைச் சேர்ந்த குற்றவாளிகள் இருவரே இந்த போதைப்பொருளை ஓடர் செய்துள்ளனர். இது தொடர்பில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கிணங்க இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி சந்தேக நபர்கள் இருவரும் பூசா அதிபாதுகாப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், கையடக்கத் தொலைபேசிகளை உபயோகித்து போதைப்பொருள் வர்த்தகங்களில் ஈடுபட்டு வந்ததாக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

படையினரின் அதி தீவிர கண்காணிப்பை அடுத்தே, இவ்விருவரும் பெருந்தொகை போதைப்பொருளை ஓடர் செய்திருந்த தகவல் கிடைத்தது.

தெவுந்தர தமிழ் என்பவர் நாட்டிலுள்ள பாரிய வர்த்தகராவாரென பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு தெரிவிக்கின்றது. பாகிஸ்தானிலுள்ள போதைப்பொருள் வர்த்தகர் ஒருவரினால் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருள் ஆயிரம் கிலோ அல்லது அதற்கு அண்மித்த தொகையைக் கொண்ட படகு இலங்கையிலுள்ள

வர்த்தகர்களுக்கு வழங்குவதற்காக இலங்கையை அண்மித்த சர்வதேச கடல் எல்லையில் கொண்டுவரப்பட்டள்ளது. இந்நிலையில் அதில் ஒரு பகுதியே நேற்று முன்தினம் ஆழ்கடல் மீன்பிடிப்படகொன்றில் கொண்டுவரப்பட்டிருந்தது.

கைப்பற்றப்பட்டதைத் தவிர, மீதமானவை வேறு போதைப்பொருள் வர்த்தகர்களின் ஓடர்களுக்க இணங்க வேறு படகுகளில் ஏற்றப்பட்டுள்ளதாகவும் சந்தேகிக்கப்படுகிறது.

இதில் ஒரு படகை இன்று அல்லது நாளை கைப்பற்ற முடியும் என்றும் அந்த நடவடிக்கைகளில் கடற்படையினர் மும்முரமாக ஈடுபட்டு வருவதாகவும் படையினர் தெரிவிக்கின்றனர்.

அந்தப் படகுகளில் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்ட தொகையை விட அதிகளவு போதைப் பொருட்கள் இருக்கலாம் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது.போதைப் பொருட்களை கைப்பற்றிய படையினர் சந்தேகத்தின் பேரில் ஐவரை கைது செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மின்சார சபை மறுசீரமைப்புக்கான...

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கடந்த வாரம் மின்சார சபைக்கு அனுமதி அளிக்கப்பட்டது. இதன்படி, ஒக்டோபர் 21 ஆம் திகதி முதல், எதிர்வரும் சில மாதங்களுக்கு தற்போதுள்ள மின் கட்டணத்தை சுமார் 18 % சதவீதத்தால் அதிகரித்துள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம்,கட்டண மறுசீரமைப்பு தொடர்பில் அரசாங்கம் கொள்கை ரீதியான முடிவை எட்டியது. எந்தவொரு அரச நிறுவனமும் திறைசேரியின் ஊடாக பணத்தைப் பெற்று அதன் நட்டத்தை ஈடுகட்ட முடியாது. அதன்படியே, மின்சார சபைக்கும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் விசேட விலைச் சூத்திரம் தயாரிக்கப்பட்டது.

மின்சார சபை மின் கட்டணத்தை ஒரு வருடத்தில் இரண்டு முறை மட்டுமே திருத்தம் செய்ய முடியும் என்ற தவறான கருத்து மக்கள் மத்தியில் உள்ளது. ஆனால்,அவசர நிலைமையில் மின் கட்டணத் திருத்தத்தைக் கோரும் உரிமை மின்சார சபைக்கு உள்ளது. இதற்கு அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அந்த முறையைப் பயன்படுத்தியே இந்தத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், மின்சார சபை மறுசீரமைப்பு தொடர்பான சட்ட மூலம், சட்ட வரைஞர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. சட்ட வரைஞர் அலுவலகம் அதனை ஆய்வு செய்த பின்னர், அதனை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளது. அதற்கான பணிகளை இந்த வாரத்தில் முன்னெடுக்க நடவடிக்கை எடுப்பதாக கடந்த செவ்வாய்கிழமை சட்ட மா அதிபர் எனக்கு அறிவித்தார். அதன் பின்னர் அடுத்த வாரம் மறுசீரமைப்பு குறித்த சட்ட மூலம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்.

மேலும், தற்போது மழைவீழ்ச்சி அதிகமாக உள்ளதால் இந்தக் கட்டணத் திருத்தம் தேவையா? என்று பலர் கேள்வி எழுப்புகின்றனர். ஆனால், நான் பிரதிநிதித்துவப்படுத்தும் மாத்தறை மாவட்டம் உட்பட காலி மற்றும் கம்பஹா மாவட்டங்கள் என்பன அதிக மழை காரணமாக வெள்ள நிலைமையை எதிர்கொண்டன. ஆனால் நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் சமனலவெவ, விக்டோரியா மற்றும் ரந்தெனிகல ஆகிய பிரதான நீர்த்தேக்கங்கள் உள்ள பிரதேசங்களில் வழமையான மழைவீழ்ச்சியை இம்முறை நாங்கள் காணவில்லை.

இன்றைய நிலவரப்படி, நமது நீர்த்தேக்கங்களின் கொள்ளளவில் 65.81% மட்டுமே மின் உற்பத்திக்காக பயன்படுத்த முடியுமாக உள்ளது. கடந்த வருடங்களுடன் அதனை ஒப்பிட்டுப் பார்த்தால், 2022 ஒக்டோபர் 22 ஆம் திகதி, அப்போது நீர்த்தேக்கங்களின் அளவு 84.41% ஆக இருந்தது. அதன்படி, நீர்த்தேக்கங்களின் நீர் கொள்ளளவில் சுமார் 20% வீத வித்தியாசம் உள்ளது.

## ஷம்மி கோரிய இடைக்கால...

ஆலோசனை அடிப்படையில் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ரமேஷ் டி சில்வா, ஜனாதிபதி சட்டத்தரணி குவேரா டி சில்வா மற்றும் சட்டத்தரணி பசிந்து பண்டார ஆகியோர் நீதிமன்றில் ஆஜராகினர்.

பிரதிவாதியான அர்ஜுன ரணதுங்க சார்பாக சட்டத்தரணி நிரோஷா ஹேரத்கே ஆலோசனை அடிப்படையில் அமா கருணாரத்ன, சத்துசலா ஜயசிங்க மற்றும் பிரசாத் சிறிமான்ன ஆகிய சட்டத்தரணிகளுடன் சிரேஷ்ட சட்டத்தரணி பண்டார ஹேரத் ஆஜராகியிருந்தார்.

இந்த அவதூறு தொடர்பில், இலங்கை கிரிக்கெட் அணித் தலைவர் ஷம்மி சில்வா 2021 மே மாதம் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்கவிடம் ஆறு பில்லியன் ரூபா இழப்பீடு கோரி வழக்கு தொடுத்திருந்தார்.

ஷம்மி சில்வாவுக்கு எதிராக வீடியோமூலம் அர்ஜுன் ரணதுங்க ஊழல் குற்றச்சாட்டு சுமத்தியதற்கு எதிராகவே, இவ்வழக்கு தொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பிரதமர் மோடியை சந்திக்க...

கூட்டணியின் பொதுச்செயலாளரும், யாழ். மாவட்டபாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு உட்பட அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இந்தியப் பிரதமரை தமிழ் கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக சந்தித்து விடயங்களை தெளிவுபடுத்த உள்ளதாக விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

உயிர் அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியாக கடமையாற்றிய ரி.சரவணராஜா வெளியேறிய விவகாரம் உள்ளிட்ட தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக கொழும்பில் உள்ள இராஜதந்திரிகளின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

இதற்கென இவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையிலான தனித்தனி கடிதங்களும் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். இக்கடிதங்களில் கையெழுத்திடுவதற்கு கடந்தவாரம் நடந்த சந்திப்பில் அரெசியல் தலைவர்கள் இணங்கியதாகவும் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இதற்கமைவாக குறித்த கடிதங்களில் கட்சித் தலைவர்கள் கையொப்பமிட்டு ஒரு சில நாட்களில் இப்பணி பூர்த்தியாகும் என, எதிர்பார்ப்பதாகவும் சி.வி.விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

## வங்காள விரிகுடா தாழமுக்கம்...

வெளியிட்டுள்ள வானிலை அவதான நிலையம் கடும் காற்று மற்றும் கடல் பிரதேசங்களில் பெரும் அலைகள் காணப்படுவதால் அவதானமாக செயற்படுமாறு கடற்றொழிலாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

அதற்கிணங்க மத்திய – மேற்கு வங்காள விரிகுடா கடற்பிரதேசத்தில் பயணிக்கும் ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் அவதானத்துடன் செயற்படவேண்டுமென்றும் அந்நிலையம் தெரிவித்துள்ளது.

அங்கு நிலவும் தாழமுக்கம் எதிர்வரும் 12 மணித்தியாலங்களில் சூறாவளியாக மாறி, பங்காளதேஷ் கடற்பகுதியை நோக்கி பயணிக்கும் என எதிர்பார்ப்பதாகவும்

அந் நிலையம் தெரிவித்தது.

இந்த வகையில் வடக்கு, மேற்கு கடற்பகுதிகளில் 4045 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசலாம் என்றும் அந்தக் கடற்பகுதியில் கடும் காற்று, இடியுடன்

கூடிய மழை மற்றும் பாரிய அலைகள் உருவாகக்கூடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## கட்டாரிலிருந்து இலங்கை திரும்பிய...

கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மொரட்டுவை பிரதேசத்தின் கோரலவெல்லை பகுதியைச் சேர்ந்த, குருகே பிரியங்கிகா தில்ஹானி பெர்னாண்டோ என்ற 40 வயதுடைய திருமணமாகாத பெண்ணாவார். இவர்,நேற்று காலை 01.17 மணியளவில் கட்டாரின் டோஹாவிலிருந்து கட்டார் ஏர்வேஸ் விமானமானத்தில் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்து கொண்டிருந்த நிலையில்,மரணமடைந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

## 23 கோடி ரூபா கொக்கெய்னுடன்...

விமான நிலைய சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவினர் கைது செய்துள்ளனர். இதன் பெறுமதி சுமார் 23 கோடி ரூபாவென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதை,42 வயதுடைய இந்தோனேசிய பெண்ணொருவரே நாட்டுக்குள் கொண்டு வந்துள்ளார். இப்பெண் எத்தியோப்பியாவின் அடிஸ் அபாபாவிலிருந்து கட்டாரூடாக இலங்கைக்கு வந்துள்ளார்.

ஆங்கில சிறுவர் கதைப் புத்தகங்களின் அட்டைகளுக்கு இடையில் நுட்பமான முறையில் மறைத்து வைத்து 4,598 கிராம் கொக்கைன் போதைப்பொருளை இவர் கொண்டு வந்துள்ளார் .

நேற்று முன்தினம் மதியம் 04.10 மணியளவில் QR 654 என்ற Qatar Airways விமானத்தில், இவர் நாட்டை வந்தடைந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ரவிராஜைக் கொலை செய்தவரை...

ஆஸாத் மௌலானா உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் மட்டுமல்லாமல் பல்வேறு விடயங்களைப் பகிரங்கமாக கூறியுள்ளார். அதில் அவர் கூறிய விடயங்கள் சம்பந்தமாக வீடியோ ஒன்றை சனல் 04 வெளியிட்டுள்ளது.

அது உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விடயங்களுடன் வரையறுக்கப்பட்டிருந்தது. இத்தாக்குதல் 2019 இல், இடம்பெற்றது.

ஆனால், கடந்த 2005 ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் பல்வேறு கருத்துக்களையும் ஆஸாத் மௌலானா கூறியிருக்கின்றார். அந்தக் கருத்துக்கள் மூன்றாவது நபர் மூலமாக எனக்கும் வந்து சேர்ந்திருக்கிறது.

எனினும், அது சம்பந்தமான முழுமையான தகவல்கள் வரும் வரையில் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆனாலும், எனக்கு வந்திருக்கும் தகவலில் நண்பர் ரவிராஜைக் கொலை செய்தது யார், கொலைக்கு உத்தரவிட்டது யார்?, அதிலும் முதல் உத்தரவு கடைசி உத்தரவு என இந்த உத்தரவுகளை பிறப்பித்தது யார்? என்பது சம்பந்தமாக எல்லாம் கூறியுள்ளார்.

ஆனாலும் இந்த விடயங்கள் தொடர்பில் முழுமையான தகவல்கள் வரும் வரையில் பொறுத்திருக்கிறேன்.

அனைத்தும் வந்த பின்னர் முழுமையாக வெளிப்படுத்தத் தயாராகவுள்ளேன். இது தான் உண்மை என்றார்.

# இன்றைய பலன்கள்


கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)




**மேஷம்:**
கவலை தீரும். தொழில் மேன்மையாக இலாபகரமாக நடைபெறும்.எந்த வேலையும் கடின உழைப்புக்குப் பின்தான் பலம் தரும்.



**ரிஷபம்:**
அரசாங்க காரியங்கள் சாதகமாக முடியும். புதிய வீடு, மனை வாங்கும் யோகமும் உண்டு. கலைத் துறையில் உள்ளவர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.




**மிதுனம்:**
வீடு கட்டும் பணிகள் விரைவாக முடியும். புதிய மனை வீடு வாங்கும் யோகம் ஏற்படும். எந்த பிரச்சினைகளையும் தைரியத்துடனும் சாதுரியமாகவும் சமாளிப்பீர்கள்.



**கடகம்:**
அரசாங்க காரியங்கள் சாதகமாக முடியும். பேச்சில் துணிச்சல் இருக்கும். வெளிநாடு செல்ல விரும்புபவர்களுக்கு நல் வாய்ப்புக்கள் கிடைக்கும்.



**சிம்மம்:**
உங்கள் மதிப்பும் கௌரவமும் அதிகரிக்கும். முக்கியஸ்தர்களின் நட்பு கிடைக்கும். அரசியல்வாதிகள் உதவுவார்கள்.



**கன்னி:**
உங்கள் சந்தோசம் அதிகரிக்க செய்யும். புதிய ஆடை ஆபரணச் சேர்க்கை ஏற்படும். சுபச் செலவுகள் கூடும்.



**துலாம்:**
பண வரவு தாராளமாக இருக்கும். தொழில்கள் நன்றாக நடக்கும். அரசாங்க ஆதரவும் உண்டு. தெய்வ தரிசனம் உண்டு.




**விருச்சிகம்:**
அரசாங்க அனுகூலம் உண்டு. வீடு மனை வாங்கும் யோகம் உண்டு. வெளிநாட்டு வேலை திருப்தியாக இருக்கும்.




**தனுசு:**
பதவி உயர்வும் சம்பள உயர்வு கிடைக்கும் வாய்ப்புண்டு. வெளிநாட்டு வேலை கிடைக்கும். கணவன் மனைவி உறவுகள் நல்லவிதமாக இருக்கும்.



**மகரம்:**
உத்தியோகத்தில் புதிய திருப்பம் காண்பர். சிலருக்கு பதவி உயர்வோடு வெளியூர் மாற்றம் கிடைக்கக் கூடும் .



**கும்பம்:**
நினைத்த காரியங்கள் நிறைவேறும். கணவன் மனைவி உறவுகள் அன்பு கொண்டதாக இருக்கும். நண்பர்களால் ஆதாயம் உண்டு.



**மீனம்:**
ஆழ்ந்து உங்கள் மனது சொல்வதைக் கேளுங்கள் அவசரமோ படபடப்போ வேண்டாம். பணப் பற்றாக்குறை இருக்காது.



## வெளிநாடுகளுக்கு... 03ஆம் பக்கத் தொடர்

என்பது விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இலங்கையர்களை தமிழ்நாட்டிற்கு கொண்டுவந்து வேறு நாடுகளிற்கு அனுப்பும் முயற்சிகளில், இவர் ஈடுபட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு இராமநாதபுரத்தை சேர்ந்த இவர் நீண்ட காலமாக கடத்தல் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டமை விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு சென்ற இலங்கையர்கள் சிலர், மங்களூரில் ஆவணங்களின்றி தங்கியிருந்த நிலையில், கைது செய்யப்பட்டனர்.இதையடுத்தே இவ் விடயம் தெரியவந்துள்ளது. 2021 ஜூன் மாதம் மங்களூரில் 38 இலங்கையர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

## ஆசிய பிராந்திய நிலைபேறான மாநாடு...

03ஆம் பக்கத் தொடர்

ஐக்கிய நாடுகளின் பிராந்திய அபிவிருத்தி மத்திய நிலையம், மலேசிய போக்குவரத்து அமைப்பு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பவற்றால் ஏற்பாடு செய்யப்படும்' முதலாவது ஆசிய பிராந்திய ரயில்வே மாநாட்டில்' விசேட அதிதியாக போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன கலந்துகொண்டார்.

உலகின் பல நாடுகளைச் சேர்ந்த ஏராளமான பிரதிநிதிகள் பங்கேற்கும் இம்மாநாடு மலேசியாவின் கோலாலம்பூரில் இம்மாதம் 26 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

## தோட்டத் தொழிலாளர்களுக்கு...

வருடம் முழுவதும் தொழிலாளர்கள் கடுமையாக உழைக்கின்றனர். வருடம் முழுவதும் கம்பனிக்காக உழைக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாமான முறையில் தீபாவளி கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும். இவ்விடயதை வலியுறுத்த இ.தொ.கா பின்வாங்காது.

தீபாவளி விசேட கொடுப்பனவு வழங்குவது குறித்து நேற்று அறிவிப்பதாக கம்பனி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது .

## தொடர் மழையால்...

சுகாதாரப் பழக்க வழக்கங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென, இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.

## மட்டு. சொகுசு பஸ்ஸுடன்...

கட்டுநாயக்கா பகுதியில் நேற்று முன்தினம் இரவு (22) இக் கோர விபத்து இடம்பெற்றது.இவ்விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த இருவரும் சம்பவ இடத்திலேயே பலியானதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## அமைச்சர்களான ஹரீன்...

தமது கட்சி அங்கத்துவத்தை இல்லாதொழிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி மேற்கொண்ட தீர்மானம் சட்டத்திற்கு முரணானது என தெரிவித்து உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரியே இவர்கள் இந்த மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

மேற்படி மனுமீதான விசாரணை நேற்றைய தினம் (23) விஜித்மலல்கொட, காமினி அமரசேகர மற்றும் அர்ஜுண ஒபேசேகர ஆகியோரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போதே நீதிமன்றம் இந்த விசாரணையை ஒத்தி வைத்தது.

நேற்றைய தினம் இந்த மனுமீதான விசாரணை நீதிமன்றத்தில் இடம்பெற்ற போது அமைச்சர்களான ஹரீன் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

மனுதாரர்கள் தமது மனுவில், எந்தவித நீதியான விசாரணைகளுமின்றி தமது கட்சி அங்கத்துவத்தை ஐக்கிய மக்கள் சக்தி நீக்குவதற்கு எடுத்துள்ள தீர்மானம் முற்றாக சட்டத்திற்கு முரணானது எனக்குறிப்பிட்டனர்.

இந்தவகையில் இந்த தீர்மானம் சட்டத்திற்கு முரணானது என குறிப்பிட்டு நீதிமன்றம் தீர்ப்பளிக்கவேண்டுமென்றும் அமைச்சர்கள் இருவரும் நீதிமன்றத்தை கேட்டுக் கொண்டனர்.

# வரங்களின் களஞ்சியம் திருச் செபமாலை






அக்டோபர் மாதத்தை செபமாலை மாதமாக திருச்சபை சிறப்பிக்கின்றது. செபமாலையின் மகத்துவத்தை நமக்கு நாமே நினைவுபடுத்தி அதிக விசுவாசத்துடன் செபமாலையை குடும்ப வெற்றிமாலையாகக் கருதி செபிக்க இந்த மாதம் நம் அனைவரையும் திருச்சபை அழைக்கிறது.





வீட்டில் குடும்ப செபமாலை சொல்வதுண்டா என்ற கேள்வி அவ்வப்போது, மறையுரை வேளையில் குருக்களால் கேட்கப்படுகின்றன. இதற்கு பெரும்பாலானோர் சொல்லும் பதில் இல்லை என்பதே! ஏன் செபமாலை சொல்வதில்லை என்பதற்கும் நம்மிடம் ஏராளமான பதில்கள் இருக்கின்றன.

★ நேரமில்லை சோம்பேறித்தனம்
★ குடும்பத்தார் ஒத்துழைப்பதில்லை
★ இளையோர் ஆர்வம் காட்டுவதில்லை
★ வேலைப்பளு என சாக்குப் போக்குகளின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது..

“செபமாலை மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதமாகும். அதை நம்பிக்கையுடன் பயன்படுத்தினால் ஆச்சரியத் தக்க பலன்களைப் பெற முடியும்”

புனித ஜோஸ் மரிய எஸ்க்ரிவா “செபமாலை கடவுள் நமக்கு கொடுத்த விலைமதிப்பில்லாத புதையல்” எனகின்றார். புனித லூயிஸ் தெ மோண்டபோர்ட்.

“செபமாலை செபிக்கும் ஒரு இராணுவத்தை என்னிடத்தில் கொடுங்கள். உலகத்தை நான் ஜெயித்துக் காட்டுவேன்” – புனித 9ஆம் பத்திநாதர்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள புனிதர்களின் வார்த்தைகள் அவர்களின் விசுவாசத்தில் ஊற்றெடுத்தவை. இது அவர்களின் வாழ்வின் அனுபவம். இதே வாழ்வு அனுபவத்தை மரியாயின் பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொருவரும் பெற்றிருக்கிறோம்.

இந்த விசுவாச அனுபவத்தை மற்றவர்களுக்கு பறைசாற்றுவோம். குறிப்பாக நமது குடும்பத்தாருக்கு இந்த இறை அனுபவத்தை வழங்குவது அவசியம்.

ஏராளமான வரங்களின் களஞ்சியமாக செபமாலை திகழ்கிறது. செபமாலை செபித்து உடல் உள நலன்கள் பெற்றவர்கள் ஏராளம்.

வாழ்வின் குழப்பங்கள் தீர்ந்து தெளிவடைந்தவர்கள் ஏராளம். குழந்தை வரம் பெற்றவர்கள், திருமண வரம் பெற்றவர்கள் என செபமாலை செபித்து நலன்களால் நிரப்பப்பெற்றவர்கள் ஏராளமானோர் உள்ளனர்.

நாமும் பல வரங்களை செபமாலையின் வழியாக தாராளமாகவே பெற்றிருக்கிறோம். நாம் பெற்ற வரங்கள் நமது நம்பிக்கையை ஆழப்படுத்தட்டும். மற்றவர்களின் நம்பிக்கையை வளர்த்தெடுக்க உதவி செய்யட்டும். “ மாலுமிகள் கரைசேருவதற்கு விடிவெள்ளி வழிகாட்டுவது போல கிறிஸ்தவர்கள் விண்ணகம் செல்வதற்கு மரியாள் வழிகாட்டுகிறார்” என புனித தோமஸ் அக்குவினாஸ் குறிப்பிடுகிறார்.

ஓவ்வொரு மறைபொருளையும் நம் வாழ்வோடு பொருத்திப் பார்த்து தியானிக்கின்ற போது நம் வாழ்வு செல்லும் பாதை நமக்கு வெட்ட வெளிச்சமாய் நம் கண்களுக்குத் தெரிய வருகின்றது. மேலும் எந்த பாதையில் நாம் பயணிக்க வேண்டும் என்ற தெளிவும் நமக்கு கிடைக்கின்றது.

ஒவ்வொரு நாளும் செபமாலையை அன்புடனும், விசுவாசத்துடனும் செபித்தால் மரியாள் நம்மை அவருடைய மகனின் பாதையில் வழிநடத்திச் செல்வார் என்பது ஜோஸ் மரியா எஸ்க்ரிவா என்ற புனிதையின் கூற்று.

இத்தகைய மேலான வல்லமை மிக்க செபமாலையை குடும்பமாக நாம் செபிக்க, மற்றவர்களை செபிக்க வைக்க உறுதி ஏற்போம். ஒரு நாளைக்கு ஒரு செபமாலை சொன்னவர்கள் அதை இரண்டாகவும், இரண்டு சொல்லிக்கொண்டிருப்பவர்கள் அதை மூன்றாகவும், மூன்று வேளை சொல்பவர்கள் அதை நான்கு வேளையாக மாற்றி அளப்பரிய ஆற்றலை நாம் பெற்று நம்மைச் சார்ந்த நம் குடும்பத்தார், நாம் சந்திக்கும் குடும்பங்கள் நமது சமூகம் மற்றும் நாடும் பெற்றிட செபமாலை அன்னையை மன்றாடுவோம்.

**அருட்பணி பென்சிகர் லூசன்**

# புனிதர்கள் சீமோன், யூதா திருவிழா

## அக்டோபர் 28 ல் திருச்சபை சிறப்பிக்கின்றது

கத்தோலிக்கத் திருச்சபையானது புனித சீமோன் மற்றும் யூதா ததேயு ஆகியோரின் திருவிழாவைக் எதிர்வரும் அக்டோபர் 28 ஆம் திகதி கொண்டாடுகின்றது. இவர்களது விழாவைக் கொண்டாடும் இத்தருணத்தில் அவர்களின் வாழ்வும் பணியும் நமக்கு சிறந்த அனுபவங்களைத் தருகிறது.

திருத்தூதர் சீமோனைக் குறித்து விவிலியத்தில் திருதூதர்கள் அட்டவணையைத் தவிர்த்து வேறு எங்கும் காணகிடைக்கவில்லை.

மாற்கு மற்றும் மத்தேயு நற்செய்தி நூல்களில் இவர் கனானியன் எனவும், லூக்கா நற்செய்தியில் தீவிரவாதி எனப்பட்ட சீமோன் எனவும் அழைக்கப்படுகின்றார்.



இயேசு வாழ்ந்த காலத்தில் யூதர்களை ஆண்டுவந்த ரோமானியர்களுக்கு எதிரான கலகம் அவ்வப்போது வெடித்துக்கொண்டே இருந்தது. இப்படி கலகம் செய்தவர்களை ரோமானியர்கள் ‘தீவிரவாதிகள்’ என்று அழைத்தார்கள். இந்த ‘தீவிரவாதிகள்’ தங்களை ஆண்டுவந்த ரோமானியர்களின் அதிகாரத்தை முறியடித்து, யூதர்களின் ஆட்சியை நிலைநிறுத்தப் பார்த்தார்கள். அதோடு மட்டுமல்லாமல் ரோமானியர்களின் கைக்கூலிகளாகச் செயல்பட்ட ஒருசில யூதர்களுக்கு எதிராகவும் இவர்கள் கிளர்ந்தெழுந்தார்கள். ஆனால் இத்தகைய ‘தீவிரவாதிகள்’ ரோமானியர்களால் அழித்தொழிக்கப்பட்டார்கள் என்பதே உண்மை.

இயேசு ரோமானியர்களின் அதிகாரத்தை முறியடித்து, யூதர்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தருவார் என்ற நம்பிக்கையில்தான் தீவிரவாதியான சீமோன் இயேசுவின் குழுவில் சேர்ந்தார் ஆனால் இயேசு நாட்டிற்காக தன்னுடைய உயிரைத் தர நினைத்த சீமோனை, நற்செய்திக்காக தன்னுடைய இன்னுயிரைத் தரச் செய்கிறார்.

திருத்தூதரான தூய சீமோன் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்புக்குப் பிறகு தொடக்கத்தில் எகிப்து நாட்டிலும், அதன்பின்னர் பெர்சியா நாட்டில் நாட்டிலும் நற்செய்தி அறிவித்து அங்கேயே மறைசாட்சியாக உயிர்துறந்தார் என்று நம்பப்படுகின்றது.

தூய யூதா ததேயு கைவிடப்பட்டோர் மற்றும் அனாதைகளின் பாதுகாவலாராக இருக்கின்றார். இவர் இந்த மண்ணுலகில் வாழ்ந்தபோது கைவிடப்பட்டோர் மற்றும் அனாதைகளின் மீது அதிகமான அக்கறைகொண்டு வாழ்ந்திருக்கவேண்டும். அதனால் தான் அவர் அம்மக்களுக்கு பாதுக் காவலராக இருக்கின்றார். இன்றைக்கும் நாம் கைவிடப்பட்டோர் மீதும், அனாதைகளின் மீதும் அதிகமான அன்பும் அக்கறையும் கொண்டு வாழ்கின்றோமா? என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். இறுதித் தீர்ப்பின்போது இயேசு, “நான் அந்நியனாய் இருந்தேன், என்னை ஏற்றுக்கொண்டாயா? என்றுதான் கேட்கின்றார். ஆகவே நாம் இப்படிப்பட்ட மக்கள்மீது அன்பும், அக்கறையும் கொண்டு வாழ்வோம்.

**மிலியன் ஜேம்ஸ்**

# மருதமடு திருத்தலத்தில் செபமாலை பேரணி







மருதமடு திருத்தலத்தின் தேசிய செபமாலை பேரணி கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம் பெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை,குருநாகல் மறை மாவட்ட ஆயர் ஹெரல்ட் அன்ரனி பெரேரா ஆண்டகை, கொழும்பு மறை மாவட்ட துணை ஆயர் மெக்ஸ்வல் டி சில்வா ஆண்டகை, அநுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபர்ட் அன்றாடி ஆண்டகை ஆகியோரினால் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலியை தொடர்ந்து திருச் செபமாலை பவனி இடம் பெற்றதுடன் நாட்டின் பல பாகங்களிலும் இருந்து பக்தர்கள் இந்த சிறப்பு செபமாலை பவனியில் கலந்து கொண்டனர்.
(படங்கள்: லெம்பர்ட் ரொஷாரியன் (மன்னார் குரூப் நிருபர்))

# "சீசருக்கு உரியவற்றை சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்"

அவரவருக்கு உரியது அவரவருக்குக் கொடுக்கப்பட்டால் இந்த மண்ணகம் விண்ணகமாக மாறிவிடும் என்பது உறுதி. ஆனால், அவரவருக்கு உரியது அவரவருக்குக் கிடைக்காமல் இருப்பதால்தான் உலகம் சிறிது சிறிதாக நரகமாக மாறி வருகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

“சீசருக்கு உரியவற்றை சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்” என்ற புகழ்பெற்ற வரிகளை இந்த நற்செய்தியின் இறுதியில் இயேசு தெரிவிக்கின்றார்.

விவிலியம், கிறிஸ்தவம் என்ற எல்லைகளைத் தாண்டி பொருளாதாரம், அரசியல் என்ற பல சூழல்களில் மேற்கோளாகப் பயன்படுத்தப்படும் ஒரு புகழ்பெற்ற வாக்கியம் இது. இயேசு கூறிய இப் புகழ் மிக்கக் கூற்றையும் அவர் ஏன் அவ்வாறு சொன்னார் என்பதையும், இந்த ஞாயிறு நமது சிந்னைக்குத் தருகிறது.

சீசருக்கும் கடவுளுக்கும் பொதுவாக யாருக்குமே அவரவருக்கு உரியதைக் கொடுங்கள் என்று இயேசு எப்போதும் சொல்லி வந்தார். இயேசு சொன்ன இந்த உண்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் யார்? மதத்தையும் கடவுளையும் தங்கள் தனிச் சொத்தாகப் பாவித்து மக்களுக்கு உரிய கடவுளை அவர்களுக்குக் கொடுக்க மறுத்த பரிசேயர்களும் மதத் தலைவர்களும் இயேசு சொன்ன இந்த உண்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள்.

கடவுளுக்கு உரியதை கடவுளுக்கே வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்த இயேசு அவர்களிடம் பல உவமைகளைக் கூறினார். இந்த உவமைகள் வழியே இயேசு உணர்த்த விரும்பிய உண்மைகளை பரிசேயர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்கள் எண்ணம், கவனம் எல்லாம் இயேசுவுக்கு உரிய மரியாதையை அவருக்கு வழங்கக்கூடாது என்பதில் மட்டுமே இருந்தது.

மத்தேயு நற்செய்தி 22ஆம் அதிகாரத்திலிருந்து நமக்கு வழங்கப்பட்டுள்ள ஞாயிறு நற்செய்தியை மேலோட்டமாகப் பார்த்தால் எளிய ஒரு நிகழ்ச்சியைப் போல் தெரிகிறது. ஆனால், இந்நிகழ்வின் பின்னணியில் புதைந்திருக்கும் அடுக்கடுக்கான பல அம்சங்களை அலசினால் பல உண்மைகளை, பல பாடங்களை நாம் பயிலமுடியும்.

கடந்த மூன்று வாரங்களாக இயேசு தன் உவமைகள் வழியே கசப்பான உண்மைகளை பரிசேயர்களுக்கு உணர்த்த முயன்றார். அந்த உண்மைகளை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக பரிசேயர்கள் இயேசுவை எப்படியாவது சிக்க வைத்துவிடும் குறிக்கோளுடன் மற்றொரு குழுவினரையும் தங்களுடன் சேர்த்துக் கொள்கின்றனர். அவர்கள்தான் ஏரோதியர்கள்.




பரிசேயர்களும், ஏரோதியர்களும் கொள்கையளவில் எதிரிகள். யூத குலத்தில் கடவுளுக்கு மிகவும் பிரமாணிக்கமாய் இருப்பவர்கள் தாங்கள் மட்டுமே என்று எண்ணி வந்தவர்கள் பரிசேயர்கள்.

எனவே, கடவுளின் அதிகாரத்திற்கு சவால் விடும் வகையில் அமைந்திருந்த உரோமைய ஆட்சியையும் பேரரசரான சீசரையும் முற்றிலும் வெறுத்தவர்கள் பரிசேயர்கள்.

ஏரோதியர்கள் இதற்கு முற்றிலும் மாறுபட்டவர்கள். யூத சமுதாயத்தின் பச்சோந்திகள் என்று அழைக்கப்பட்ட இவர்கள் சீசருக்குச் சாமரம் வீசிய ஏரோதுடன் இணைந்து உரோமைய அரசுக்குச் சாதகமாகப் பணிகளை செய்தனர். கொள்கையளவில் இரு வேறு துருவங்களாக பகைவர்களாக இருந்த பரிசேயர்களும், ஏரோதியரும் சேர்ந்து விட்டனர். காரணம்? இவர்கள் இருவருக்கும் ஒரு பொதுவான எதிரி இருந்தார். அவர்தான் இயேசு.

ஏரோதியர்கள் முழுமையான அரசியல்வாதிகள். பரிசேயர்கள் தங்களை மதத்தலைவர்கள் என்று கருதுபவர்கள். அரசியலும், மதமும் இணைந்து இயேசுவை ஒழிக்க திட்டமிடுகின்றன.

அதிகாரத்தை, சுயநலத்தை காத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் எழும்போது, கொள்கைகளை மூட்டைகட்டி வைத்துவிடும் அரசியல் பச்சோந்திகளைப் போல், நாமும் வாழ்வில் அவ்வப்போது நிறம் மாறுகிறோமா என்ற கேள்வியை எழுப்புவது அவசியம்.

குறிப்பிட்ட ஒருவரைப் பழிவாங்குவதற்காக அல்லது அவரை வெல்வதற்காக நம் மனசாட்சியை அடமானம் வைத்த நேரங்கள் எத்தனை எத்தனை? இக்கேள்விகளுக்கு உண்மையான விடைகள் தேடினால் நம் வாழ்விலும் அரசியல் எவ்வளவு தூரம் ஊடுருவியுள்ளது என்பது தெளிவாகும்.

கொள்கைகளைப் புறந்தள்ளிவிட்டு, கூட்டணி சேர்ந்து வரும் பரிசேயர்கள் மற்றும் ஏரோதியர்களுடன் இயேசு மேற்கொண்ட உரையாடல் நமக்கு சிறந்த பாடம். இயேசுவை வீழ்த்தும் எண்ணத்துடன் கூட்டணி சேர்ந்துவரும் இவ்விரு குழுவினரும் இயேசுவைப் புகழ்ந்து பேசுவது நம்மை மீண்டும் வெட்கித் தலைகுனிய வைக்கின்றது. உதட்டளவில் புகழ்மாலைகளையும் உள்ளத்தில் நஞ்சையும் சுமந்து வருபவர்கள் இவர்கள்.

இதற்கு முற்றிலும் மாறாக, இயேசு நேரடியாகவே பேசினார். பணிவு என்ற ஆட்டுத் தோலைப் போர்த்தி இயேசுவை வேட்டையாட வந்திருந்த அந்த ஓநாய்களின் வெளிவேடத்தை கலைத்து இயேசு நேரடியாகவே பேசினார்:

மத்தேயு நற்செய்தி 22: 1821

இயேசு அவர்களுடைய தீய நோக்கத்தை அறிந்து கொண்டு, “வெளிவேடக்காரரே, ஏன் என்னைச் சோதிக்கிறீர்கள்? வரி கொடுப்பதற்கான நாணயம் ஒன்றை எனக்குக் காட்டுங்கள்” என்றார். அவர்கள் ஒரு தெனாரியத்தை அவரிடம் கொண்டு வந்தார்கள். இயேசு அவர்களிடம், “இதில் பொறிக்கப்பட்டுள்ள உருவமும் எழுத்தும் யாருடையவை?” என்று கேட்டார். அவர்கள், “சீசருடையவை” என்றார்கள். அதற்கு அவர், “ஆகவே, சீசருக்கு உரியவற்றை சீசருக்கும் கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்” (மத்தேயு நற்செய்தி 22:1821)

என்று அவர்களிடம் கூறினார்.

வரி செலுத்த பயன்படுத்தப்பட்ட 'தெனாரியம்' என்ற நாணயம். அந்த நாணயத்தைப் பார்த்த பின் இயேசு சொன்ன அந்தப் புகழ்மிக்க வார்த்தைகள் ஆகியவை நமக்கு மூன்றாவது பாடமாக அமைகின்றன. 'தெனாரியம்' என்ற அந்த நாணயத்தின் ஒரு புறம், உரோமைப் பேரரசன் சீசரின் உருவமும், "தெய்வீக அகுஸ்து சீசரின் மகன் திபேரியு சீசர்" என்ற வார்த்தைகளும் பொறிக்கப்பட்டிருந்தன. நாணயத்தின் மறுபக்கம் 'Pontifex Maximus' அதாவது ‘குருக்களுக்கெல்லாம் பெருங்குரு’ என்ற வார்த்தைகளும் பொறிக்கப்பட்டிருந்தன. இவ்வாறு சீசர் தன்னை வெறும் அரசியல் தலைவனாக மட்டுமல்லாமல் மதத் தலைவனாகவும் கடவுளாகவும் காட்டுவதற்கு அந்த நாணயங்களை உருவாக்கியிருந்தார்.

சீசருக்கு வரி கொடுப்பதா வேண்டாமா என்று கேட்டவர்களிடம், ‘சீசரின் உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்த நாணயங்களை சீசருக்குக் கொடுங்கள்’ என்று சொன்ன இயேசு, அத்துடன் தன் பதிலை நிறுத்தியிருக்கலாம். ஆனால், இந்த வார்த்தைகளைச் சொன்ன அதே மூச்சில், இயேசு, “சீசருக்கு உரியவற்றை சீசருக்கும், கடவுளுக்கு உரியவற்றைக் கடவுளுக்கும் கொடுங்கள்” என்றார். சீசரையும் கடவுளையும் இணைத்து இயேசு பேசியது அரசியலையும் மதத்தையும் இணைத்து சிந்திக்க நமக்கொரு வாய்ப்பைத் தந்துள்ளது.

மனித வரலாற்றில் மதமும் அரசியலும் மோதிக்கொண்ட காலங்களும், கைகோர்த்து நடந்த காலங்களும் உண்டு. மதநிறுவனங்களில் அரசியல் புகுந்துள்ளதையும் அரசியலுக்கு மதச்சாயங்கள் பூசப்படுவதையும் நாம் அதிகளவில் கண்டு வருகிறோம்.

இந்தச் சூழலில் நமக்கு இன்று இயேசு கூறும் இந்த வார்த்தைகள் மிகவும் தெளிவாக ஒலிக்கின்றன. சீசரின் உருவம் பதித்த நாணயத்தை சீசருக்குத் தருவது போல் கடவுளின் உருவம் பதிந்துள்ள நம்மை (தொடக்க நூல் 1:26) கடவுளுக்கு வழங்க வேண்டும் என்று இயேசு கூறுகிறார். சீசருக்குரியதை இந்த உலகிற்குரியதை நாம் வழங்கித்தான் ஆக வேண்டும். ஆனால், அத்துடன் நம் வாழ்வு, கடமை எல்லாம் முடிந்து விடுவதில்லை. சீசரையும், இவ்வுலகையும் தாண்டிய இறைவன் இருக்கிறார். அவருக்கு உரியதையும் நாம் வழங்க வேண்டும் என்று இயேசு நம்மிடம் இன்று கேட்கிறார். நம் பதில் என்ன?

**அருட்பணி எல்.எக்ஸ்.ஜெரோம்**

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 07ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் ஆகிர் பிறை 08

## குறள் தரும் சிந்தனை



நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாணாள் பவர்

*நாண உணர்வுடையவர்கள், மானத்தைக் காப்பாற்றிக் கொள்ள உயிரையும் விடுவார்கள். உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மானத்தை விடமாட்டார்கள்.*

# அமைதி உருவாக வேண்டுமென்பதே இலங்கையின் உறுதியான நிலைப்பாடு

'இஸ்ரேல்_ ஹமாஸ் மோதலில் பலஸ்தீனின் சாதாரண மக்கள் பாதிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. மோதல்களை நிறுத்தி அமைதியை நிலைநாட்ட ஐக்கிய நாடுகள் சபையினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்திற்கு இலங்கை பூரண ஆதரவை வழங்கும்' என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தின் முசலி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மீலாதுன் நபி விழாவின் தேசிய வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

ஹமாஸ் அமைப்பினர் இம்மாதம் 07 ஆம் திகதி இஸ்ரேலுக்குள் பிரவேசித்து தாக்குதலை மேற்கொண்டனர். அதனைத் தொடர்ந்து கடந்த 16 நாட்களாக இஸ்ரேல்_ஹமாஸ் மோதல் நீடித்து வருகின்றது. இந்நிலையில் காஸாவுக்கான மின்சாரம், உணவு விநியோகம், தண்ணீர் விநியோகம் என்பவற்றை இஸ்ரேல் இடைநிறுத்தியது.

இஸ்ரேல் முன்னெடுத்துவரும் கடும் வான்வழித் தாக்குதல்கள் காரணமாக சமய வழிபாட்டுத் தலங்கள், வைத்தியசாலைகள், ஐ.நா நலன்புரி முகாம்கள், பொதுக்கட்டடங்கள், மக்கள் குடியிருப்புகள் என அனைத்துக் கட்டடங்களும் சேதமடைந்தும் அழிவுற்றும் வருகின்றன.

இம்மோதலின் விளைவாக குழந்தைகள், சிறுவர்கள், வளர்ந்தவர்கள் என எல்லா வயது மட்டத்தினரும் காயங்களுக்கு உள்ளாகி வருவதோடு மரணமடையவும் செய்கின்றனர். நேற்று 23 ஆம் திகதி வரையும் 4600 இற்கும் மேற்பட்ட பலஸ்தீனர்களும் 1400 இற்கும் மேற்பட்ட இஸ்ரேலர்களும் கொல்லப்பட்டுள்ளதாகவும், 12 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இருந்தும்கூட தரைவழி தாக்குதலை முன்னெடுக்கப் போவதாகக் கூறி மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட படையினரை கனரக ஆயுதங்களுடன் காஸா எல்லையில் இஸ்ரேல் நிறுத்தி இருக்கின்றது.

இந்த யுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறு கோரி உலகின் பல நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் இடம்பெறுகின்றன. தாக்குதலையும் மோதல் நிலையையும் உடனடியாக நிறுத்தி அமைதி வழிக்குத் திரும்புமாறு ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலகின் பெரும்பாலான நாடுகள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

இந்நிலையில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஹமாஸ்_ இஸ்ரேல் யுத்தம் குறித்த இலங்கையின் நிலைப்பாட்டை மீண்டும் மன்னார் தேசிய மீலாதுன் நபி விழாவில் வெளிப்படுத்தியுள்ளார்.

பலஸ்தீன்_ இஸ்ரேல் விவகாரம் குறித்து இலங்கை தெளிவான நிலைப்பாட்டில் உள்ளது. அதற்கேற்ப, இந்த யுத்தநிலை உருவானதும் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன் எனும் இரு நாட்டுக் கொள்கைக்கான இலங்கையின் நீண்டகால ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்திய ஜனாதிபதி, இவ்வாறான தாக்குதல்களை நியாயப்படுத்த முடியாது' என்று குறிப்பிட்டிருந்தார்.

அதே நேரம், கடந்த 13 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற இந்து சமுத்திரத்தில் நிபுணத்துவம் பெற்ற சர்வதேச ஆராய்ச்சி நிறுவனமான Geopolitical Cartographer ஏற்பாடு செய்திருந்த மாநாட்டில் உரையாற்றிய அவர், இஸ்ரேல் ஹமாஸ் மோதலுக்கு தீர்வு காண உலகளாவிய ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தினார்.

பலஸ்தீன்-இஸ்ரேல் விவகாரம் தொடர்பில் ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் பலஸ்தீன விவகாரம் தொடர்பிலான சபை ஒத்திவைப்புவேளைப் பிரேரணை மீதான விவாதமும் கடந்த 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் நடைபெற்றுள்ளது.

இவ்வாறான சூழலில் மன்னாரில் நடைபெற்ற தேசிய மீலாதுன் நபி விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி, 'அந்த மக்களின் துயரத்தை நாங்கள் அங்கீகரிக்க முடியாது. அந்த மக்களுக்கு தேவையான உணவுகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். உணவு எகிப்திலிருந்து வழங்கப்படுகின்றது. இஸ்ரேல் பகுதியில் இருந்தும் உணவு வழங்கப்பட வேண்டும். மேலும் தண்ணீர் கொடுக்க வேண்டும். இஸ்ரேல்_ ஹமாஸ் மோதல் ஒரு பிரச்சினை. ஆனால் இப்போராட்டத்தில் சாதாரண பலஸ்தீன மக்கள் பலியாகிவிடக் கூடாது. எனவே அதனைத் தீர்க்க எகிப்து உள்ளிட்ட அரபு நாடுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. மற்ற நாடுகளும் இதற்கு சம்மதம் தெரிவித்துள்ளன. குறிப்பாக இப்பிரச்சினையைத் தீர்த்து அந்தப் பிரதேசங்களில் அமைதியை ஏற்படுத்துவதற்கான ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளரின் செயற்பாடுகளுக்கு, எமது பூரண ஆதரவை வழங்குவோம்' என்றுள்ளார்.

ஆகவே இலங்கை ஜனாதிபதி உட்பட உலகில் அமைதி சமாதானத்தை உண்மையாக விரும்பும் நாடுகளும் தலைவர்களும் விடுக்கும் அழைப்பும் கோரிக்கையும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். பலஸ்தீனில் அமைதி, சமாதானம் உருவாக வேண்டும். அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும். அதுவே அனைத்து மக்களதும் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# மாத்தளை வெள்ளைக்கல் அருள்மிகு அழகர் பெருமாள் கோயில் கும்பாபிஷேக பெருவிழா

சுமார் 150 ஆண்டுகள் பழைமை வாய்ந்த மாத்தளை வெள்ளக்கல் அருள்மிகு அழகர் பெருமான் திருக்கோவில் புனராவர்த்தன அஸ்தபந்தன பஞ்சகுண்டபக்ஷ திருக்குடமுழுக்கு பெருசாந்தி விழா எதிர்வரும் 27ம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறும்.

அழகர் பெருமாள் திருக்கோவில் தமிழ்நாட்டின் மதுரைக்கு அருகில் உள்ள அழகர்மலையில் திருமலிலுஞ்சோலையில் உள்ளது. இவ்வகையில் விஷ்ணுவிற்கு அர்ப்பணிக்கப்பட்ட திருக்கோவில் மத்திய மாகாணத்தில் கண்டி_யாழ்ப்பாணம் (A9) நெடுஞ்சாலையில் உள்ள வரலாற்று நகரமான மாத்தளையில் இருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் உள்ளது. இது இலங்கையில் உள்ள ஒரே அழகர் கோயிலாகும்.

பூர்வாங்க கும்பாபிஷேக கிரியைகள் நாளை 25ம் திகதி ஆரம்பமாகும். நாளை காலை 8 இற்கு விஸ்பம் சேன கணபதிபூஜை, தனபூஜை ,கணபதி மகாலட்சுமி ஹோமம், கங்கா தீர்த்த சங்கீரனம் ஆகிய புனித கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 3 மணிக்கு விநாயகர் வழிபாடு, கிராம சாந்தி, பிரவேச பலி, பூஜை, துளசி, கோவாசம், யாகசாலை பிரவேசம் நடைபெறும்.

26/10/2023 வியாழக்கிழமை எண்ணெய்க் காப்பு நடைபெறும். அன்று காலை 8 மணிக்கு மகாகணபதி வழிபாடு, யாகசாலை பிரவேஷம், யாகபூஜை சுதர்சன சக்கர ஹோமம், திருவாய்மொழி பாராயணம் நடைபெற்று மாலை 5 மணிக்கு, கர்ப்பதுவார பூஜை, நாராயண ஹோமம், பிரதட்சணம், சதுர் வேதாரணியம், திருமொழி பாராயணம், குருமார் வஸ்திர ஊத்தரியம் வழங்கல் நடைபெறும்.

27/10/2023 கும்பாபிஷேக பெருவிழா நடைபெறும். அன்று காலை 5:00 மணிக்கு கணபதி பூஜை, உபசார ஹோமம், விசேட தீபாராதனை, பிரதிஷ்டனம், திருவாய்மொழி பாராயணம் ,கீத வாத்தியம், சர்வாஞ்சலி, கும்ப உற்சவம் நடைபெற்று மேற்



குறிப்பிட்ட சுபமுகூர்த்தத்தில் ஸ்ரீதேவி, பூமாதேவி, சமேதஸ்ரீ அழகர் பெருமானுக்கு மகாகும்பாபிஷேகம் நடைபெறும்.

ஆலய பிரதமகுரு தமிழ்நாடு கும்பகோணம் பெரியார்மடம் சீர் வளர்சீர் சிவ பொன்முடி முருகானந்த தேசிக சுவாமிகள் தலைமையில் மற்றும் கிரியா ஜோதி பிரம்மஸ்ரீ முத்து பாலச்சந்திர குருக்கள், ஆகம கிரியாரத்தினம் பிரம்மஸ்ரீ குமார நந்தகுமார குருக்கள், சிவஸ்ரீ திலகேஸ்வர குருக்கள், சிவஸ்ரீ கணேச திருநீலகண்ட குருக்கள், சிவஸ்ரீ சாமி மகேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ க. கார்த்திகேய குருக்கள், சிவஸ்ரீ வே. விபுலானந்த குருக்கள், சிவஸ்ரீ தோ மிதுஹா சர்மா, சிவஸ்ரீ ச பிரபுசர்மா, சிவஸ்ரீ பி சுதர்சனசர்மா, சிவஸ்ரீ கமலதாச சர்மா, சிவஸ்ரீ நிசாந்தன் சர்மா ஆகியோர் இணைந்து புசல்லாவ புவநேந்திர குழுவினர் மங்கல இசை வழங்க கிரிகைகளை நடத்துகின்றனர்.

ஆலயத்தினை ஆகம முறைப்படி எல்கடுவ பாலேந்திரன் குழுவினர் மற்றும் உக்குவளை நவரெட்னராஜா குழுவினர் இணைந்து புனருத்தாரணம் செய்துள்ளனர்.

வெள்ளக்கல் ஆலய கும்பாபிஷேக கிரியைகளில் அடியார்கள் கலந்துகொண்டு நாராயண பெருமாளின் திருவருள் கடாட்சத்தை பெற்றுக் கொள்ளுமாறு ஆலய தர்மகர்த்தா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இக்கோயில் நூற்றாண்டு பழைமையானது என்பதால், புதிய கட்டடம் கட்டுவதற்கான அடிக்கல் 12.02.2004 அன்று நடைபெற்று 27.01.2010 அன்று கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கோவிலின் நிர்வாகம் தொடக்கத்தில் தாபகர் கொங்கையா சேர்வையால் செய்யப்பட்டது. அவரின் மறைவுக்குப் பிறகு 1925 பின் கோவில் நில உரிமையாளரான குடியார் மாரிமுத்து பொன்னையா முருகையா தேவர் வழித்தோன்றல்களால் நிர்வாகம் தொடர்கிறது.

**எச்.எச்.விக்ரமசிங்க...**

# ஐக்கிய நாடுகள் சபையுடன் சவூதியின் ஆதரவுப் பயணம்

## இன்று ஐ.நா தினம்

ஐக்கிய நாடுகள் சபை அதன் 78 ஆவது ஆண்டு நிறைவை இன்று 24ம் திகதி கொண்டாடுகிறது. ஐ.நாவினால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு செயற்பாடுகளில் பங்கேற்ற சர்வதேச நாடுகளுக்கு மத்தியில் சவூதி அரேபியாவின் பங்களிப்பு சுட்டிக்காட்டத்தக்கது.

சவூதி அரேபியா 1945 ஆம் ஆண்டு ஜூன் 26ஆம் திகதியன்று ஐ.நாவின் உத்தியோக பூர்வ உறுப்பினராக இணைந்து கொண்டது. சர்வதேச சமூகத்தின் முயற்சிகளுக்கு ஐ.நா சபையில் உறுப்புரிமை பெற்ற நாள் தொடக்கம் சவூதி அரேபியா தொடர்ந்தும் ஆதரவளித்து வருகிறது.

ஆக்கபூர்வமான உரையாடல், மனிதாபிமான மற்றும் நிவாரண உதவிகளை வழங்குதல், பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடுதல் போன்ற செயற்பாடுகள் மூலம் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காண அந்நாடு உழைத்து வருகிறது.

அரபு, இஸ்லாமிய மற்றும் சர்வதேச நாடுகளுடைய பிரச்சினைகள் மற்றும் விவகாரங்கள் தொடர்பாக ஐ.நா மேடைகளில் சவூதி அரேபியத் தலைவர்கள் குரலெழுப்பி இருக்கிறார்கள். மேலும் சர்வதேச பாதுகாப்பு, சமாதானம், பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள், மனிதாபிமான நிவாரண நடவடிக்கைகள், நாகரிகங்களுக்கிடையிலான பேச்சுவார்த்தை முன்னெடுப்புகள் போன்றவை தொடர்பாக சவூதி தலைமைகள் தொடர்ச்சியாக ஆர்வம் காட்டியுள்ளதோடு சர்வதேச ரீதியாகவும் இது தொடர்பாக குரலெழுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. உலக மக்களிடையே உண்மை, சகோதரத்துவம், நீதி ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் மனித உறவுகளை வலுப்படுத்தும் நோக்கிலும் சவூதி அரசாங்கம் செயற்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

சவூதியின் செயற்பாடுகள் ஐ.நா சபையின் கொண்டாட்டங்கள் மற்றும் கூட்டங்களில் வருடாந்த பங்கேற்புடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை. மாறாக ஐக்கிய நாடுகள் சபை அதன் நிறுவனங்கள், குழுக்கள் மற்றும் அதனுடன் இணைந்த அமைப்புகளுக்கு நிதி, தளவாட மற்றும் பல வகையான முறைமைகளின் மூலம் ஆதரவளிப்பதற்கான அதன் ஆர்வத்தையும் முயற்சியையும் சவூதி எப்போதும் மேற்கொண்டுள்ளது.

சர்வதேச பயங்கரவாத எதிர்ப்பு மையத்தை நிறுவுவதற்கான முன்மொழிவு சமர்ப்பித்தமையை ஐக்கிய நாடுகள் சபையை ஆதரிப்பதில் சவூதியின் மிக முக்கியமான முயற்சிகளில் ஒன்றாகக் குறிப்பிட முடியும். ஐக்கிய நாடுகள் சபையின் பயங்கரவாத எதிர்ப்பு மையம் செப்டம்பர் 2011 இல் தொடங்கப்பட்ட போது சவூதி அரேபியா தனது பங்களிப்பாக பத்து மில்லியன் அமெரிக்க டொலர்களை அவ்வமைப்பின் மூன்று ஆண்டுகளுக்கான செலவுகளுக்காக வழங்குவதாக அறிவித்தது.

ஐ.நா சபையின் பணிகளில் சவூதி வழங்கிய ஆதரவுகளில் மிக முக்கிய அம்சமாக, 2011 ஒக்டோபர் 13 அன்று மன்னர் அப்துல்லாஹ் பின் அப்துல் அஸீஸ் உலகளாவிய பேச்சுவார்த்தை மையத்தை நிறுவுவதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டமையை சுட்டிக் காட்டலாம்.

உலக உணவுத் திட்டம், பலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிவாரணம் மற்றும் பணி நிறுவனம் (யு.என்.ஆர்.டப்ளியூ.ஏ) மற்றும் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐக்கிய நாடுகளின் அலுவலகம் (ஒ.சி.எச்.ஏ) உட்பட பல ஐக்கிய நாடுகளின் நிதியங்களுக்கு நன்கொடை வழங்குவதன் மூலம் இயற்கைப் பேரழிவுகளின் விளைவுகளைக் குறைத்தல், வறுமை மற்றும் நோய்களை எதிர்த்துப் போராடுதல் உள்ளிட்ட பல அம்சங்களில் ஐ.நா சபைக்கு சவூதி அரேபிய இராச்சியம் பக்கபலமாக இருந்துள்ளது.

பல்வேறு துறைகளில் ஐ.நாவின் முக்கிய ஆதரவாளர்களில் ஒன்றாக சவூதி அரேபியா இருந்து வந்துள்ளது. சவூதி அரேபியா, ஐக்கிய நாடுகள் சபை உட்பட பல சர்வதேச நிறுவனங்கள் மற்றும் கூட்டமைப்புகளுக்கு அதன் ஆதரவை வழங்கும் நோக்கோடு பல நன்கொடைகளை அளித்துள்ளது. 439,583,602 மில்லியன் அமெரிக்க டாலர்கள் வரையான நிதிப் பங்களிப்பை ஐக்கிய நாடுகள் சபைக்கு சவூதி அரேபிய இராச்சியம் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



**காலித் ஹமூத் அல் கஹ்தானி...**
இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர், கொழும்பு

# சவூதி அரேபியாவின் பசுமைப் புரட்சி; பத்து மில்லியன் மரக்கன்றுகள் நடுகை செய்யும் சாலையோர அபிவிருத்தித் திட்டம் ஆரம்பம்

சவூதி இளவரசர் முகமது பின் சல்மான் பின் அப்துல்அஸீஸ் ஆல ஸுஊத் அவர்களால் தொடங்கப்பட்ட பசுமை சவுதி திட்டத்தின் கீழ் 10 மில்லியன் மரக்கன்றுகள் நடும் சாலையோர அபிவிருத்தித் திட்டம் ஒன்றை இன்று சவூதி அரேபியா அறிமுகப்படுத்துகிறது.

காலநிலை தொடர்பான அனைத்து சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்ளவும், காடு வளர்ப்பின் மூலம் நீண்டகால இலக்காக அடையப்படும் பொருளாதார மற்றும் சமூக நன்மைகள் ஊடாக குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவுமான சவூதி அரசின் தேசிய மற்றும் சர்வதேச கடமைப்பாடுகளின் ஒரு அங்மாக இது திகழ்கிறது.

இந்நிகழ்ச்சித் திட்டம் மத்திய கிழக்கு மற்றும் வடஆபிரிக்காவின் காலநிலை வாரத்தின் இரண்டாம் கட்ட செயல்பாடுகளுடன் இணைந்ததாக உள்ளது. இதை சவூதி அரசாங்கம் ரியாத் நகரில் முதல் முறையாக பொறுப்பேற்று தனது அனுசரணையில் நடத்துகிறது.

இயற்கையான வாழ்விடங்களின் அனைத்துப் பகுதிகளிலும் தாவரங்களை வளர்க்க வடிவமைக்கப்பட்ட ஒரு மூலோபாயத் திட்டம் இந்நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும் நகரங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் பசுமையான இடங்களையும் இது உள்ளடக்குகிறது.

புதிய மரங்கள் குடிமக்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கு பங்களிப்பதை உறுதிசெய்ய வேண்டிய தேவை உள்ளது. அவர்களில் பெரும்பாலோர் நகர்ப்புறங்களில் வசிக்கின்றனர். நகர மையங்கள் மரங்களின் அடர்த்தி அதிகரிப்பால் பயனடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது,

இது வெப்பநிலையை (2.2) டிகிரி செல்சியஸ் அளவில் குறைக்க உதவும். அத்துடன் காற்றின் தரத்தை மேம்படுத்துகிறது. அதிக வெப்பநிலை மற்றும் காற்று மாசுபாடு ஆகியவை உலகெங்கிலும் உள்ள நகர்ப்புறங்களில் மிகவும் பொதுவான சுற்றுச்சூழல் அபாயங்களில் ஒன்றாகும். அவை இதயம், மற்றும் சுவாச நோய்கள் போன்ற தொற்றாத நோய்த் தொகுதி பரவலுடன் இணைக்கப்பட்டுள்ளன. நகரங்களில் தாவரங்களை வளர்ப்பதற்கான முயற்சிகள் காபனீரொக்சைட் அளவைக் குறைக்க உதவுகின்றன. மேலும், சாலையோர திட்டவரைபை செயல்படுத்துவது, நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கும், மரங்கள் நடுதல், விதைகள் சேகரித்தல், விவசாய நிலங்களை தயாரித்தல் மற்றும் பராமரித்தல், சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை மீண்டும் பயன்படுத்துவதற்கான இணைப்புகளை உருவாக்குதல் மற்றும் அதற்கான அடிப்படைகளை நிறுவுதல் போன்ற பணிகளையும் தேவைப்பாடுகளையும் நிவர்த்திப்பதற்கு இது உதவுகிறது.

SAUDI GREEN INITIATIVE





'பசுமை சவூதி அரேபியா' நிகழ்ச்சித் திட்டமானது உலகின் மிகப்பெரிய காடுகளை வளர்ப்பதற்கான முயற்சிகளில் ஒன்றாகும். குறைந்த மழைவீதம், விளைநிலப் பகுதி மற்றும் வனப்பகுதிகள் உட்பட நாடு எதிர்கொள்ளும் பல்வேறு சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்வதில் சவூதி அரசாங்கத்தின் உறுதியான நிலைப்பாட்டையும் அர்ப்பணிப்புடனான சேவையையும் இது பிரதிபலிக்கிறது.

10 பில்லியன் மரங்களை நடுவதாக அறிவிக்கப்பட்ட திட்டத்தின் முதன்மை இலக்கு, நாட்டின் 40 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பை மீட்டு வளப்படுத்துவதாக அது அமைவதாகும்.

திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் இந்த இலக்கு தரம் உயர்த்தப்பட்டு, தற்போது 74.8 மில்லியன் ஹெக்டேர் நிலத்தை வளப்படுத்துவதற்கு சமமாக உள்ளது.

10 பில்லியன் மரங்களை நடுவதற்கான இலக்கு உலகளாவிய காடு வளர்ப்பின் இலக்கின் (1%) மற்றும் 'பசுமை மத்திய கிழக்கு' நடவடிக்கைகளால் நிர்ணயிக்கப்பட்ட 50 பில்லியன் மரங்களை நடுவதற்கான இலக்கின் 20% வீதத்தை நிவர்த்திக்கிறது.

இன்று அறிவிக்கப்பட்ட சாலையோர நிகழ்ச்சித் திட்டம் நாட்டின் காடு வளர்ப்பு முயற்சிகளின் தொடக்கத்தைக் குறிக்கவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில் 2017 மற்றும் 2023 இற்கு இடைப்பட்ட காலத்தில் மட்டும் நாடு முழுவதும் 41 மில்லியன் மரங்கள் நடப்பட்டுள்ளன.

இரண்டு ஆண்டுகளாக நீடித்த விரிவான மூலோபாய அறிவியல் சாத்தியக்கூறு ஆய்வின் அடிப்படையில் சுற்றுச்சூழல், நீர் மற்றும் விவசாய அமைச்சகம் மற்றும் தேசிய தாவர மேம்பாடு மற்றும் பாலைவனமாக்கலை எதிர்த்துப் போராடுவதற்கான தேசிய மையம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இந்த சாலையோர அபிவிருத்தி செயற்திட்டம் செயல்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பல நிபுணத்துவங்களில் மிகவும் திறமையான உள்ளூர் மற்றும் சர்வதேச நிபுணர்களின் உயரடுக்கு குழு 10 பில்லியன் மரங்களை நடும் இலக்கை அடைய நாட்டை நகர்த்திச் செல்வதில் கவனம் செலுத்துகிறது. இது தொடர்பான களஆய்வுகளும் பரிசோதனைச் செயன்முறைகளும் விருத்தியடைந்து செல்வது குறிப்பிடத்தக்கது.

காடுவளர்ப்பு நடவடிக்கைகளில் பயன்படுத்தக்கூடிய நிலையான நீர்ப்பாசன முறைகளை அடையாளம் காண்பதும் அவற்றை அடைந்து கொள்வதும் தேர்ந்தெடுக்கப்பட்ட மர இனங்கள் தாவரங்களுடன் இணக்கமாக இருப்பதை உறுதிசெய்தல் மற்றும் நாட்டின் காலநிலைக்கு ஏற்ப அவற்றின் திறனை உறுதிப்படுத்துதல் என்பன முக்கியமானவை. இந்த ஆய்வில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் 1,150 இற்கும் மேற்பட்ட களஆய்வுகள் அடங்கும்.

பல்வேறு சுற்றுச்சூழல் நிலைமைகளின் அடிப்படையில் மரங்களை நடுவதற்கு மிகவும் பொருத்தமான புவியியல் இடங்களைத் தீர்மானிக்க மண், நீர், வெப்பநிலை, காற்று மற்றும் கடல் மட்டத்திலிருந்து உயரம் உட்பட விஞ்ஞானப் பரிந்துரைகள் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, தொடர்புடைய துறைகளின் விரிவான மதிப்பீடும் இந்த ஆய்வில் அடங்கும். அங்கீகரிக்கப்பட்ட சாலையோர அபிவிருத்தி செயற்திட்டத்தை இரண்டு கட்டங்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டம் 2024 முதல் 2030 வரை நீண்டுசெல்கிறது, இது இயற்கை அடிப்படையிலான அணுகுமுறையைப் பின்பற்றுகிறது.

இரண்டாம் கட்டம் 2030 இல் தொடங்கும் அதேவேளையில், சுற்றுச்சூழல் மறுவாழ்வில் மனித முயற்சிகளின் அடிப்படையில் ஒரு விரிவான அணுகுமுறையை உருவாக்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

சதுப்புநிலக் காடுகள், சதுப்பு நிலங்கள், மலைக்காடுகள், மேய்ச்சல் நிலங்கள், தேசியப் பூங்காக்கள் மற்றும் பள்ளத்தாக்குகள் உள்ளிட்ட பல்வேறு இயற்கை வாழ்விடங்களில் செழித்து வளரும் 2,000 இற்கும் மேற்பட்ட தாவர இனங்கள் சவுதி அரேபியா இராச்சியத்தில் உள்ளன. 2030 ஆம் ஆண்டளவில் 600 மில்லியனுக்கும் அதிகமான மரங்கள் நடப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது,

இது 3.8 மில்லியன் ஹெக்டேர் நிலத்தை மீட்டு வளப்படுத்துவதற்கு சமம் ஆகும். பல்லுயிர் பெருக்கத்தை மீட்டெடுப்பது மற்றும் பாதுகாப்பது என்பது 10 பில்லியன் மரங்களை நடும் இலக்கு கவனம் செலுத்தும் மிக முக்கியமான அம்சங்களில் ஒன்றாகும்.



அஷ்ஷெய்க்
**அஷ்ரப் ஆப்தீன்** (ரியாதி)...
விரிவுரையாளர், தாருத் தவ்ஹீத் அஸ்ஸலபிய்யா கலாபீடம்

1990களில் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த

# முஸ்லிம் மக்களை அரவணைத்த புத்தளம் மக்கள் சார்பாக இருவருக்கு கௌரவம்

## தேசிய மீலாத் விழாவில் ஜனாதிபதியினால் கௌரவிப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

1990 களில் இடம்பெயர்ந்து புத்தளத்திற்கு சென்ற வடக்கு முஸ்லிம் மக்களுக்கு உதவிபுரிந்த புத்தளம் மாவட்ட முஸ்லிம் நிறுவனங்கள் மற்றும் மாவட்ட உலமாக்கள், பொதுமக்கள் சார்பில் இருவர் மன்னாரில் ஞாயிற்றுக்கிழமை (22) நடைபெற்ற தேசிய மீலாத் விழாவில் கௌரவிக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட வடக்கு முஸ்லிம் மக்கள் அதிகமானோர் புத்தளம் மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்தனர்.

இவ்வாறு வடக்கு முஸ்லிம் மக்களை அரவணைத்து அவர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படைத் தேவைகளையும் வழங்கி கௌரவித்த புத்தளம் மக்களை கௌரவிக்கும் முகமாக, அம்மக்கள் சார்பில் இருவரை அழைத்து ஜனாதிபதியின் கரங்களினால் கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

புத்தளம் மாவட்ட முஸ்லிம் நிறுவனங்கள், சிவில் அமைப்புக்கள், மஸ்ஜித் நிர்வாகங்கள் சார்பில் புத்தளம் மாவட்ட மஸ்ஜித் சம்மேளனத்தின் தலைவர் முஹம்மட் பஸால் ஹாஜியாரும், புத்தளம் மாவட்ட மக்கள் மற்றும் உலமாக்கள் ஆகியோர் சார்பில் மூத்த உலமாவும், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் புத்தளம் கிளை தலைவருமான அப்துல்லாஹ் மஹ்மூத் ஆலிமுமே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கௌரவிக்கப்பட்டவர்களாவர்.



# வடக்கின் உதயம்

## மன்னார் கலைஞர் மாக் மில்லர் மறைவு



பேசாலையை பிறப்படமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மில்லர் ஒரு தேர்ந்த கலைஞராக இனம் காணப்பட்டவர். நாடகம் மற்றும் நாட்டுக்கூத்து கவிதையென இலக்கியப் பரப்பில் அவருக்கு அதிகநாட்டம் இருந்தது. அந்த வகையிலே ஒரு வளரும் கலைஞராகவும் சில கலை வெளிப்பாடுகளில் மிக முதிர்ச்சி தேர்ந்தவராகவும் அவர் இருந்தார்.

மேலும் இவர் சிறந்த ஒப்பனையாளராகவும். இருந்திருக்கிறார் மற்றும் சமூக சேவை செயற்பாடுகளிலே முன் நின்று உழைப்பவராக அவர் காணப்பட்டார். அது சமூகத்திலே ஆன்மீக பங்காக இருந்தாலும் ஏனைய சேவை பகுதிகளாக இருந்தாலும் அவரது நிறைவான சேவை எல்லோருக்கும் கிடைத்தது அந்த வகையிலே மற்றவர்களால் எப்போதுமே மதிக்கப்படுகிறவராக அவர் இருந்திருப்பதை நாம் உணர்கிறோம்.

21.04.1981 ம் வருடம் பிறந்த அவர் 17.10.2023 ம் திகதி தமது 42 வது அகவையில் எமை விட்டுப் பிரிந்துள்ளார்.

இவர் விழிகள் கலா முற்றத்தின் முன்னைநாள் செயலாளரும் இந்நாள் ஆவணக்காப்பாளராகவும், மன்னார் தமிழ்ச் சங்கத்தின் உப தலைவராகவும் கடமையாற்றியவராவார்.

யாழ்.கோப்பாய் நவமங்கை நிவாச அறநெறி பாடசாலையும் கலைமன்றமும் இணைந்து நடாத்திய மாணவர்களின் வாணி விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் காலை நவமங்கை நிவாச அறநெறிப் பாடசாலையில் சுவர்ண நவரட்ணம் தலைமையில் நடைபெற்றது.
(படம் கோப்பாய் குறூப் நிருபர்)









கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலய ஆங்கில தின நிகழ்வுகள் அதிபர் அ.பங்கையற்செல்வன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் ஆங்கில தினப் போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வும் நடைபெற்றது. இந்நிகழ்வில், முதன்மை விருந்தினராக ஓய்வு நிலை ஆங்கில ஆசிரியர் அருட்சகோதரி நீற்றா கலந்து கொண்டார், சிறப்பு விருந்தினர்களாக வலய ஆங்கில பாட வளவாளர் பரணீதரன், சிரேஷ்ட ஆங்கில ஆசிரியை திருமதி.கார்த்திகாயினி அயற்பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# மட்டக்களப்பில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நடமாடும் சேவை

மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் நேற்று காலை ஆரம்பிக்கப்பட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் நடமாடும் சேவையானது நேற்று மாலை 5 மணியுடன் நிறைவடைந்தது.

நடமாடும் சேவையானது கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான கௌரவ சிவ.சந்திரகாந்தனின் வேண்டுகோளுக்கமைவாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள், வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் பந்துல குணவர்த்தனவின் பணிப்புரையின் கீழ் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம், கிழக்கு மாகாண மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட செயலகம் போன்றன இணைந்து நடாத்தியிருந்தது.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சினி ஸ்ரீகாந் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டங்களுக்கு அமைவாக வெளிக்கள அரச உத்தியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கான நிபந்தனைகளை நீக்குதல், வாகன பதிவுச் சான்றிதழ் நிபந்தனைகளை நீக்குதல் மற்றும் திருத்தங்களை மேற்கொள்ளல், அனைத்து வாகனங்களுக்குமான உரிமை மாற்றங்களை செய்தல், வாகனங்களை பரீட்சித்து நிறைச் சான்றிதழ் மற்றும் அடையாளச் சான்றிதழ்களை வழங்குதல், மோட்டார் வாகனத்தில் காணப்படுகின்ற தெளிவற்ற அடிச்சட்டகை மற்றும் எஞ்சின் இலக்கங்களை அச்சிடுதல் போன்ற சேவைகளும் அதனுடன் இணைந்ததாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குதல், சாரதி அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தல், சாரதி அனுமதிப்பத்திரங்கள் மற்றும் வாகன சான்றிதழ்களின் சாராம்சங்களை வழங்குதல்,

மாற்றுத்திறனாளிகளுக்கான சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் முகமாக விசேட மருத்துவக் குழுவின் பரிந்துரைகளை வழங்குதல், எழுத வாசிக்க முடியாதவர்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக சிறப்பு பரீட்சைகளை நடாத்துதல், புதிய வாகன பதிவுக்கான 50 CCக்கும் குறைவான கொள்ளளவை கொண்ட மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்தல் போன்ற சகல சேவைகளும் நேற்று மாலை 5 மணி வரை மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் வழங்கப்பட்டன.



நீண்டகாலமாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் ஏதேனும் ஒரு சேவைக்கு விண்ணப்பித்து இதுவரை தீர்வு கிடைக்காத விடயங்களுக்கான தீர்வினை பெற்றுக்கொண்டதோடு, வருமான வரி பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான பரிந்துரைகடிதங்களையும் வாகன உரிமையாளர்கள் இதன்போது பெற்றுக்கொண்டிருந்தனர்.

# கிழக்கின் குரல்

## அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

**(அட்டாளைச்சேனை விசேட நிருபர்)**

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரமவின் ஒருங்கிணைப்பிலும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களான பாராளுமன்ற உறுப்பினர்களான டபிள்யூ. வீரசிங்க, ஏ.எல்.எம்.அதாஉல்லா, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோரின் இணைத் தலைமையிலும் நடைபெற்றது.

இதன்போது,பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.எம்.எம்.முஷாரப், விமலவீர திஸாநாயக்க மற்றும் மாவட்டத்திலுள்ள திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், பாதுகாப்பு உயர் அதிகாரிகள், கல்வி அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் முன்னேற்ற மீளாய்வு செய்யப்பட்டதுடன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்கான முன்மொழிவுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன.

இங்கு சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகள்பலவற்றுக்கும் அனுமதி வழங்கப்பட்டதுடன் சிக்கலானதும், பிரச்சினை ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்பட்ட விடயங்களுக்காக உப குழுக்களும் அமைக்கப்பட்டன.



மட்டக்களப்பு மாவட்ட செயலக நலன்புரிச் சங்கம் நடாத்தும் வாணி விழா நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த் தலைமையில் நேற்று (23) திகதி மாவட்ட செயலகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.மாவட்ட செயலக ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வளாகத்தில் மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கி.குணநாயகத்தின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற வாணி விழா நிகழ்வில் மாவட்ட செயலக உத்தியோகத்தர்களின் பஜனை, மாணவிகளின் வரவேற்பு நடனம் என்பன இடம்பெற்றன. இந்நிகழ்வுகளில மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன், மாவட்ட செயலக பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஆர்.காயத்திரி, மாவட்ட செயலக கணக்காளர் எம். வினோத், மாவட்ட செயலக நிருவாக உத்தியோகத்தர் கே.மதிவண்ணன், மாவட்ட செயலக பொறியியலாளர் ரீ.சுமன், மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஆ.ஜதீஸ்குமார், மாவட்ட செயலகத்தின் கிளைத்தலைவர்கள் உள்ளிட்ட மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.
(படங்கள்; கல்லடி குறூப் நிருபர்)

## நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை நெற்களஞ்சியசாலை கட்டடத்துக்கு இடமாற்றம்

**(அட்டாளைச்சேனை விசேட நிருபர்)**

நெற்சந்தைப்படுத்தும் சபையின் பராமரிப்பிலுள்ள நிந்தவூர் நெற்களஞ்சியசாலை கட்டடத்தை நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையாக பயன்படுத்துவதற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின்உப குழு கூட்டம் நேற்று நிந்தவூர் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ஏ.எம்.அப்துல் லத்தீபின் நெறிப்படுத்தலில் பாராளுமன்ற உறுப்பினரும், நிந்தவூர் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவருமான எஸ்.எம்.எம்.முஸாரப் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலைக்கான நிரந்தரமான கட்டடம் அமைக்கப்படும் வரை தற்காலிகமாக நெற்களஞ்சியசாலை கட்டடத்துக்கு இடமாற்றுவதற்கு அனுமதி வழங்குமாறு கடந்த நிந்தவூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரேரணை முன் வைக்கப்பட்டிருந்தது. இப்பிரேரணை தொடர்பில் ஆராய்ந்ததுடன் விவசாய அமைப்புகள் மற்றும் சகல தரப்பினருடன் கலந்துரையாடுவதற்காக உப குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருந்தது.

அந்தவகையில் நேற்றைய கூட்டத்தில் நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையை நெற்சந்தைப்படுத்தும் சபையின் பராமரிப்பிலுள்ள நிந்தவூர் நெற் கள்ஞ்சியசாலையின் பயன்டுத்தப்படாமல் உள்ள கட்டடத்திற்கு இடமாற்றுவதற்கு சகல தரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளதுடன் அதற்கான அனுமதியையும் வழங்கினர்.

நிந்தவூர் ஆயுர்வேத ஆராய்ச்சி வைத்தியசாலைக்கான நிரந்தரமான கட்டடம் அமைக்கப்படும் வரை ஐந்து வருடங்களுக்கு தற்காலிகமாகவே இக்கட்டடத்தை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசல் காசீம், நிந்தவூர் பிரதேச கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய அமைப்புகளின் சம்மேளனத்தின் பிரதிநிதிகள், வட்டானை அமைப்புகளின் பிரதிநிதி, நிந்தவூர் ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் தலைவர் ஏ.றஸீன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## சடலம் மீட்பு

**(றொட்டவெவ குறூப் நிருபர்)**

திருகோணமலை ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆணொருவரின் சடலம் நேற்று (23) மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஈச்சிலம்பற்று முத்துச்சேனை பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான கே.சதீஸ் (35வயது) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு மூன்று பேர் சேர்ந்து மதுபானம் அருந்தியதாகவும், மற்றைய இருவரும் வீடுகளுக்கு சென்றதாகவும் தெரியவருகின்றது.

உயிரிழந்தவரின் வலது காதில் இரத்தம் கசிந்து காணப்படுவதாகவும் சம்பவ இடத்துக்கு மூதூர் நீதிமன்ற பதில் நீதவான் எம்.ஏ.சீ.மஹ்ரூப் சென்று பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறும் பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளனர்.

இதேவேளை மரணம் தொடர்பில் அவருடன் மது அருந்திய நபர்களை விசாரணை செய்து வருவதாக ஈச்சிலம்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

கிழக்கு மாகாணத்தில்

## விவசாயிகளுக்கு எலிக்காய்ச்சல் அவதானம்

**( மாளிகைக்காடு குறூப் நிருபர்)**

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் காணப்படுவதாக சுகாதார திணைக்கள அதிகாரிகள் விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் தற்போது பெய்துவரும் கடும் மழை காரணமாக அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் விவசாயிகள் பெரும்போக வேளாண்மைச் செய்கையின் விதைப்பு வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் எலிக்காய்ச்சல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளமையால் விவசாயிகள் இவ்விடயத்தில் மிகவும் அவதானமாக இருக்குமாறு சுகாதார திணைக்கள அதிகாரிகள் அறிவுரை வழங்கியுள்ளனர்.

வயல் நிலங்களில் காணப்படும் களி மற்றும் நீர் மூலமாக விவசாய நடவடிக்கைக்கைகளில் ஈடுபடும் விவசாயிகளுக்கும், குளங்களில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் மீனவர்களுக்கும் காயம் அல்லது துவாரத்தினூடாக லெப்டொஸ்பயிரா எனும் பக்டீரியா உட்புகுவதனாலேயே எலிக்காய்ச்சல் நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படுவதாக வைத்தியர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, எலிக்காய்ச்சலுக்கான அறிகுறி தென்படுவோர் அருகிலுள்ள வைத்தியசாலை, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், குடும்ப சுகாதார வைத்திய நிலையம் மற்றும் விவசாய விஸ்தரிப்பு நிலையம் என்பவற்றில் அதற்கான சிகிச்சையையும், இலவச மருந்துகளையும் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

எலிகள் கழிக்கும் சிறுநீர் வயல் நிலங்களில் மற்றும் தேங்கி நிற்கும் நீர் நிலைகளில் சேர்வதனாலேயே இந்நிலமை ஏற்படுகின்றது.

## சட்டவிரோத மண் அகழ்வு

**( மாளிகைக்காடு குறூப் நிருபர் )**

கந்தளாய் சேருவில மகாவலிகங்கை ஆற்றுப்படுக்கை ஓரமாக சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்திற்கு சட்டவிரோத மண் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்றுவருவதால் அதன் அருகிலிருந்த மண்மேடு சரிந்துள்ளது.

இதுதொடர்பில் சூரியவெவ பொலிஸ் நிலைய விசேட படையினர் ஸ்தலத்திற்கு விரைந்து சென்று மண் அகழ்வில் ஈடுபட்டுக் கொண்டிருந்த 16 பேரை நேற்றுமுன்தினம் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மாத்தளை, மஹியங்கனை மற்றும் கந்தளாய் பிரதேசங்களைச் சேர்ந்த 25 – 50 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என தெரியவருகின்றது.

சம்பவம் தொடர்பாக சூரியவெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டக்களப்பு மாவட்ட மீனவ குடும்பங்களின்

# மீன் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் கைகொடுத்த 'புனர்வாழ்வு புதுவாழ்வு' அமைப்பினர்


நன்றி தெரிவித்து பலரும் கருத்து தெரிவிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் கிரான் பகுதியிலுள்ள பறங்கியா மடு பிரதேசத்தில் வாழும் மீனவக் குடும்பங்களின் மீள் எழுச்சிக்காக 'புனர்வாழ்வு புதுவாழ்வு' அமைப்பின் இங்கிலாந்து நாட்டிற்கான தலைவர் பொறியியலாளர் கலாநிதி சர்வேஸ்வரன் வேலாயுதம் மற்றும் இலங்கைக்கான தலைவர் பொறியியலாளர் ஹென்றி அமல்ராஜ் ஆகியோர் வழங்கி வருகின்ற மனிதாபிமான பணிகள் பாராட்டத்தக்கவையென மீனவ குடும்பங்கள் தெரிவித்துள்ளதோடு அவர்களின் வாழ்வின் வளர்ச்சிக்கும் அந்நிறுவனம் உதவி ஒத்தாசைகளை வழங்கியுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தன.

இந்நிறுவனத் தலைவர்கள் இப்பிரதேச மக்களின் மீள் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ஆற்றிவரும் பங்களிப்புக்கள் குறித்து கடற்றொழிலாளர் முத்துவேல் நற்குணசிங்கம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர்கள் தினகரன் பத்திரிகைக்காக கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் பறங்கியாமடு கிராமத்தில் 120 மீன்பிடி கடற்றொழிலாளர் குடும்பங்கள் வாழ்ந்து வந்தனர். இப்பிரதேசத்திலுள்ள மக்கள் அனைவரும் குடிசை வீடுகளில் வசித்து வந்தனர். இப்பிரதேச மக்களின் அவலநிலை குறித்து புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பின் இலங்கைக்கான தலைவர் பொறியியலாளர் ஹென்ரி அமல்ராஜின் கவனத்திற்கு



பிரதேச மக்களினால் கொண்டு செல்லப்பட்டது. அதனையடுத்து, அவர் மேற்படி கிராமத்திற்கு நேரடியாக வருகை தந்து பிரச்சினைகளை இனங்கண்டு புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பின் இங்கிலாந்து நாட்டுக்கான தலைவர் பொறியியலாளர் கலாநிதி வேலாயுதம் சர்வேஸ்வரனின் கவனத்திற்கு கொண்டு சென்றார். அதனைத் தொடர்ந்து 2020ஆம் ஆண்டளவில் இந்த அமைப்பினால் இம்மக்களுக்கான நிவாரண உதவிகள், மலசல கூடம், மின்சார வசதிகள், தண்ணீர் வசதிகள், மீள் குடியேற்ற உட்கட்டமைப்பு வசதிகள், அடிப்படை வாழ்வாதார உதவிகள் போன்ற பல்வேறு பட்ட நடவடிக்கைகள் இங்கு முன்னெடுக்கப்பட்டன.



இக்கிராம மக்கள் போர் சூழலின் காரணமாக 1996 களில் இடம்பெயர்ந்து சென்று மீளவும் 1997 களில் இக்கிராமத்தில் மீளவும் குடியேறினர். யுத்த காலத்தில் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி நிறைய வீடுகள் முற்றாகப் பாதிக்கப்பட்டதோடு நிறைய பொது மக்களும் காயப்பட்டனர். இந்தப் பகுதிக்கு புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பைத் தவிர வேறு எந்தவொரு நிறுவனமோ, அரச உதவிகளோ எமது கிராமத்திற்கு கிடைக்கவில்லை. சுனாமி காலத்தில் கூட எங்களது கிராமம் பெரியளவில் பாதிக்கப்பட்டது. நேரடியாகவோ மறைமுகமாகவே இந்தப் பிரதேச மக்களுக்கு உதவி செய்ய யாரும் வரவில்லை.

பொதுவாக புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பின் மூலம்தான் எங்களது வறுமையும் தீர்க்கப்பட்டிருக்கி



றது. அது மட்டுமல்ல தண்ணீர்ப் பிரச்சினைகள், வீடமைப்பு வசதிகள் போன்ற அடிப்படையான உட்கட்டமைப்பு வசதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இப்பிரதேசத்தில் கடற்றொழிலாளர்கள் வாழ்கின்றமையால் சகலருக்கும் மீன்பிடி படகுகள், வலைகள் வாங்கித் தந்து பொருளாதார மேம்பாட்டை வலுப்படுத்தியுள்ளார்கள். இன்றைக்கு எல்லோரும் முதலாளிமார்கள் என்று சொல்லுமளவுக்கு நாங்கள் இன்று வளர்ந்து விட்டோம். ஆரம்பத்தில் நாங்கள் புத்தளம், சிலாபம் போன்ற பகுதிகளுக்குச் சென்று மரக்கறித் தோட்டங்களில் கூலி வேலைகள் செய்தோம். அங்கு கரைவலை மீன்பிடித் தொழில்களிலும் ஈடுபட்டு வந்தோம். வெளியே சென்றுதான் எங்களுடைய வாழ்வாதாரத்தை ஓட்ட வேண்டிய நிலைமை இருந்தன.


இவை தொடர்பில் புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பினர்களுடன் இப்பிரதேச மக்களின் வாழ்வாதார பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடல் இடம் பெற்றது. இதன் போது ஆண்கள் பெண்கள் வெளியே சென்று தொழில் செய்வதைத் தடுத்து நிறுத்தி ஊரிலே தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தினால் ஊர் பிள்ளைகளின் கல்வி எதிர்காலம் சிறப்பாகவும் அமையும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

அந்த அடிப்படையில், ஐந்து குடும்பங்களுக்கு ஒரு மீன்பிடிப் படகு இயந்திரம் வழங்குதல் திட்டத்தின் கீழ் இந்த அமைப்பினால் படகுகள் வழங்கி வைக்கப்பட்டன. இதில் ஒரு விதவைத் தாய் உட்பட ஐந்து பேர் கொண்ட பயனாளிகளுக்கு 'இன்ஜின்' படகுகள் வழங்கி வைக்கப்பட்டன. இந்த கடற்றொழிலினால் ஒரு நாளைக்கு இலட்சக்கணக்கில் வருமானம் கிடைக்கும். சிலவேளை, ஒன்றுமில்லாமல் இருக்கும். ஒரு மாதத்திற்கு ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் கூட சம்பாதிக்கலாம். எனினும் இதன் மூலம் இன்று நாங்கள் நல்ல சௌபாக்கியத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இந்த கடற்றொழிலின் மூலம் நிறைய பிரச்சினைகளுக்கு தீர்வுகள் எட்டப்பட்டுள்ளன. வீட்டுப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. தண்ணீர்ப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாக, இப்பொழுது எமது மக்கள் உழைத்துச் சம்பாதித்து, சுயமாக வீடு வாசல்களைக் கட்டக் கூடியவர்களாக உயர்ந்து இருக்கிறார்கள்.

நாங்கள் ஆரம்பத்தில் தாய், தகப்பன், பிள்ளைகள் எல்லோரும் புத்தளம் சென்று சாம்பாதித்து வாழ்க்கை நடத்திய முதல் காலகட்டத்தில் பிள்ளைகளுடைய படிப்பு மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. அங்கு தொழில் செய்தமையால் பிள்ளைகளுக்கு படிக்க இயலாமற் போய் விட்டது. இப்பொழுது புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பின் உதவித் திட்டத்தின் ஊடாக எல்லோரும் வீட்டோடு இருந்து தொழில் செய்வதன் காரணமாக பள்ளிக்கூடம் சென்று படிக்கின்ற நிலைமை அதிகரித்துள்ளது. நான்கு பிள்ளைகள் பல்கலைக்கழகம் சென்றுள்ளார்கள்.

இங்கு ஒரேயொரு பிரச்சினை என்னவென்றால், க. பொ. த உயர் தரம் படிக்கின்ற பிள்ளைகள் தூரம் சென்று படிக்க வேண்டும். கிரானிலுள்ள பாடசாலைக்குச் செல்ல வேண்டும். மாரி காலத்தில் பிள்ளைகள் நடந்து செல்வார்கள். அப்பொழுது சப்பாத்துக்குள் தண்ணீர் போகும் என்று 'பாட்டா' செருப்பை போட்டுச் சென்றால் அதிபர் அல்லது ஆசிரியமார்கள் அடிப்பார்கள். இது மட்டும் தான் பிரச்சினை என்று இருக்கிறது. புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பினால் இன்றைக்கு எங்களுடைய ஊர் மாற்றம் அடைந்துள்ளது.

இருந்தாலும் சுனாமியின் போது 21 தோனி வலைகள் கிடைத்தன. அவை தவிர புனர்வாழ்வு புதுவாழ்வு



அமைப்பினால் இயந்திரப் படகுகள் கிடைத்தன. இப்படகுகள் தான் எங்களுடைய வாழ்க்கையை மாற்றியமைத்தன. ஆனால் அவை காற்றுக் காலங்களில் மீன் பிடித்தொழிலுக்குச் செல்வதில்



கடினமாக உள்ளன. ஏனென்றால் 15 'ஹோஸ் பவர்' தர இன்ஜின் கடலில் காற்றுக்கு முகம்கொடுத்து ஓட முடியாமை இருக்கிறது. கழுதங்கேணியிலுள்ள அதி சக்தி மிக்க படகுகளின் மூலம் இழுத்து வர வேண்டும். சிலவேளை, கடலின் இடையில் காற்று அதிகம் அடித்தால் அல்லது படகு பழுதடைந்தால் படகு ஓட முடியாமை இருக்கும். இப்படி நான்கு தடவை வந்தன. இதனால் அதி சக்தி மிக்க இன்ஜின் வலு மிக்க படகுகளின் மூலம் கரைக்கு இழுத்து வந்தோம். அதற்கு தலா 5000 ரூபா கொடுக்க வேண்டும். எங்களுடைய மீனவர் சங்கத்தின் மூலம் கழுதங்கேணி மீனவர் சங்கத்திடம் கதைத்துள்ளோம். அதாவது ஒரு படகு இன்ஜின் பழுதானால் 15 'ஹோஸ் பவர்' இன்ஜினால் இழுத்து வர முடியாது. 25 'ஹோஸ் பவர்' இன்ஜின் மூலம்தான் இழுத்து வர வேண்டும்.

எனினும் இப்படகுகளின் மூலம் சம்பாதிக்கின்ற பணத்தில் ஒரு பகுதியை சேமித்து வைத்து அடுத்த கட்டத்திற்குச் செல்ல வேண்டும். மேலும் வலுமிக்க படகு இன்ஜின்களை வாங்கி தொழில் செய்ய வேண்டும் என்ற ஆலோசனை புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பினால் ஆரம்பத்தில் முன்வைக்கப்பட்டது. அந்த வகையில் ஒரு சேமிப்பை செய்து வருகின்றோம். இந்தப் பணத்தைக் கொண்டு 25 ஹோஸ் பவர்மிக்க இன்ஜினை நாங்கள் வாங்கியிருக்க வேண்டும். நாங்கள் இன்னும் வாங்கவில்லை. அவை எங்களுடைய தவறாகும்.

படகு வைத்திருப்பவர்கள் ஒவ்வொருவரும் தினசரி ஒரு சிறிய தொகையை இதற்காக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று ஏற்கனவே புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பினால் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன. அதனை நாங்கள் சரியாகக் கருத்திற் கொண்டு செய்து வந்திருந்தால் ஒரு வருடத்தில் 25 ஹோஸ் பவர் இன்ஜினுக்குச் சென்று இருக்கலாம். இதில் பயனாளிகளுடைய முயற்சியும் கட்டாயம் இருத்தல் வேண்டும். அடுத்தடுத்த கட்டத்திற்கு எப்படிச் செல்ல வேண்டும் என்ற ஆலோசனையை புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பினர் தெளிவாக விளக்கி கூறியிருந்தார்கள். அந்த அடிப்படையில் 4 இலட்சத்துக்கு மேல் சேமிப்பு பணம் இருக்கிறது. ஒரு 25 ஹோஸ் பவருள்ள இன்ஜின் படகு ஒன்றை வாங்கினால் எமது பிரதேசத்திலுள்ள படகுகளுக்கு எவையேனும் படகுகளுக்கு பழுது ஏற்பட்டால் அவற்றை வைத்துப் பயன்படுத்தலாம் என யோசித்துக் கொண்டிருந்த நேரத்தில் எங்களை நேரடியாகச் சந்தித்து கலந்துரையாடி உடனுக்குடன் உதவிகளைச் செய்கின்ற புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்புக்கு நாங்கள் எப்படி நன்றி சொல்வதென்று தெரியாமல் இருக்கின்றோம். அதற்கு வார்த்தைகள் இல்லை.

நாங்கள் அனைவரும் பறங்கிய மடு நீலக்கடல் கூட்டுறவுச் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட மீனவக் குடும்பங்களாகும். இந்தப் படகுகள் விற்பனை வேறு நபர்களுக்கு விற்பனை செய்து விடக் கூடாது என்ற வகையில் இலங்கை கடற்றொழில் நீரியல் திணைக்களத்திற்கு ஊடாக இந்தப் படகுகள் எமக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதேபோன்று, புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்



பினால் சம்பூர் மீன்பிடித் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் அனைவரும் அதன் மூலம் சரியான பயனை அடைந்து 25 ஹோஸ் பவர் இன்ஜின் படகுகளை வாங்கி ஆழ்கடல் பகுதிகளுக்குச் சென்று மீன்களைப் பிடித்து வருகின்றனர். சிறந்த முறையில் கடற்றொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள். நல்ல வருமானத்தையும் ஈட்டி வருகின்றார்கள். இதுதான் உண்மை.

ஆனால் புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பு வழிகளை மட்டும்தான் காட்டும். அதன் இலக்கை எல்லையைத் தொட வேண்டியது பயனாளிகளுடைய பொறுப்பு. அவசர தேவைக்காக எப்படியும் 25 ஹோஸ் பவர் இன்ஜின் படகு ஒன்று இருந்தால் எங்களுடைய சிறிய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு போதுமானதாகும்.

ஒரு இன்ஜினை வாங்கி ஒவ்வொருவரும் மாற்றி மாற்றி பயன்படுத்த முடியும். அதில் கூடுலான மீன்கள் பிடிபட்டால் அந்தப் படகில் இருந்து வரும் நிதியில் இருந்து பொது நிதிக்கு கூடுதலாக ஒதுக்கிக் கொண்டால் மிகுந்த பயனை அடையலாம். இதன் மூலம் சேகரிக்கப்படும் நிதியைக் கொண்டு ஒவ்வொருவரும் 25 ஹோஸ் பவர் இன்ஜினைப் பெற்றுக் கொள்வதற்கான திட்டமிடலை மேற்கொள்ள முடியும்.

மொத்தமாக 56 கடற்றொழிலாளர் குடும்பங்கள் உள்ளன. அவர்களிடத்தில் 24 இன்ஜின் படகுகளும் 30 தோணிகளும் உள்ளன. புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பு எங்களுக்கு படகுகள் வாங்கித் தருவதற்கு முன்னர் ஏற்கனவே இரு படகுகள்தான் இருந்தன. ஆனால் இன்று 24 படகுகள் வைத்துக் கொண்டு தொழில் செய்து வருகின்றோம். முன்னர் புத்தளம் உடப்பூர் சென்று தான் கடற்றொழிலில் ஈடுபட்டோம். அந்த நிலை இன்று இல்லை. புத்தளத்தில் தாய் தந்தையும் இருந்தால் ஊரில் உள்ள பிள்ளைகளை எப்படி நாங்கள் படிப்பிப்பது? எல்லோரும் ஒரு வீட்டில் வசிக்கின்றோம். பிள்ளைகள் நேரத்திற்கு பாடசாலை செல்கின்றார்கள். நாங்களும் வீட்டில் இருந்து கொண்டு அந்த நேரத்திற்குச் தொழிலுக்குச் சென்று சம்பாதிக்கின்றோம். கையில் பணம் இல்லை என்றால் இரவுவேளையில் மீன்பிடிக்கச் செல்வோம். வாழ்வாதாரத்தை தேடுவது என்பது எங்கள் கைகளிலேயே உள்ளன. தேட வேண்டிய உதவிகளை எல்லாம் புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பு எங்கள் கைகளில் தந்துள்ளன. நாங்கள் எந்தளவுக்கு தேட வேண்டுமோ அந்தளவுக்கு நாங்கள் தேட வேண்டும். இப்பொழுது சிறிய வீடாக இருந்த இடமெல்லாம் பெரிய பெரிய வீடுகளாக மாற்றம் பெற்று வருகின்றன.

இக்கிராமத்திலுள்ள மக்கள் அனைவருக்கும் புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்புத்தான் வீடமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தந்தன. இரு பிள்ளைகள் பல்கலைக்கழகம் செல்லுகின்றன. ஒரு பிள்ளை யாழ் பல்கலைக்கழகம் மற்றைய பிள்ளை கிழக்குப் பல்கலைக்கழகம்.

**இங்கு கருத்துத் தெரிவித்த கடற்றொழிலாளியான சுமன்;**

நாங்கள் கடற்றொழிலை பிறந்த நாள் முதல் செய்து வருகின்றோம். புனர்வாழ்வு புதுவாழ்வு அமைப்பின் இங்கிலாந்து நாட்டுக்கான தலைவர் பொறியியலாளர் கலாநிதி வேலாயுதம் சர்வேஸ்வரன் மற்றும் அவ்வமைப்பின் இலங்கைக்கான தலைவர் பொறியியலாளர் ஹென்ரி அமல்ராஜ் ஆகிய இருவர்களின் காலடி இந்தப் பிரதேசத்தில் மண்ணில் பட்ட பின்பு தான் நாங்கள் இன்று எழுந்து நிற்கின்றோம். அவர்கள் முதலில் எல்லோருக்கும் வீடுகள் கட்டித் தந்தார்கள். அதில் எனக்கு ஒரு வீடு கிடைத்தது. பின்பு வாழ்வாதார மேம்பாட்டுக்காக இன்ஜின் படகுகளையும் பெற்று தந்தார்கள். இன்று நான் அவர்கள் தந்த வீட்டோடு சேர்த்து இன்னும் பெரியளவில் புதிய வடிவில் வீட்டை நிர்மாணித்து வருகின்றேன். இத்தகைய உதவிகள் செய்த புண்ணியவான்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார். மேலும் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு போக்குவரத்து நலன்கருதி துவிச்சக்ர வண்டிகள் மற்றும் பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கான பல்வேறு வேலைத் திட்டங்களையும் இவ்வமைப்பினர் முன்னெடுத்து வருவதாகவும் பயனாளிகள் கருத்து தெரிவித்தனர்.



இக்பால் அலி

## கமத்தொழில் அமைச்சு

## ஆர்வ வெளிப்பாடு (EOI)

# 37 ஆவது ஆசிய பசுபிக் பிராந்திய மாநாட்டுக்கான (APRC) வசதிகளை செயற்படுத்துவதற்கான கேட்பொலிக்காட்சி சேவைகளை வழங்குதல்

### Bid No: MOA/APRC/AV/2023/02

கமத்தொழில் அமைச்சின் சார்பில், அமைச்சின் ஆலோசனை தெரிவுச் சபை (CPCM) தலைவரால் இங்கு குறிப்பிடப்படும் சேவைகளை வழங்குவதற்கு தகுதியும் தகைமையும் வாய்ந்தவர்களிடமிருந்து ஆர்வ வெளிப்பாடுகள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் உரிய சேவைகளை வழங்குவதற்கு தகுதியானவர்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் தகவல்களை வழங்க வேண்டும் (கையேடுகள், உரிய பணிசார்ந்த செயற்பாடுகளின் விபரங்கள், உரிய நிபந்தனைகளுடன் பணியாளர்களின் திறன்கள் பற்றிய முன்னனுபவம் மற்றும் மேலும்). ஆலோசகர்கள் அவர்களது தகைமைகளை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

தேசிய கொள்முதல் முகவர் நிலையத்தால் வெளியிடப்பட்ட தெரிவு செய்தல் மற்றும் வேலைவாய்ப்பு வழங்குதல் எனும் புதுப்பிக்கப்பட்ட வழிக்காட்டல்களுடனான விபரிக்கப்பட்ட கொள்கைகளின் மூலம் தரம் மற்றும் செலவீனம் (QCBS) என்பதன் அடிப்படையிலேயே ஆலோசகர் ஒருவர் தெரிவு செய்யப்படுவார்.

ஆர்வமுள்ள ஆலோசகர்கள் மேலதிக விபரங்களை பணிப்பாளர் (தகவல்துதாழிநுட்பம்), கமத்தொழில் அமைச்சு ஊடாக பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இலக்கம் : 011-2034335 இணையதளம் **www.agrimin.gov.lk**)

பின்வரும் விபரங்கள் ஆர்வ வெளிப்பாடு ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்

(அ) பொது தகைமைகள் மற்றும் அனுபவங்கள், உரிய துறைசார்ந்த செயற்பாடுகள் மற்றும் முன்னனுபவங்களுடன் வாடிக்கையாளர்கள், செயற்பாடுகளின் தன்மை, இடம், ஒப்பந்த மதிப்பு என்பவற்றை விபரிக்கவும்.

(ஆ) நிறுவனத்தின் மட்டம் மற்றும் உரிமையாளர்களின் பெயர்கள் உட்பட பிரதி பணியாளர்களின் தகைமைகள்.

(இ) ஒழுங்கமைப்பின் தொழில்நுட்ப மற்றும் முகாமைத்துவ திறன்கள்.

(ஈ) துறைசார்ந்த செயற்பாடுகளின் தகைமைகள்.

(உ) நிர்வாக மற்றும் நிதிசார் பலம்.

(ஊ) உரிய ஏனைய தகவல்கள்.

கீழ்குறிப்பிடப்படும் முகவரியில் 10.11.2023 ஆம் திகதிக்கு முன்னர் ஆர்வ வெளிப்பாடு இனை ஒப்படைக்கவும்.

தலைவர்
அமைச்சின் ஆலோசனைத் தெரிவுச்சபை (CPCM),
நிர்வாகம் III, 1 ஆவது மாடி,
கமத்தொழில் அமைச்சு,
80/5, கொவிஜன மந்திரய,
ரஜமல்வத்த அவினியு,
பத்தரமுல்ல

**தலைவர்**
**அமைச்சின் ஆலோசனைத் தெரிவுச்சபை (CPCM),**
**நிர்வாகம் III, 1 ஆவது மாடி,**
**கமத்தொழில் அமைச்சு,**
**80/5, கொவிஜன மந்திரய,**
**ரஜமல்வத்த அவினியு,**
**பத்தரமுல்ல**
**2023.10.24**

## நீர்ப்பாசன அமைச்சு
## நீர்ப்பாசன திணைக்களம்
## கேள்விமனு அறிவித்தல்

### மேலதிக நிர்மாண பொருட்களை விற்பனை செய்வதற்கு
### விலைமனுகோரல்

### யான் ஓயா

1. திணைக்கள பெறுகைக் குழு தலைவரினால் நீர்ப்பாசன திணைக்களம் சார்பில் அநூராதபுரம் வலயத்தின் யான் ஓயா நீர்த்தேக்க திட்டத்தின் வேலைத் தளத்தில் (சேணம் அணை 1 மற்றும் 2இற்கு இடையே) குவிக்கப்பட்டிருக்கும் மேலதிக நிர்மாண பொருட்களை விற்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | பொதி இலக்கம் | நிர்மாண பொருட்கள் | அளவு கியூப் | மீளளிக்கப்படாத வைப்பு (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | ID/HO/CT/Yan Oya-SECM/ Metal(40mm) /NCB/2023/04 | கருங்கல் 40mm (Metal) | 9700 | 2,500.00 | கியூப் 100 தொடக்கம் 4000 வரை - கியூப் 1க்கு ரூபா 250.00 வீதம்<br>கியூப் 4000க்கு மேல் - ரூபா 1,200,000.00 |
| 02 | ID/HO/CT/Yan Oya-SECM/ Metal(20mm) | கருங்கல் 20mm (Metal) | 200 | 2,500.00 | |
| 03 | ID/HO/CT/Yan Oya-SECM/ Quarry Dust/NCB/2023/06 | சரளைக்கல் (Quarry Dust) | 8400 | 2,500.00 | |
| 04 | ID/HO/CT/Yan Oya-SECM/ Sand/NCB/2023/07 | மணல் (Sand) | 1880 | 2,500.00 | |
| 05 | ID/HO/CT/Yan Oya-SECM/ Builders/NCB/2023/08. | கருங்கல் 3X0.3m தொடக்கம் 1.0X1.0m வரை (Bolders) | 830 | 2,500.00 | |

**அட்டவணை 01**

2. விலைமனுதாரர்களுக்கு விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியுமான குறைந்தபட்ச நிர்மாணப் பொருட்கள் அளவு (ஒரு பொருளுக்கு) 100 கியூப் ஆகும்.

3. விலைமனுதாரர்களுக்கு ஒரு பொதி அல்லது பலதுக்காக அவர்களின் கூறுவிலையை சமர்ப்பிக்க முடியும்.

4. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, இல. 230இல் நீர்ப்பாசன திணைக்களத்தின், நீர்ப்பாசன பணிப்பாளர் (ஒப்பந்தம் மற்றும் பெறுகை) இடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு (தொ.பே. 011-2582897/011-2583305) யான் ஓயா திட்டத்தின் வேலைத்தளத்தில் (சேணம் அணை 1 மற்றும் 2இற்கு இடையே) வாஹல்கட, கெபதிகொல்லேவ குவிக்கப்பட்டிருக்கும் நிர்மாணப் பொருட்களை பரீட்சிக்க முடியும். (விசாரணைக்கு தொ.பே. 071-4499190)

5. அட்டவணை இலக்கம் 01இல் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை 2023.10.23ஆம் திகதி தொடக்கம் 2023.11.13 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.00 வரையான காலத்தில் அநுராதபுரம், விமானநிலைய வீதியில் அமைந்துள்ள நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தில் நீர்ப்பாசன பணிப்பாளர் (அநுராதபுரம்) அல்லது கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, இலக்கம் 230, இடத்தில் அமைந்துள்ள நீர்ப்பாசன திணைக்களத்தின் பெறுகை பிரிவில் நீர்ப்பாசன பணிப்பாளர் (ஒப்பந்தம் மற்றும் பெறுகை) இடம் செலுத்தி விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்ய முடியும். மேலும் மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை (மேலுள்ள அட்டவணை 01இல் குறிப்பிடப்பட்டுள்ளது) மேல் குறிப்பிடப்பட்ட முகவரியில் நீர்ப்பாசன பணிப்பாளருக்கு (அநுராதபுரம்) அல்லது கொழும்பு 07, பௌத்தாலோக்க மாவத்தை, இலக்கம் 230 இல் அமைந்துள்ள நீர்ப்பாசன திணைக்கள கணக்காளருக்கு (கொடுப்பனவு) விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னர் செலுத்த வேண்டும்.

6. சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்கள் 2024.01.15ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும். மேலும் அட்டவணை 01இல் குறிப்பிடப்பட்டவாறு வைப்பு செய்யப்படும் மீளளிக்கப்படும் வைப்புக்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றையும் விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அந்தப் பற்றுச்சீட்டின் பிரதியுடன் சமர்ப்பிக்காத விலைமனுக்கள் எந்த ஒரு அறிவுறுத்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

7. விலைமனு ஆவணத்தின் அனைத்து பிரதிகளும் விலைமனுதாரர் மூலம் கையொப்பம் இட்டு அவரது உத்தியோகபூர்வ முத்திரையை இடுதல் வேண்டும்.

8. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுவை நகல் பிரதியுடன் கொழும்பு 7, பௌத்தாலோக்க மாவத்தை, இலக்கம் 230, நீர்ப்பாசன திணைக்களம், 03ஆவது மாடியின் அறை இலக்கம் 311 இல் (தலைமை நிதி அதிகாரி அலுவலகம் இதற்காக வைக்கப்பட்டுள்ள விலைகேட்புப் பெட்டியில் இடுவது அல்லது மேலுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் 2023.11.13 ஆம் திகதி பி.ப.03.00 அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு விலைமனுக்களை கிடைப்பதற்கு வகை செய்தல் வேண்டும். விலைமனுக்களை ஏற்பது 2023.11.13ஆம் திகதி பி.ப. 03.00க்கு நிறைவடைவதோடு, அதன் பின் உடன் திறக்கப்படும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

9. விலைமனுக்களை இடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மேலதிக நிர்மாண பொருட்களை விற்பனை செய்தல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

10. விலைமனுக்கள் திறக்கப்படுகின்ற சந்தர்ப்பத்திற்கு வருவதற்கு விருப்பம் காட்டுகின்ற விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**நீர்ப்பாசன திணைக்களம்,**
**இலக்கம் 230,**
**பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு 07.**
**திகதி : 2023.10.23**

## இலங்கை மின்சார சபை
# 2023 மின் கட்டணத் திருத்தம்

கீழ்க்காணும் இருப்பனவுகளுக்குரிய மின் கட்டணமானது, அனைத்து நுகர்வோர் வகைகளுக்கும் 2023 ஐப்பசி 20 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் 30 நாட்கள் கொண்ட நுகர்வுக் காலப்பகுதிக்கான மின் கட்டணமுறைமை பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

| 2023 மின் கட்டணத் திருத்தம் | | |
|---|---|---|
| அமுலாகும் திகதி (30 நாட்கள் கொண்ட நுகர்வுக் காலப்பகுதிக்குரியது) | **2023-10-20** | |
| **வீட்டுபயோக அறவீடு** | **அலகுக்குரிய கட்டணம் (ரூ./ கி. வொ. மணி)** | **மாதாந்த நிலையான கட்டணம் (ரூ./ மாதம்)** |
| **நுகர்வோர் வகைகள்** | | |
| **மாதாந்த நுகர்வு அலகு கி.வொ.மணி. 0 - 60** | | |
| **பகுதி 1 : கி. வொ. மணி 0 - 30** | 12.00 | 180.00 |
| **பகுதி 2 : கி. வொ. மணி. 31 - 60** | 30.00 | 360.00 |
| **மாதாந்த நுகர்வு அலகு கி.வொ.மணி. 60 இற்கு மேல்** | | |
| **பகுதி 1 : கி. வொ. மணி 0 - 60** | 38.00 | N/A |
| **பகுதி 2 : கி. வொ. மணி 61 - 90** | 41.00 | 480.00 |
| **பகுதி 3 : கி. வொ. மணி 91 - 120** | 59.00 | 1,180.00 |
| **பகுதி 4 : கி. வொ. மணி 121 - 180** | 59.00 | 1,770.00 |
| **பகுதி 5 : கி. வொ. மணி 180 இற்கு மேல்** | 89.00 | 2,360.00 |
| **பாவனை நேரத்தை அடிப்படையாகக் கொண்ட (ToU) இருப்பனவை தெரிவுசெய்து கொண்ட வீட்டுபயோக நுகர்வோர்** | | |
| **பகல்** | 83.00 | 2,360.00 |
| **உச்ச பயன்பாட்டு நேரம்** | 106.00 | |
| **உச்சமற்ற பயன்பாட்டு நேரம்** | 35.00 | |
| **சமய மற்றும் தொண்டுழிய அமைப்புகள் வகைகள்** | | |
| **பகுதி 1 : கி. வொ. மணி 0 - 30** | 12.00 | 180.00 |
| **பகுதி 2 : கி. வொ. மணி 31 - 90** | 24.00 | 300.00 |
| **பகுதி 3 : கி. வொ. மணி 91 - 120** | 41.00 | 710.00 |
| **பகுதி 4 : கி. வொ. மணி 121 - 180** | 53.00 | 1,770.00 |
| **பகுதி 5 : கி. வொ. மணி 180 இற்கு மேல்** | 59.00 | 2,360.00 |

| இதர நுகர்வோர் வகைகள் பகல் | | அலகுக்குரிய கட்டணம் (ரூ./ கி.வொ.மணி) | | | மாதாந்த நிலையான கட்டணம் (ரூ./ மாதம்) | உச்சக் கேள்விக் கட்டணம் (ரூ./கி.வோ. அம்.) |
|---|---|---|---|---|---|---|
| | | உச்ச பயன்பாட்டு நேரம் | உச்சமற்ற பயன்பாட்டு நேரம் | உச்சமற்ற பயன்பாட்டு நேரம் | | |
| கைத் தொழில் கட்டண வகை 1 | கைத்தொழில் நோக்கம் 1-1 கி. வொ. மணி. 0 – 300 வரை | 20.00 | | | 340.00 | - |
| | கைத்தொழில் நோக்கம் 1-2 கி. வொ. மணி. 300 இற்கு மேல் | 28.00 | | | 1,120.00 | - |
| கைத்தொழில் கட்டண வகை 2 | | 38.00 | 41.00 | 32.00 | 5,600.00 | 1,800.00 |
| கைத்தொழில் கட்டண வகை 3 | | 37.00 | 40.00 | 31.00 | 5,600.00 | 1,680.00 |
| ஹோட்டல் கட்டண வகை 1 | ஹோட்டல் 1-1 கி. வொ. மணி. 0 – 300 வரை | 20.00 | | | 340.00 | - |
| | ஹோட்டல் 1-2 கி. வொ. மணி. 300 இற்கு மேல் | 28.00 | | | 1,120.00 | - |
| ஹோட்டல் கட்டண வகை 2 | | 38.00 | 41.00 | 32.00 | 5,600.00 | 1,800.00 |
| ஹோட்டல் கட்டண வகை 3 | | 37.00 | 40.00 | 31.00 | 5,600.00 | 1,680.00 |
| பொதுப் பயன்பாட்டு நோக்கம் 1 | பொதுப்பயன்பாட்டு நோக்கம் 1-1 கி. வொ. மணி. 0 – 180 வரை | 43.00 | | | 750.00 | - |
| | பொதுப்பயன்பாட்டு நோக்கம் 1-2 கி. வொ. மணி. 180 இற்கு மேல் | 56.00 | | | 1,860.00 | - |
| பொதுப்பயன்பாட்டு நோக்கம் 2 | | 58.00 | 68.00 | 48.00 | 6,200.00 | 2,000.00 |
| பொதுப்பயன்பாட்டு நோக்கம் 3 | | 57.00 | 67.00 | 47.00 | 6,200.00 | 1,860.00 |
| அரச நிறுவனம் கட்டண வகை 1 | அரச நிறுவனம் 1-1 கி. வொ. மணி. 0 – 180 வரை | 43.00 | | | 750.00 | - |
| | அரச நிறுவனம் 1-2 கி. வொ. மணி. 180 இற்கு மேல் | 56.00 | | | 1,860.00 | - |
| அரச நிறுவனம் கட்டண வகை 2 | | 58.00 | 68.00 | 48.00 | 6,200.00 | 2,000.00 |
| அரச நிறுவனம் கட்டண வகை 3 | | 57.00 | 67.00 | 47.00 | 6,200.00 | 1,860.00 |
| வீதி விளக்கு | | 56.00 | | | - | - |
| **மின்சார வாகனங்களுக்கான இலங்கை மின்சார சபையின் மின்கல மின்னேற்றும் நிலையங்களின் இருப்பனவு** | | | | | | |
| நேரோட்ட விரைவு மின்னேற்றம் | | 109.00 | 139.00 | 66.00 | - | - |
| நிலை 2 ஆடலோட்ட மின்னேற்றம் | | 87.00 | 112.00 | 50.00 | - | - |
| பாவனை நேரத்தை அடிப்படையாகக் கொண்ட (ToU) இறுப்பனவை தெரிவு செய்து கொண்ட விவசாய நுகர்வோர் | | 38.00 | 41.00 | 32.00 | 1,120.00 | - |

**குறிப்பு:**

— பகல் (மணி 0530 – மணி 1830), உச்ச பயன்பாட்டு நேரம் (மணி 1830 – மணி 2230), உச்சமற்ற பயன்பாட்டு நேரம் (மணி 2230 – மணி 0530)

— **கட்டண வகை 1:** ஒப்பந்தக் கேள்வி கி. வோ. அம். (kVA) 42 இற்குக் குறைவான அல்லது சமனான, வோல்ட் அளவு 400/230 கொண்ட வழங்கல்.

— **கட்டண வகை 2:** ஒப்பந்தக் கேள்வி கி. வோ. அம். (kVA) 42 இற்கு அதிகமான, வோல்ட் அளவு 400/230 கொண்ட வழங்கல்.

— **கட்டண வகை 3:** வோல்ட் அளவு கி. வோ. (kV) 11 இற்குக் கூடிய அல்லது சமனான வழங்கல்.

- 2022 ஐப்பசி 1ம் திகதி முதல் அமுலாகும் வகையில் 2022 ஆம் ஆண்டின் 25ம் இலக்க சமூகப் பாதுகாப்பு உதவித்தொகை அறவீட்டு சட்டத்தின்படி மாதாந்த சமூகப் பாதுகாப்பு உதவித்தொகை அறவீடு இலங்கை மின்சார சபையின் மாதாந்த மின்சார கட்டணத்தின் நூற்றுக்கு 2.5 வீதமாகும்.
- 2009 வருட 20 ஆம் இலக்க இலங்கை மின்சார சபைச் சட்டத்தின் 30 (2) (டீ) பிரிவிற்கு அமைவாக இலங்கை மின்சார சபையினால் மேற்குறித்த திருத்தங்கள் வெளியிடப்படுகின்றன.

**பதில் பொது முகாமையாளர்**
**இலங்கை மின்சார சபை**

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

# மாவட்ட பொது வைத்தியசாலை - சிலாபம்
## 2024ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2024ஆம் ஆண்டில் பின்வரும் வழங்கல்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக உற்பத்தியாளர்கள், பிரதிநிதிகள், பதிவு செய்யப் பெற்றுள்ள கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுத்தாபனங்கள் உட்பட அரச நிறுவனங்கள், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களை இவ் வைத்தியசாலையின் வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**(அ) பொருட்கள் வழங்கல்கள்**

01. சகல வகையான காகிதாதிகள் (பெக்ஸ் கடதாசி/கணனி கடதாசி/பேனா, பென்சில்/புத்தகம் போன்றன)
02. சகல வகையான அச்சி இயந்திரங்கள் பெக்ஸ்/போட்டோப் பிரதி இயந்திரங்களுடன் சம்பந்தப்பட்ட டோனர் காட்ரிஜ் மற்றும் தீந்தை/ரோனியோ சீந்தை
03. மரம்/உருக்கு/MDF/பிளாஸ்டிக் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள்
05. அவசர வேளையில் மருந்துகளை கொள்வனவு செய்வதற்கான மருந்தகங்கள் (சிலாபம் சுற்றுவட்டம்)
05. அவசர வேளைகளில் மேற் கொள்ள வேண்டிய ஆய்வுகூட பரிசீலனை, கதிரியல் பரிசோதனை மற்றும் வேறு சேவைகளுக்கான நிறுவனங்கள் (சிலாபம் சுற்றுவட்டம்)
06. சகல மின் உபகரணங்கள் (மின் விசிறி/குளிர்சாதனம்/மின் கேத்தல்/சலவை இயந்திரம் போன்றன)
07 சகல வகையான இலத்திரனியல் உபகரணங்கள் (குளிர்சாதனம்/சலவை இயந்திரம் மற்றும் ஏனைய மின் உபகரணங்கள்
08. கணனி மற்றும் கணனி துனைப்பாகங்கள்/பெக்ஸ்/போட்டோ பிரதி ரோனியோ/CCTV இயந்திரம் போன்றன
09. மனை மற்றும் வாகனங்களுக்கான வளச்சீராக்கிகள்
10. சகல ஹாட்வெயர் பொருட்கள் (கட்டிட உபகரணங்கள், சீமெந்து/இரும்பு/வயர் சுவிட்ச் போன்ற மின் பொருட்கள், நீர்க்குழாய் மற்றும் துணைப்பாங்கள் மலசலகூடம் மற்றும் வேற்பாட்டு உபகரணங்கள் தீந்தை வகைகள் உட்பட)
11. ட்ரொலி, சக்கர நாற்காலி, சேலைன் ஸ்டான்ட், வைத்தியசாலை கட்டில், உணவு ட்ரொலி அலுமினியம் மற்றும் வெள்ளை இரும்பு போன்றன
12. கருங்கல், கல்தூள், செங்கல் மற்றும் மணல் போன்ற கட்டிடப் பொருட்கள் வழங்குதல்
13. வைத்தியசாலை துணிமணி, தலையணை, நுளம்பு வலை, திரைச் சீலை போன்றன
14. சமையலறை உபகரணம் (அலுமினியப் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள், மின் உபகரணங்கள், குப்பை வாளி போன்றன)
15. சவர்க்காரம், சலைவத் தூள், மலசலகூட சுத்திகரிப்பு திரவம் மற்றும் தூள்வகைகள், தும்புத்தடி, விளக்குமாறு, பிரஷ் மற்றும் உற்பத்திகள் போன்ற பாவைனப் பொருட்கள்
16. காபேஜ் பேக், பொலித்தின் பேக், வெள்ளை பொலித்தின், திண்ம மெழுகு
17. டயர், டியூப், வாகன பற்றரி மற்றும் உதிரிப் பாகங்கள்
18. மெத்தை (சகல மொடலில்) மற்றும் ரெக்சின்
19. சப்பாத்து (சத்திர சிகிச்சையக பூட்ஸ், கென்வஸ், செருப்பு, ரப்பர் உற்பத்திகள் போன்றன)
20. சத்திர சிகிச்சையகத்திற்கான தூய நீர்வழங்குதல்
21. கிழிக்கப்பட்ட பலகை, ரீப்பை மற்றும் சகல மரவகைகள்
22. அச்சு விடயங்கள், பெயர் பலகை, பெனர், இறப்பர் முத்திரை, தின முத்திரை தயாரித்தல்
23. மருந்து உள்ளிடும் உறை தயாரித்து அச்சிடுதல்
24. உபசரணை விடயங்களுக்கு உணவு மற்றும் ஏனைய பொருட்கள் (சிலாப நகரச் சந்தை ஹோட்டல் மற்றும் உணவக உரிமையாளர்களுக்கு மட்டும்)
25. சமையலறை மற்றும் ஏனைய அலகுகளுக்கான காஸ் வழங்குதல்
26. தேவைப்படும் வேளையில் வாடகை அடிப்படையில் நோயாளர் காவு வண்டி/பஸ்/வேன் வழங்குதல்

**02. சேவைகள்**

27. அலுவலக உபகரணங்கள் சேர்விஸ் செய்தல்/பழுது பார்த்தல் (கணனி/அச்சு இயந்திரம்/போட்டோப் பிரதி இயந்திரம்/ரோனியோ/பெக்ஸ் இயந்திரம் போன்றன)
28. வைத்தியசாலை நோயாளர் காவு வண்டி உட்பட வகைகளின் மோட்டார் வாகன சேர்விஸ் செய்தல்
29. வைத்திய நோயாளர் காவு வண்டி உட்பட வகைகளில் மோட்டார் வாகன பழுது பார்த்தல்
30. உருக்கு/மரத் தளபாடங்கள் பழுது பார்த்தல் (பிரம்பு கதிரை பின்னுதல் குசன் செய்தல் உடபட)
31. இரும்புக் கட்டில், அம்புலன்ஸ் வலை, சக்கர நாற்காலி, சேலைன் ஸ்ட்டான்ட் பழுது பார்த்தல்
32. தராசு, சமையலறை உபகரணம் பழுதுபார்த்தல்
33. சாக்கடை அமைப்புடன் தொடர்புடைய மோட்டார் மற்றும் நீர் மோட்டார் பழுது பார்த்தல்
34. மனை மற்றும் வாகனங்களில் வளிச்சீராக்கிபழுதுபார்த்தல்/குளிர்சாதனம் பழுது பார்த்தல்
35. ஊழியர் அடையாள அட்டை தயாரித்தல்
36. உள்ளக தொலைபேசி அமைப்பு பராமரிப்பு
37. அலுமினிய வாகன மூலம் மேற்கொள்ளப்படும் சிறிய அளவான பார்டிசன் வேலைகள்

**03. அகற்றப்பட்ட பொருட்கள் விற்பனை**

38. அகற்றப்பட்ட பொருட்கள் விற்பனை/கண்ணாடி/பிளாஸ்டிக் போத்தல்/ வெற்று சேலைன் போத்தல்/ காட்போட்/கடதாசி/ பிளாஸ்டிக் கேன்
39. சமையலறை அகற்றப்பட்ட உணவு மற்றும் உணவு எச்சங்கள்
40. வைத்தியசாலை பிரேத அறை மற்றும் ஆய்வு கூடங்களில் இருந்து அகற்றப்பட்ட பரிசீலனைக்கு உள்ளாக்கப்பட்ட உடற்பாகங்கள் மற்றும் சடலங்களை அகற்றுதல்

**04. கட்டிட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு விடயங்கள்**

41. கட்டிடங்கள் பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு விடயங்களுடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்காக இலங்கை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் பதிவு செய்து ICAD/CIDA-C9 (EM-05) அல்லது அதற்கு மேல் தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (இதற்காக வேறாக விண்ணப்பப்படிவம் விநியோகிக்கப்படும்)

### வழங்குநர் ஒருவராகப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் – 2024

01. நிறுவனங்களின் வியாபர பெயர் மற்றும் முகவரி:...............................
02. தனி அல்லது கூட்டு வியாபாரமாயின் உரிமையாளர்களின் பெயர்:...............................
03. i. தொலைபேசி இலக்கம்:...............................
    ii. பெக்ஸ் இல:...............................
    iii. ஈமெயில் முகவரி:...............................
04. வட் பதிவு செய்யப்பெற்றிருப்பின் அதன் இலக்கம்:...............................
    (உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்)
05. வழங்கல்கள் உருப்படி இல.:...............................
    பெருட்கள்/சேவையின் பெயர்:...............................
06. வியாபாரத்தின் பதிவு இலக்கம் மற்றும் திகதி:...............................
    (உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று இணைக்கப்படல் வேண்டும்)
07. காசு செலுத்திய விதம்
    i. விநியோகிக்கப்பட்ட பற்றுச் சீட்டு இல.:...............................
    ii. வங்கிக்கு செலுத்திய பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டுள்ளது ( ):...............................

மேற்படி தகவல்கள் உண்மையானது மற்றும் சரியானது என இத்தால் உறுதி செய்கிறேன் ஏதேனும் பிழையான தகவல் வழங்கியிருப்பின் பதிவை நிராகரித்து இரத்துச் செய்வதற்கு உட்படுமாறு நான் அறிவிக்கிறேன். இதற்காக வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி மற்றும் VZT பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை இணைக்கப்பட்டுள்ளது.

............................................ ............................

**விண்ணப்பதாரியின் கையொப்பம்** திகதி

**வியாபார பதிவு இல மற்றும் முத்திரை**

**நிபந்தனைகள்**

01. ஒவ்வொரு பொருட்களில் கீழ் கீழ்க்காணும் மீளளிக்கப்படாத கட்டணத் தொகை சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டு அல்லது பணிப்பாளர், மாவட்ட பொது வைத்தியசாலை சிலாபம் பெயரில் சிலாபம் இலங்கை வங்கிக் கிளையின் இல. 2040283 கணக்கிற்கு காசு வைப்புச் செய்து பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை விண்ணபத்துடன் இணைத:து அனுப்புதல் வேண்டும்.
02. விண்ணப்பங்களை பெற்றுக் கொள்வதற்காக வைத்தியசாலைக்கு வருகை தரல் காட்டாயம் இல்லை என்பதுடன் மேற்படி மாதிரியின் பிரதிகள் A4 அளவில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பமொன்றை சமர்ப்பிக்கலாம். காசு செலுத்துவதுடன் சம்பந்தப்பட்ட ஆவணத்தை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புவதுடன் குறித்த மாதிரியின் பிரகாரம் அமையாத விண்ணப்பங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும் (விண்ணப்பத்துடன் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்)
03.

| பெருட்கள் | மீளளிக்கப்படாத தொகை |
|---|---|
| 1. இல. 1 முதல் 41 வரை பொருட்கள் மற்றும் சேவைகள் | ரூ. 500.00 |
| 2. இல. 41 கட்டிட நிர்மாணம் மற்றும் பராமரிப்பு விடயங்கள் | ரூ. 2500.00 |

04. சகல விண்ணப்பங்கள் 2023.11.21 பி.ப. 2.00 இற்கு முன் தலைவர், பிரதேச பெறுகைக் குழு மாவட்ட பொது வைத்தியசாலை, சிலாபம் என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் இவ் வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024' மாவட்ட பொது வைத்தியசாலை, சிலாபம் உருப்படி இல...... என்று கடித உறையின் இடது பக்க மூலையில் கட்டாயமாக குறிப்பிடல் வேண்டும்.
05. சாதாரணமாக பதிவு செய்த வழங்குநர்களிடமிருந்து மற்றும் ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுவதுடன் வேறு வழங்குநர்களிடமிருந்து மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் விலைமனுக்கள் கோரல், கொள்வனவு செய்தல் மற்றும் சேவையை பெற்றுக் கொள்ளும உரிமை நிறுவனத்திற்கு உரியது,

**தலைவர்/பணிப்பாளர்,**
**பிரதேச பெறுகைக் குழு**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**சிலாபம்.**

**தொடர்புகள்: 032-2222261/02ஐ அழைக்கவும்**
**நீடிப்பு இல. 342**

## இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.

இல. 310 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரியிலுள்ள வரையறுக்கப்பட்ட ஹம்சா ட்ரேட்ஸ் (தனியார்) நிறுவனத்தின் கடன் பொறுப்புகளுக்காக வரி மதிப்பீட்டு இல. 306, 308, 310 ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரியிலுள்ள ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.

2023.10.02 அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1.பிரசித்த நொத்தாரிசு E.W.S.B. ஏக்கநாயக்க அத்தாட்சிப்படுத்திய 2014.03.17ஆம் திகதிய 857ஆம் இலக்க ஆரம்ப ஈட்டுமுறி, பிரசித்த நொத்தாரிசு J.C. மஹாரச்சி அத்தாட்சிப்படுத்திய 2016.11.04ஆம் திகதிய 387 ஆம் இலக்க ஈட்டுமுறி என்பவற்றின் பேரில் இல. 310, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரியில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட ஹம்சா ட்ரேட்ஸ் (தனியார்) நிறுவனத்தாரால் பெற்றுக்கொள்ளப்பட்ட நிரந்தர மேலதிகப் பற்று வசதி ரூ. 96,000,000.00 (தொண்ணூற்றாறு மில்லியன் ரூபாய்)மறுசீரமைக்கப்பட்ட கடன் வசதி ரூ. 29,922,095.81 (இருபத்தொன்பது மில்லியன் தொள்ளாயிரத்து இருபத்திரண்டாயிரத்துத் தொண்ணூற்றைந்து ரூபாய் எண்பத்தொரு சதம்) மறுசீரமைக்கப்பட்ட கடன் வசதி ரூ.8,932,124.82 (எட்டு மில்லியன் தொள்ளாயிரத்து முப்பத்திரண்டாயிரத்து நூற்று இருபத்து நான்கு ரூபாய் எண்பத்திரண்டு சதம்) என்பவற்றின் மீது 2023.09.13ஆம் திகதி வரையான வட்டியும் முதலுமாக முறையே ரூ. 182,208,657.53 (நூற்று எண்பத்திரண்டு மில்லியன் இருநூற்றெட்டாயிரத்து அறுநூற்று ஐம்பத்தேழு ரூபாய் ஐம்பத்து மூன்று சதம்), ரூ. 62,308,480.10 (அறுபத்திரண்டு மில்லியன் முந்நூற்றெட்டாயிரத்து நானூற்றெண்பது ரூபாய் பத்துச் சதம்), ரூ.18,601,755.18 (பதினெட்டு மில்லியன் அறுநூற்றோராயிரத்து எழுநூற்று ஐம்பத்தைந்து ரூபாய் பதினெட்டுச் சதம்) ஆகிய தொகைகளும் 2023.09.14ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு AWPLR+2.5 என்ற வீதப்படி மேற்குறித்த கடன்கள் மீது திரட்டப்பட வேண்டிய மேலதிக வட்டியும் வங்கிக்கு வருமதியாகவுள்ளது.

2. மேற்குறித்த ஈட்டுமுறி இலக்கங்கள் 857, 387 என்பவற்றின் பேரில் வங்கிக்கு வருமதியாகவுள்ள 263,118,892.81 ரூபாயையும் (இருநூற்று அறுபத்து மூன்று மில்லியன் நூற்றுப் பதினெட்டாயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றிரண்டு ரூபாய் எண்பத்தொரு சதம்) அத்துடன் 2023.09.14ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்குறித்த வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தை இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல.50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த M/S T & H ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி. கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கியின் பெருநிறுவன அறவிடற் பிரிவின் தொடர்பு முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

உரிமம் பெற்ற நில அளவையாளர் K. கனகசிங்கம் தயாரித்த 2015.11.18ஆம் திகதிய 4511ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு N என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பள்ளே பற்று, கொழும்பு பிரதேச செயலகம் மற்றும் கொழும்பு மாநகரசபை நிர்வாக எல்லைகட்குட்பட்ட கொழும்பு மாளிகாவத்தை மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவு, மாளிகாவத்த மேற்கு 15ஆம் வட்டாரம், ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ளது. வடக்கில் இல.312, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்ட நிலமனையையும் கிழக்கில் இல.368/10, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்ட நிலமனையையும் தெற்கில் இல.312, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்ட நிலமனை, உரிமம் பெற்ற நில அளவையாளர் M.I.சமீர் தயாரித்த 1977.05.21ஆம் திகதிய, வரைபட இல. 570Bஇல் உள்ளதும் இல.302, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்டதுமான காணித்துண்டு B5, வரைபட இல.2579இல் உள்ள காணித்துண்டு AY என்பவற்றையும் மேற்கில் வரைபட இல. 570Bஇல் உள்ளதும் இல.302, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்டதுமான காணித்துண்டு B5 மற்றும் ஸ்ரீ சங்கராஜ மாவத்தை என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி பதினொன்று தசம் ஒன்று இரண்டு பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே.11.12) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் என அனைத்தையும் கொண்டுள்ளதோடு கொழும்பு காணிப்பதிவகத்தில் D168/107 என்ற இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய காணித்துண்டானது கீழே விபரிக்கப்பட்டுள்ள காணிகளின் ஒன்றிணைப்பு ஆகும்.

உரிமம் பெற்ற நில அளவையாளர் K. கனகசிங்கம் தயாரித்த 2012.05.15ஆம் திகதிய 2579ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு AX என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி இலக்கங்கள். 306, 308, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்துடன் மேற்குறிப்பிடப்பட்டவாறு ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ளது. வடக்கில் வரைபட இல. 570Bஇல் உள்ளதும் இல.302, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்டதுமான காணித்துண்டு B1, இல.312, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்ட நிலமனை என்பவற்றையும் கிழக்கில் இல.368/10, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்ட நிலமனையையும் தெற்கில் இல.290, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்ட நிலமனை, வரைபட இல. 570Bஇல் உள்ளதும் இல.302, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்டதுமான காணித்துண்டு B5, காணித்துண்டு AY என்பவற்றையும் மேற்கில் வரைபட இல. 570Bஇல் உள்ளதும் இல.302, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்டதுமான காணித்துண்டு B5, காணித்துண்டு AY, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, வரைபட இல. 570Bஇல் உள்ளதும் இல.310, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்டதுமான காணித்துண்டு B1 என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி ஒன்பது தசம் இரண்டு ஐந்து பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே.9.25) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் என அனைத்தையும் கொண்டுள்ளதோடு கொழும்பு காணிப்பதிவகத்தில் D70/53 என்ற இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

உரிமம் பெற்ற நில அளவையாளர் K. கனகசிங்கம் தயாரித்த 2015.01.19ஆம் திகதிய 4229ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு X என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி இல.310, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்துடன் மேற்குறிப்பிடப்பட்டவாறு ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ளது. வடக்கில் இல.312, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்ட நிலமனையையும் கிழக்கில் வரைபட இல. 2579இல் உள்ளதும் இலக்கங்கள். 304, 306, 308, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்டதுமான காணித்துண்டு AXஐயும் தெற்கில் வரைபட இல. 2579இல் உள்ளதும் இலக்கங்கள். 304, 306, 308, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்டதுமான காணித்துண்டு AXஐயும் மேற்கில் ஸ்ரீசங்கராஜ மாவத்தையையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி ஒன்று தசம் எட்டு ஏழு பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே.1.87) பரப்பளவையும் அதன்கண் காணப்படும் கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் என அனைத்தையும் கொண்டுள்ளது.

காணித்துண்டு X என அடையாளப்படுத்தப்பட்ட மேற்கூறிய காணித்துண்டானது கீழே விபரிக்கப்பட்டுள்ள காணியின் மீளளவை ஆகும்.

உரிமம் பெற்ற நில அளவையாளர் M.I. சமீர் தயாரித்த 1977.05.21ஆம் திகதிய வரைபட இல.570Bஇல் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு B1 அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி இல.310, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்துடன் மேற்குறிப்பிட்டவாறு மருதானையிலுள்ள ஸ்ரீ சங்கராஜ மாவத்தையில் அமைந்துள்ளது. வடக்கில் இல.312, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை எனும் வரிமதிப்பு இலக்கத்தைக் கொண்ட நிலமனையையும் கிழக்கில் காணித்துண்டு B6 ஐயும் தெற்கில் காணித்துண்டு B2 ஐயும் மேற்கில் ஸ்ரீ சங்கராஜ மாவத்தையையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி இரண்டு தசம் பூச்சியம் ஆறு பேர்ச்சுகள் (ஏ0.றூ0.பே.2.06 பரப்பளவையும் அதன்கண் காணப்படும் கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் என அனைத்தையும் கொண்டுள்ளதோடு கொழும்பு காணிப்பதிவகத்தில் D127/93 என்ற இலக்கத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

A.C.H. அத்துக்கோரல
சிரேஷ்ட முகாமையாளர்
பெருநிறுவன அறவிடற் பிரிவு

**இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி.**
**இலங்கை வங்கி**
**பெருநிறுவன அறவிடற் பிரிவு**
**இல.1, இலங்கை வங்கி மாவத்தை**
**கொழும்பு 01.**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## தங்கக் கடன் பகிரங்க விற்பனை/ஏலம்

ரிச்சர்ட் பீரிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தங்கக் கடன் மையங்களில் 31.07.2023 வரையிலான காலப்பகுதியில் அடகு வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள், இது வரை மீட்டெடுக்கப்படவில்லை, 12.11.2023 அன்று விற்கப்படும்.

**தங்க கடன் நிலையங்கள்**

Arij City, சிலாபம், கம்பஹா, ஹட்டன், ஹோமாகம, கல்முனை, கண்டி, களனி, குளியாப்பிட்டிய, குருநாகல், மாத்தறை Metro, நீர்கொழும்பு, நுவரெலியா, வென்னப்புவ

**திகதி, நேரம் மற்றும் விற்பனை நடைபெறும் இடம்**

திகதியும் நேரமும்: **12.11.2023 மு.ப 10.00 மணிக்கு**
இடம் : **ரிச்சர்ட் பீரிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட்**
**இல.453/1, கண்டி வீதி, தலுகம, களனி.**

பங்கேற்கும் அனைவரும் தேசிய அடையாள அட்டை மற்றும் உத்தரவாத வைப்புத் தொகையை கொண்டு வர வேண்டும். ரிச்சர்ட் பீரிஸ் ஃபைனான்ஸ் லிமிடெட் எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்ய அல்லது ஒத்திவைக்கும் உரிமையை கொண்டுள்ளது.

**ரிச்சர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிட்டெட்**
தொலைபேசி: **0714 368 997 / 0711 692 272**

## கேள்வி அறிவித்தல்

மத்திய நுவரகம மாகாண பிரதேச சபைக்குச் சொந்தமான வர்த்தக உரிமைகளை 2024 ஆண்டிற்காக குத்தகைக்கு விடுதல் சார்பாக கேள்விகள் கோரப்படுகின்றன.

- ➢ கேள்வி நிபந்தனை மற்றும் படிவங்களை விடுவித்தல்
  2023.10.24 முதல் 2023.11.14 வரை - மு.ப. 9.00 முதல் பி.ப. 13.00 வரை
- ➢ கேள்விகள் ஏற்றுக் கொள்ளல்
  2023.10.24 முதல் 2023.11.14 வரை - மு.ப. 9.00 முதல் பி.ப. 13.00 வரை
- ➢ கேள்விகள் திறத்தல்
  2023.11.14 14.00 மணிக்கு

கேள்வி விண்ணப்பங்கள் மத்திய நுவரகம பளாத்த பிரதேச சபையின் எல்யாபத்துவ தலைமையகத்தில் மற்றும் பண்டுலகம உப அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் 025-2053056 தொ. பே. இலக்கத்தில் மற்றும் மத்திய நுவரகம பலாத்த பிரதேச சபையின் https://site-9599556-4748-2478.mystrikingly.com/ இணைய தளத்தில் வட மத்திய மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் www.lgd.nc.gov.lk இணையதளத்தில் மற்றும் Nuwaragam Palatha Cenrtal Pradeshiya Sabha பேஸ்புக் பக்கத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

**என். ஜி. எம். புஷ்பகுமாரி**
**செயலாளர் மற்றும் அதிகார செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**மத்திய நுவரகம பலாத்த பிரதேச சபை,**
**பண்டுலகம.**

## இலங்கை வங்கி

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.

12.09.2023 அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. பிரசித்த நொத்தாரிசு தீப்தி வீரசூரிய அத்தாட்சிப்படுத்திய 2021.11.12ஆம் திகதிய 4082ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் இல. 456,கனஹேன, பத்தரமுல்ல என்ற முகவரியிலுள்ள சுபாஷ் அன்ட் சேச்சில் கார் சென்ரர் நிறுவனத்தின் பங்காளர்களான திரு. ஹெட்டியாரச்சிகே தொன் அந்தோனி ராஜா குணதிலக்க, திரு. ஹெட்டியாரச்சிகே தொன் சேச்சில் தனேஷ் ஔஷான் குணதிலக்க, திரு. ஹெட்டியாரச்சிகே தொன் டேமியன் பிரியன்ஸ் றோச் குணதிலக்க ஆகியோர் கூட்டாகவும் தனித்தனியாகவும் பெற்றுக்கொண்ட ரூ.24,986,000.00 (இருபத்து நான்கு மில்லியன் தொள்ளாயிரத்து எண்பத்தாறாயிரம் ரூபாய்) மறுசீரமைக்கப்பட்ட A தவணைக் கடன் மற்றும் ரூ. 15,067,935.22 (பதினைந்து மில்லியன் அறுபத்தேழாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தைந்து ரூபாய் இருபத்திரண்டு சதம்) மறுசீரமைக்கப்பட்ட B தவணைக் கடன் என்பவற்றின்மீது 2023.08.08 வரையான வட்டியும் முதலுமாக முறையே 27,114,732.13 ரூபாயும் (இருபத்தேழு மில்லியன் நூற்றுப் பதினான்காயிரத்து எழுநூற்று முப்பத்திரண்டு ரூபாய் பதின்மூன்று சதம்) 15,736,557.06 ரூபாயும் (பதினைந்து மில்லியன் எழுநூற்று முப்பத்தாறாயிரத்து ஐந்நூற்று ஐம்பத்தேழு ரூபாய் ஆறு சதம்) இவற்றுடன், 2023.08.09ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை குறித்த மறுசீரமைக்கப்பட்ட A தவணைக் கடனின் முதல் நிலுவையான ரூ. 24,986,000.00 (இருபத்து நான்கு மில்லியன் தொள்ளாயிரத்து எண்பத்தாறாயிரம் ரூபாய்) மீது ஆண்டுக்கு ஒன்பது வீதப்படியான (9%) மேலதிக வட்டியும் மறுசீரமைக்கப்பட்ட B தவணைக் கடனின் முதல் நிலுவையான ரூ. 15,067,935.22 (பதினைந்து மில்லியன் அறுபத்தேழாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்தைந்து ரூபாய் இருபத்திரண்டு சதம்) மீது ஆண்டுக்கு மூன்று வீதப்படியான (3%) மேலதிக வட்டியும் வங்கிக்கு வருமதியாகவுள்ளது.

2. மேற்குறித்த 2021.11.12ஆம் திகதிய 4082ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் வருமதியாகவுள்ள மேற்குறித்த 42,851,289.19 ரூபாயையும் (நாற்பத்திரண்டு மில்லியன் எண்ணூற்று ஐம்பத்தோராயிரத்து இருநூற்று எண்பத்தொன்பது ரூபாய் பத்தொன்பது சதம்) அத்துடன் 2023.08.09ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்குறித்த வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தை இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397 அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3 விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ அன்ட் எச் ஒக்ஷன்ஸ் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. எம்.எச்.ரி கருணாரத்னவுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி தலைநகரக் கிளையின் அறவிடல் மற்றும் கடன் மேற்பார்வைப் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணை

கனேவத்தை என அறியப்படும் கனஹேன என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் வரைபடத்தில் கே.என்.ஏ. அல்விஸ் தயாரித்த 2018.09.25ஆம் திகதிய 6953ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு X1 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி இல. 186/B, கடுவெல வீதி எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்துடன் மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் ஹேவாகம் கோரளை, பள்ளே பற்று, கடுவெல மாநகரசபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைகட்குட்பட்ட 492B பத்தரமுல்ல வடக்கு கிராம சேவகர் பிரிவிலுள்ள கடுவெல வீதி மருங்கில் பத்தரமுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ளது. வடக்கில் கடுவெல வீதி, காணித்துண்டு X2 என்பவற்றையும் கிழக்கில் காணித்துண்டுகள் - X2, X3 என்பவற்றையும் தெற்கில் காணித்துண்டு X3ஐயும் மேற்கில் பாதை, கடுவெல வீதி என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி பதினேழு தசம் ஒன்பது பூச்சியம் (A0.R0.P17.90) பேர்ச்சுகள் அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் நான்கு ஐந்து மூன்று (0.0453) ஹெக்ரயர் பரப்பளவையும் அதனகத்துக் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளதோடு ஹோமாகம காணிப் பதிவகத்தில் B 345/113 என்ற இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கனேவத்தை என அறியப்படும் கனஹேன என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் வரைபடத்தில் கே.என்.ஏ. அல்விஸ் தயாரித்த 2018.09.25ஆம் திகதிய 6953ஆம் இலக்க விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு X3 என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி இல. 186/1, கடுவெல வீதி எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்துடன் மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம் ஹேவாகம் கோரளை, பள்ளே பற்று, கடுவெல மாநகரசபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைகட்குட்பட்ட 492B பத்தரமுல்ல வடக்கு கிராம சேவகர் பிரிவிலுள்ள கடுவெல வீதி மருங்கில் பத்தரமுல்ல பிரதேசத்தில் அமைந்துள்ளது. வடக்கில் காணித்துண்டுகள் X1,X2 மற்றும் வீதி என்பவற்றையும் கிழக்கில் வீதி மற்றும் 1321ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு 2 என்பவற்றையும் தெற்கில் 1321ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டு 2 மற்றும் வீதி என்பவற்றையும் மேற்கில் வீதி மற்றும் காணித்துண்டு X1 என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி பன்னிரண்டு தசம் மூன்று ஐந்து (A0.R0.P12.35) பேர்ச்சுகள் அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் மூன்று ஒன்று இரண்டு (0.0312) ஹெக்ரயர் பரப்பளவையும் அதனகத்துக் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ளதோடு ஹோமாகம காணிப் பதிவகத்தில் B 1587/62 என்ற இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி

இலங்கை வங்கி — திரு. W.M.H.A.S.S.B. ஏக்கநாயக்க
தலைநகரக் கிளை — முகாமையாளர்
(அறவிடல் மற்றும் கடன் மேற்பார்வை

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz Auto Focus



THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz It's what you want



- Auto Focus
Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

**106 கார்கள் விற்பனைக்கு**

KD-4252 SUBARU 2004, CAR கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714 5 42 958 . 067682

KK-5 5 45 PERODUA VI VA ELIT E 2 008, CAR கூடி ய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பி னான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 071 4542 958 . 067673

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

LH-9633 TATA 1615, 2010 LORRY கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 067684

PT-0239 MAHINDRA MAXIMO 2012, கூடிய விலைக் கோரிக்கை க்கு . வெலிபல் பினான் ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958 . 067674

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

AAA-3521 BAJAJ 2012, ABP-0664 BAJAJ 2017, YG-7513 B AJAJ 2 010 THREEW HEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711210 810 . 067680

ABF-419 2 TVS KING 2015, AAT-4821 TVS KN G 2014, THREEW H EEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711210 810 . 067669

BFZ-757 7 TVS APACHE 2017, MOTOR C YCLE கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711210 810 . 067670

QZ-4172 BAJAJ 2010, YA-0651 BAJAJ 2010, THREEWH EEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0705999 163 . 067678

### வேலைவாய்ப்பு

**320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்**

ஒரு பேக்கரி பாஸ் தேவை. (அவன் (OVEN WORK) வேலை) 0711661588. 066893

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு

NLB

# தேசிய லொத்தர் சபை

## நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### தேசிய லொத்தர் சபைக்கு பதினான்கு (14) கூடுகள் கொண்ட ஒற்றை இலக்கக் காற்றால் கலக்கப்படும் லொத்தர் பந்து சீட்டிழுப்பு இயந்திரத்தை வடிவமைத்தல், வழங்குதல், செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றுக்கான விலைக்கோரல்

1. பதினான்கு (14) கூடுகள் கொண்ட ஒற்றை இலக்கக் காற்றால் கலக்கப்படும் லொத்தர் பந்து சீட்டிழுப்பு இயந்திரத்தை வடிவமைத்தல், வழங்குதல், செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தல் என்பவற்றுக்கு சர்வதேச விலைக்கோரல் நடைமுறையின் கீழ் உலக லொத்தர் சங்கத்தின் (WLA) லொத்தர் சீட்டிழுப்பு இயந்திரங்களை தயாரிப்பதில் நிபுணத்துவம் பெற்ற இணை உறுப்பினர்களிடமிருந்து அங்கீகாரம் பெற்ற மற்றும் புகழ்பெற்ற உள்நாட்டு முகவராக (இலங்கையில் இருத்தல் வேண்டும்) முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை தேசிய லொத்தர் சபையின் சார்பில் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின், அமைச்சுப் பெறுகைக்குழு தலைவர் அழைக்கின்றார்.
2. விலைமனுதாரர்களுக்கான மூலப் பிரமாணங்கள்:
   i. லொத்தர் சீட்டிழுப்பு இயந்திரத்தை தயாரிப்பதில் நிபுணத்துவம் பெற்ற உலக லொத்தர் சங்கத்தின் (WLA) இணை உறுப்பினராக இருக்க வேண்டும்.
   ii. லொத்தர் பந்து சீட்டிழுப்பு இயந்திரங்களைத் தயாரிப்பதில் குறைந்தபட்சம் 10 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
   iii. குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் கணனிமயமாக்கப்பட்ட லொத்தர் பந்து சீட்டிழுப்பு இயந்திரங்களைப் போன்ற உணர்திறன் அல்லது ஒத்த மின், மின்னணு மற்றும் இயந்திர தீர்வுகளைக் கையாள்வதில் அனுபவம் உள்ள அங்கீகாரம் பெற்ற மற்றும் புகழ்பெற்ற உள்நாட்டு முகவர்களாக இருக்க வேண்டும்.
   iv. உள்நாட்டு முகவரானவர் இலங்கையில் 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனமாக இருக்க வேண்டும்.
   v. தகுதி வாய்ந்த விலைமனுதாரர் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் நேரத்தில் உள்நாட்டு முகவருடன் ஒப்புதலுக்கான கடிதத்தை சமர்ப்பிக்க வேண்டும்.
3.

| உற்பத்தி | விலைக்கோரல் இலக்கம் | மீளளிக்கப்படாத கட்டணம் (VAT சகிதம்) |
|---|---|---|
| பதினான்கு (14) கூடுகள் கொண்ட ஒற்றை இலக்கக் காற்றால் கலக்கப்படும் லொத்தர் பந்து சீட்டிழுப்பு இயந்திரம் | NLB/PROC/19/ BDM (14C)/ 20220078 | 160 அமெரிக்க டொலர்கள் அல்லது 50,000.00 இல. ரூபா |

4. தேசிய லொத்தர் சபைக்கு பதினான்கு (14) கூடுகள் கொண்ட ஒற்றை இலக்கக் காற்றால் கலக்கப்படும் லொத்தர் பந்து சீட்டிழுப்பு இயந்திரத்தை வடிவமைத்தல், வழங்குதல், செயற்படுத்துதல் மற்றும் பராமரித்தல் என்பவற்றுக்கு ஆர்வமும் தகுதியும் உள்ள வளமுள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் 2023.10.24ஆம் திகதி முதல் 2023.12.04ஆம் திகதி வரையான திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான உள்ளூர் நேரத்தில் பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து கொழும்பு-01, இல. 32, தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, தேசிய லொத்தர் சபை, 1ஆம் மாடி, பெறுகைப் பிரிவிலிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
   அ) பொது முகாமையாளர், தேசிய லொத்தர் சபை, இல. 32, தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, இலங்கை என முகவரியிடப்பட்டு வியாபாரக் கடிதத் தலைப்பில் உற்பத்தியாளரால் எழுதப்பட்ட வேண்டுகோள் கடிதம்
   ஆ) மேற்கூறப்பட்ட 03ஆம் இலக்க கீழ் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள **மீளளிக்கப்படாத கட்டணச்** செலுத்துதலை உறுதிப்படுத்தல்.
   இ) உற்பத்தியாளரின் பந்து சீட்டிழுப்பு இயந்திரங்களைத் தயாரிப்பதற்காக உலக லொத்தர் சங்கத்தின் (WLA) இணை உறுப்பினர் சான்றிதழின் சான்றுபடுத்தப்பட்ட நகல் பிரதி.
   ஈ) உற்பத்தியாளர் சார்பாக பிரதிநிதி விலைக்கோரல் ஆவணத்தைப் பெற்றால், விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளும்போது மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து ஆவணங்களும் வழங்கப்பட வேண்டும்.

   விலைக்கோரல் ஆவணங்களை மேற்கூறப்பட்ட குறிப்பிடப்பட்ட முகவரியில் நேரம் மற்றும் திகதிகளில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. விலைமனுதாரர்கள் விலைமனுக்களை பின்வருமாறு சமர்ப்பித்தல் வேண்டும்:
   அ) விலைக்கோரல் ஆவணத்தில் கோரப்பட்டுள்ள அனைத்து விரிவான தகவல்களுடன் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   ஆ) விலைமனுக்களின் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என்பவற்றை வெவ்வேறான உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அவ்வுறைகளில் முறையே ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் உள்ளிட்டு பதிவுத் தபால் மூலமாகவோ, கூரியர் சேவை மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.
   இ) உட்புற மற்றும் வெளிப்புற உறைகள்:
      i. தலைவர், அமைச்சு பெறுகைக் குழு, தேசிய லொத்தர் சபை, இல. 32, தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, இலங்கை, 00100" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
      ii. உட்புற மற்றும் வெளிப்புற உறைகளின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரலின் பெயர் மற்றும் அடையாள எண்ணைக் குறிப்பிடுதல் வேண்டும்.
   ஈ) முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கடித உறைகளை "தலைவர், அமைச்சு பெறுகைக் குழு, தேசிய லொத்தர் சபை, இல. 32, தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, இலங்கை, 00100" என்ற முகவரிக்கு 22023.12.05ஆம் திகதி உள்ளூர் நேரடிப்படி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேணடும் அல்லது மேற்கூறிய முகவரியில் 5ஆம் தளத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
   உ) இலத்திரனியல் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
6. அனைத்து விலைமனுக்களுடனும் 20,000 அமெரிக்க டொலர்கள் (இருபதாயிரம் அமெரிக்க டொலர்கள்) பெறுமதிக்கு இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் மட்டும் வழங்கப்பட்ட கொழும்பு-01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, 32ஆம் இலக்கத்திலுள்ள தேசிய லொத்தர் சபை தலைவரை பயனாளராகக் குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 2024.03.04ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
8. விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி, உடனடியாகவே மேலேயுள்ள முகவரியில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் உரிய முறையில் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும்.
9. எவ்விதத்திலும் ஆதரவைப் பெற முயற்சித்தல் தகுதியீனமாகக் கவனத்திற் கொள்ளப்படும்.
10. விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்களுக்கு மட்டும் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023-11-10ஆம் திகதி உள்ளூர் நேரப்படி மு.ப. 10.30 மணிக்கு கொழும்பு-01, தேசமான்ய என்.டபிள்யு.ஜே. முதலிகே மாவத்தை, 32ஆம் இலக்கத்திலுள்ள தேசிய லொத்தர் சபையின் 6ஆம் மாடியிலுள்ள கூட்ட அறையில் இடம்பெறும். (விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் நிகழ்நிலை (online) தளங்கள் வழியாகவும் ஏற்பாடு செய்யப்படலாம்.)

மேலதிக தகவல்களை இலங்கை, கொழும்பு-01, இல. 32, தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, தேசிய லொத்தர் சபையின் உதவிப் பொது முகாமையாளர் (பெறுகை) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்பு விபரங்கள் பின்வருமாறு:**
**தொலைபேசி: +94 114 607 020 / +94 114 607 021**
**மின்னஞ்சல்: procurement@nlb.lk / procurementnlb@gmail.com**
**அலுவலக நேரங்கள்:** திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை (0930 முதல் 1600 GMT +5:30)

**தலைவர்**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**தேசிய லொத்தர் சபை,**
**இல. 32, தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை,**
**கொழும்பு 01, இலங்கை, 00100.**

---

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

## கேள்விமனுக்கோரல் (IFB)

| இல | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 01 | பிரதான சிற்றுண்டிச்சாலையின் மில்க் பாரின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் "மகநெகும மஹாமெதுர", வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஒப்பந்த இல. **RDA/DPR/CANT/MILK BAR/2022/42** |

மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளுக்கான கேள்விமலுக்கோரலானது தேசிய போட்டி நடைமுறைக்கேற்ப நடாத்தப்படும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் உத்தியோகப்பூர்வ இணையதளமான **www.rda.gov.lk** என்ற பக்கத்தினை **2023 ஒக்டோபர் 24ஆம்** திகதி முதல் **2023 நவம்பர் 14ஆம்** திகதி வரை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தலைவர்,
RDA கொள்முதல் குழு,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.

---

## பெறுகை அறிவித்தல்

**(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில், மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு மேல் மாகாணம்)**

# நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்திற்கு வாடகை அடிப்படையில் டிப்பர்களை பெற்றுக்கொள்ளல்

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தேவைக்காக வாடகை அடிப்படையில் கார் ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரங்கள் | | தேவையான டிப்பர்களின் எண்ணிக்கை | மீளளிக்கப் படாத படிவக் கட்டணம் (அதிகார சபையில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் தவிர) | கேள்விப் பிணையின் பெறுமதி ரொக்கப் பணமாக | கேள்வி திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| PRDA/ WP/PRO/ 2023/92 | நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்திற்கு வாடகை அடிப்படையில் டிப்பர்களை பெற்றுக்கொள்ளல் | கியூப் 01 | 08 | ரூபா 1000.00 + வெட் | ரூபா 10,000.00 | 2023-11-08 மு.ப. 11.00 மணிக்கு |
| | | கியூப் 1 1/2 | 07 | | | |
| | | கியூப் 02 | 07 | | | |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2023-10-24ஆம் திகதியிலிருந்து 2023-11-07ஆம் திகதி மு.ப. 09.00 முதல் பி.ப. 2.30 மணி வரை மேற்படி கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

02. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2023-11-08ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முடிவுறும் என்பதுடன் அன்றைய தினமே அவ்வேளையிலேயே இவ்வலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு, கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011-4849825/45**

---

## பெறுகை அறிவித்தல்

**(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில், மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு மேல் மாகாணம்)**

# கருங்கல் வகைகளை வழங்குதல்

இந்த அதிகார சபையின் பன்னல அஸ்போல்ட் உற்பத்தியகத்திற்கு இரண்டு மாதங்களுக்குத் தேவையான கருங்கல் வகைகளை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. பின்வரும் கேள்விச் சுருக்கத்தில் காட்டப்பட்டுள்ள வகையில் படிவத் தொகுதியைக் கொள்வனவு செய்தல் வேண்டும்.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | அஸ்போல்ட் உற்பத்தியகம் | வழங்கல் அளவு கியூப் மீற்றர் | | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் (பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் தவிர) | கேள்விப் பிணையின் பெறுமதி ரூபா | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பணமாக | வங்கிப் பிணை மூலம் |
| PRDA/WP/ PRO/2023/93 | பன்னல அஸ்போல்ட் உற்பத்தியகம் | 0-5 | 1175 | 2000.00 + வெட் வரி | 62,500.00 | 125,000.00 |
| | | 5-12 | 725 | | | |
| | | 12-20 | 550 | | | |

02. இதன் பொருட்டான கேள்வி ஆவணத் தொகுதியினை 2023-10-24ஆம் திகதியிலிருந்து 2023-11-07ஆம் திகதி மு.ப. 09.00 முதல் பி.ப. 2.30 மணி வரை மேற்படி கேள்விப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி இவ்வதிகார சபையின் கேள்விப் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை பணமாக அல்லது வங்கிப் பிணை முறி மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு கேள்வி ஆவணத்தில் தரப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பித்தல் வேண்டும்.

03. இந்தப் பெறுகைக்குத் தகைமை பெறுவதற்கு 5.0 மில்லியன் ரூபாவை விஞ்சும் கேள்வித் தொகைக்கு கேள்விதாரரினால் 1987 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்படும் பொது ஒப்பந்தங்கள் பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் 2023-11-08ஆம் திகதி பி.ப. 2.30 மணியாகும் என்பதுடன் அவ்வேளையிலேயே இவ்வலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு-12.**
**தொ. இலக்கம் 011-4849825/45**

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer adz Classified


For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

## உலகக் கிண்ணம்

# விலகுகிறார் மதீஷ பதிரண: சமீரவை அழைக்க வாய்ப்பு





வலது தோள்பட்டை காயத்துக்கு உள்ளாகி இருக்கும் இலங்கை வேகப் பந்து வீச்சாளர் மதீஷ பதிரண உலகக் கிண்ண போட்டியில் இருந்த நீக்கப்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

20 வயதான பதிரண உபாதை காரணமாக 10 நாட்கள் ஓய்வு வழங்கப்பட்ட நிலையில் இலங்கை கடைசியாக ஆடிய அவுஸ்திரேலியா மற்றும் நெதர்லாந்துக்கு எதிரான போட்டிகளில் பங்கேற்கவில்லை. இந்நிலையில் அவர் தனது பந்துவீசும் கையில் தொடர்ந்து வலியை உணரும் நிலையில் எதிர்வரும் போட்டிகளில் ஆடுவதில் சந்தேகம் நிலவி வருகிறது.

ஹைதராபத்தில் நடைபெற்ற பாகிஸ்தானுக்கு எதிரான போட்டிக்கு பின்னரே மதீஷ தனது வலது தோள்பட்டையில் வலியை உணர்ந்தார். இதனை அடுத்து அவருக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் சோதனை செய்யப்பட்டது. அப்போது அவரின் தோள்பட்டையில் பாதிப்பு ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டதோடு 10 நாட்கள் ஓய்வு அளிக்கப்பட்டது.

எனினும் அவரது நிலையில் இன்னும் முன்னேற்றம் அடையவில்லை என்றும் வலி இன்றி அவரால் இன்னும் பந்து வீசவோ அல்லது பந்தை எறியவோ முடியாமல் இருப்பதாகவும் அணி வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இந்நிலையில் அவரை இலங்கைக் குழாத்தில் இருந்து விடுவிப்பதற்கு உலகக் கிண்ண தொழில்நுட்ப குழுவிடம் இலங்கை அணி நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.

பதிரண இம்முறை உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி ஆடிய முதல் இரு போட்டிகளிலும் பங்கேற்றபோதும் கிட்டத்தட்ட ஒருவருக்கு 10 ஓட்டங்கள் வீதம் விட்டுக்கொடுத்து மொத்தமாக 185 ஓட்டங்களை தாரைவார்த்ததோடு இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தி இருந்தார்.

இந்நிலையில் இலங்கை அணியில் மேலதிக வீரர்களாக காயத்தில் இருந்து மீண்டுள்ள வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீர மற்றும் அனுபவ வீரர் அஞ்சலோ மத்தியூஸ் அழைக்கப்பட்டுள்ளனர். எனினும் பதிரணவுக்கு பதில் இவர்களில் யாரை அணியில் இணைப்பது என்பது பற்றி உறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.

கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை அணியுடன் இணைந்த இந்த இருவரும் பெங்களூரில் நேற்று முதல் இலங்கை அணியுடன் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இதில் இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சை பலப்படுத்தும் வகையில் துஷ்மந்த சமீர இலங்கை குழாத்தில் இணைக்கப்பட வாய்ப்பு இருப்பதாக அணி நிர்வாகத்தை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இதேவேளை நெதர்லாந்துக்கு எதிராக கடந்த சனிக்கிழமை நடைபெற்ற போட்டியின்போது பின்தொடை பகுதியில் உபாதைக்கு உள்ளான சுழற்பந்து வீச்சாளர் மஹீஷ் தீக்ஷனவுக்கு, இலங்கை அணி பெங்களூர் வந்த நிலையில் ஸ்கேன் சோதனை செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அணி 5 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிய நெதர்லாந்துக்கு எதிரான போட்டியில் தீக்ஷன 10 ஓவர்களையும் வீசி 44 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை வீழ்த்தி இருந்தார். எனினும் அண்மைக் காலமாக அவருக்கு இருந்து வந்த வலது பின் தொடை பகுதியில் உள்ள காயமே மீண்டும் ஏற்பட்டுள்ளது.

இதனால் அவர் அண்மையில் நடந்த ஆசிய கிண்ண இறுதிப் போட்டியிலும் ஆடவில்லை.

இது அவர் உலகக் கிண்ணத்தில் தொடர்ந்து ஆடுவது பற்றி பெரும் கேள்வியை ஏற்படுத்தியுள்ளது.

இதேநேரம் உபாதை காரணமாக அணியில் இருந்து நீக்கப்பட்ட அணித் தலைவர் தசுன் ஷானக்க தொடர்ந்தும் அணியுடன் இருந்து வருகிறார். பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியின்போது ஷானக்கவின் முன் தொடை பகுதியில் உபாதை ஏற்பட்டது. அவர் உடல் தகுதிபெற மூன்று வாரங்கள் எடுத்துக் கொள்வதன்காரணமாகஅவருக்குபதில் இலங்கை அணியில் மேலதிக வீரராகச் சென்ற சாமிக்க கருணாரத்ன சேர்க்கப்பட்டார்.

இந்நிலையில் இலங்கை அணி உலகக் கிண்ணத்தில் தனது அடுத்த போட்டியில் எதிர்வரும் வியாழக்கிழமை (26) பெங்களூரில் இங்கிலாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது.

## சம்பியனானது கொழும்பு சாஹிரா




ருஸைக் பாரூக்

கொழும்பு சாஹிரா கல்லூரி பழைய மாணவர் தலைவர்களின் சங்கம் நடத்திய நோலிமிட் சாஹிரா சுப்பர் 16 கால்பந்து போட்டியில் அலிதியா சர்வதேச பாடசாலையை வீழ்த்தி சாஹிரா கல்லூரி சம்பியன் கிண்ணத்தை வென்றது.

கொழும்பு, குதிரைப்பந்தய மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (21) நடைபெற்ற இந்த தொடரில் 16 பாடசாலை அணிகள் பங்கேற்றன. இதன் இறுதிப் போட்டியில் கொழும்பு சாஹிரா 4–0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

போட்டியின் பிரதான அனுசரணையாளர் நோலிமிட் சந்தைப்படுத்தல் முகாமையாளர் பவாஸ் மொஹமட் வெற்றி பெற்ற அணித் தலைவர் முபத்தல் சியார்ட் மற்றும் அணி உறுப்பினர்களுக்கு சம்பியன் கிண்ணம், ரொக்கப் பரிசு மற்றும் தங்கப் பதக்கங்களை வழங்கினார்.

## அக்கரைப்பற்று லோர்ட்ஸ் வெற்றி



அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று டீன்ஸ் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட, டீன்ஸ் ஸ்டார் சம்பியன் கிண்ண கிரிக்கெட் சுற்றுப்போட்டித்தொடரில் அக்கரைப்பற்று லோர்ட்ஸ் விளையாட்டு கழகம் கிண்ணத்தை கைப்பற்றியது.

அக்கரைப்பற்று பதுர் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் (17) நடைபெற்ற இச்சுற்றுத்தொடரின் இறுதிப்போட்டியில் அக்கரைப்பற்று லோர்ட்ஸ் அணியும் பள்ளிக்குடியிருப்பு றஹீமிய்யா அணியும் மோதின. இச்சுற்றுத்தொடரின் சிறப்பாட்டக்காராக றஹீமிய்யா அணியின் முஹம்மட் நஜாத் தெரிவு செய்யப்பட்டதோடு, இறுதிப்போட்டியின் ஆட்டநாயகனாக லோர்ட்ஸ் அணியின் இல்ஹாம் அஹமட் மற்றும் சுற்றுத்தொடரின் சிறந்த பந்துவீச்சாளராக முஹம்மட் ஹாதில் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

## சர்வதேச செய்திகள்



# காசாவில் இஸ்ரேல் இதுவரை இல்லாத தாக்குதல்: ஒரே நாளில் 400 பேர் பலி

இஸ்ரேல் மற்றும் காசா போர் வெடித்ததில் இதுவரை இல்லாத அளவுக்கு காசா மீதான இஸ்ரேலின் வான் தாக்குதல் தீவிரமடைந்திருப்பதோடு கடந்த 24 மணி நேரத்தில் சுமார் 400 பலஸ்தீனர் கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

காசாவில் இடம்பெயரும் மக்கள் அடைக்கலம் பெறுவதற்கான இடமும் தீர்ந்து வருவதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு எச்சரித்துள்ளது.

### மற்ற இடங்களிலும் மோதல் அதிகரிப்பு

இந்த மோதல் மற்ற இடங்களுக்கும் பரவும் சமிக்ஞையாக தெற்கு லெபனான் மீது இஸ்ரேல் வான் தாக்குதல் நடத்தி இருப்பதோடு ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலிய துருப்புகள் மற்றும் பலஸ்தீனர்களுக்கு எதிரான மோதலும் வலுத்து வருகிறது.

எகிப்துடனான ரபா எல்லை வழியாகா காசாவுக்கு மேலும் உதவிப் பொருட்கள் சென்றபோதும் அது அங்குள்ள தேவையில் மிகச் சிறிய அளவையே பூர்த்தி செய்யும் என்று ஐ.நா மனிதாபிமான நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இஸ்ரேலின் முழு முற்றுகையில் உள்ள காசா பகுதியில் உணவு, நீர், மருந்து மற்றும் எரிபொருள் இன்றி மக்கள் பேரவலத்தை சந்தித்துள்ளனர்.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் ஹமாஸ் போராளிகளின் சுரங்கப்பாதைகள், பல டஜன் கட்டளையகங்கள் மற்றும் முகாம்கள் உட்பட 320க்கும் மேற்பட்ட இலக்குகளை தாக்கியதாக இஸ்ரேல் நேற்று தெரிவித்தது.

காசாவின் மத்திய மற்றும் வடக்கு பகுதிகளில் இஸ்ரேலின் தாக்குதல் தீவிரமாக இருந்தததாக பலஸ்தீன ஊடகங்கள் தெரிவித்துள்ளன. வடக்கில் ஜபலியா அகதி முகாமுக்கு அருகில் இருக்கும் வீடு ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பலஸ்தீனர்கள் பலர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக ஊடகங்கள் தெரிவித்தன.

கான் யூனிஸில் உள்ள உணவகம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 13 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதனால் இந்த மோதலில் இதுவரை இல்லாத அளவுக்கு 24 மணி நேரத்திற்குள் 400 பேர் வரை உயிரிழந்துள்ளனர். இதனால் மருத்துவமனைகளின் பிணவறைகள் நிரம்பி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 5000ஐ நெருங்கி இருப்பதோடு ஆயிரக்கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர்.

காசா மீதான தரைவழி தாக்குதலை முன்னிட்டு வான் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக இஸ்ரேல் இராணுவம் கடந்த சனிக்கிழமை கூறியிருந்தது.

இந்த குண்டு மழையால் காசாவில் பெரும்பாலான பகுதிகள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. 2.3 மில்லியன் மக்கள் தொகை கொண்ட காசாவில் சுமார் 1.4 மில்லயன் மக்கள் இடம்பெயர்ந்திருக்கும் சூழலில் பெரும்பாலானவர்கள் ஏற்கனவே மக்கள் நிரம்பி வழியும் ஐ.நா அகதி முகாம்களில் அடைக்கலம் பெற்று வருகின்றனர்.

மோதலில் சிக்குவதை தவிர்ப்பதற்கு வடக்கில் இருந்து தெற்கை நோக்கி வெளியேறும்படி காசா மக்களுக்கு இஸ்ரேல் உத்தரவிட்டிருந்தது. எனினும் தெற்கிலும் தாக்குதல்கள் தீவிரமாக இருப்பதாலும் போதிய தற்காலிக முகாம்கள் இல்லாததாலும் அங்கு வெளியேறிச் சென்ற பலரும் மீண்டும் வடக்கு காசாவுக்கு திரும்பி வருவதாக ஐ.நா மனிதாபிமான அலுவலகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் காசா மோதல் மத்திய கிழக்கெங்கும் பரவும் அச்சம் அதிகரித்துள்ள சூழலில், பிராந்தியத்தில் உள்ள நலன்கள் அச்சுறுத்தலுக்கு முகம்கொடுத்திருப்பதாகவும் மேலதிக துருப்புகள் மற்றும் மேம்பட்ட பாதுகாப்பு அமைப்பு நிலைநிறுத்தப்படும் என்று அமெரிக்கா அறிவித்திருந்தது.

லெபனானுடனான இஸ்ரேலின் வடக்கு எல்லையில் ஈரான் ஆதரவு ஹிஸ்புல்ல அமைப்புக்கும் இஸ்ரேல் படையினருக்கும் இடையிலான மோதல் தொடர்ந்த வண்ணம் உள்ளது. இது 2006 இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையிலான போருக்கு பின்னர் அங்கு ஏற்பட்டிருக்கும் மோசமான வன்முறையாக மாறியுள்ளது.

இந்நிலையில் நேற்றுக் காலை இஸ்ரேல் மீது டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் மற்றும் ரொக்கெட் குண்டுகளை வீசிய இரு நிலைகளை இலக்குவைத்து லெபனானில் வான் தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் குறிப்பிட்டது. வளாகங்கள் மற்றும் கண்காணிப்பு நிலைகள் உட்பட மேலும் பல ஹிஸ்புல்லா இலக்குகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் கூறியது.

தமது போராளி ஒருவர் கொல்லப்பட்டதாக ஹிஸ்புல்லா நேற்று குறிப்பிட்டபோதும் அது பற்றி எந்த விபரத்தையும் அது வெளியிடவில்லை. தற்போதைய மோதல் வெடித்தது தொடக்கம் லெபனான் எல்லையில் தமது ஏழு படை வீரர்கள் கொல்லப்பட்டிருப்பதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.


மேற்குக் கரையில் ரமல்லாவுக்கு அருகில் ஜலாசோன் அகதி முகாமில் மேலும் இரு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்தது.

இஸ்ரேலிய படையினர் இங்கு சுற்றிவளைப்பை மேற்கொண்டு பலரை கைது செய்ததோடு ஆயுததாரிகளுடன் சண்டையிட்டதாகவும் இளைஞர்கள் கல்லெறிந்து தாக்குதல் நடத்தியதாகவும் குடியிருப்பாளர்கள் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளனர்.

மத்திய கிழக்கிற்கான சீனாவில் சிறப்புத் தூதுவர் பிராந்தியத்திற்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் நிலையில் பரந்த அளவான தரைவழி தாக்குதல் இந்த மோதல் பிராந்தியம் எங்கும் பரவும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று எச்சரித்துள்ளார்.

கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, பிரிட்டிஷ் பிரதமர் ரிஷி சுனக், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவெல் மக்ரோன், இத்தாலியப் பிரதமர் ஜியோர்ஜியா மெலோனி, ஜெர்மானியப் பிரதமர் ஒலாஃப் ஷோல்ஸ் ஆகியோருடன் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இணையம் வழி பேச்சு நடத்தியுள்ளார்.

போரால் ஏற்படக்கூடிய பின்விளைவுகள் பற்றிப் பேசிய தலைவர்கள் அந்த வட்டாரத்தில் அமைதியை எப்படி நிலைநாட்டுவது என்பதையும் விவாதித்தனர். இஸ்ரேலுக்கான ஆதரவை மறுவுறுதிப்படுத்திய தலைவர்கள் அப்பாவி மக்களைப் பாதுகாப்பதற்கு அழைப்பு விடுத்தனர்.



### அமெரிக்க துருப்புகள் வரும்வரை

## காசாவில் தரைவழித் தாக்குதலை தாமதப்படுத்த இஸ்ரேல் இணக்கம்

அமெரிக்க மேலதிக துருப்புகள் பிராந்தியத்திற்கு வரும் வரை காசா மீதான தரைவழி தாக்குதலை தாமதப்படுத்தும் அமெரிக்காவின் கோரிக்கைக்கு இஸ்ரேல் இணங்கியுள்ளது.

இஸ்ரேல் மற்றும் காசா மோதல் வெடித்த விரைவில் இஸ்ரேலுக்கு ஆதரவாக மத்திய கிழக்கில் இரு விமானதாங்கி கப்பல்களை நிலைநிறுத்திய அமெரிக்கா 2000 கடற்படையினரை அங்கு அனுப்புவதாகவும் அறிவித்தது.

இந்நிலையில் பிராந்தியத்திற்கு அமெரிக்காவின் மேலதிக இராணுவ தளபாடங்கள் மற்றும் துருப்புகள் செல்லும்வரையும், ஹமாஸ் போராளிகளால் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்காக இராஜதந்திர முயற்சிகளுக்கு வழிவிடும் வகையிலும் தரைவழித் தாக்குதலை தாமதப்படுத்தும்படி அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லொயிட் ஒஸ்டின் இஸ்ரேலை வலியுறுத்தி இருப்பதாக நியூயோர்க் டைம்ஸ் செய்தி வெளியிட்டிருந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை இரு அமெரிக்க பணயக்கைதிகளை ஹமாஸ் விடுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

பணயக்கைதிகளை விடுவிக்க அனைத்து இராஜதந்திர வாயில்களையும் பயன்படுத்தி முயற்சி மேற்கொள்ளப்படும் என்று கடந்த வாரம் இஸ்ரேல் சென்றிருந்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் குறிப்பிட்டிருந்தார்.

தரைவழி போர் வெடித்தால் பணயக்கைதிகளை விடுவிப்பதில் சிக்கல் ஏற்படும் என்று நம்பப்படுகிறது.

தமது பிடியில் இருக்கும் இஸ்ரேலியர் அல்லாத அனைவரையும் விடுவிக்க எதிர்பார்ப்பதாக ஹமாஸ் குறிப்பிட்டுள்ளது. எனினும் காசா மீதான தொடர்ச்சியான தாக்குதல்களால் அந்தத் திட்டம் தடைப்பட்டிருப்பதாக அது தெரிவித்துள்ளது.

## காசாவுக்குள் ஊடுருவிய இஸ்ரேல் வீரர் ஹமாஸ் தாக்குதலில் பலி

காசாவுக்குள் ஊடுருவி தேடுதலில் ஈடுபட்ட இஸ்ரேலிய படை வீரர் ஒருவர் ஹமாஸ் நடத்திய டாங்கி எதிர்ப்பு ஏவுகணை தாக்குதலில் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் இரு வீரர்கள் காயமடைந்துள்ளனர்.

கடந்த ஞாயிறன்று (22) இடம்பெற்ற இந்த சம்பவத்தை இஸ்ரேலிய இராணுவம் உறுதி செய்திருப்பதோடு இஸ்ரேலிய படையினரை பின்வாங்கச் செய்ததாக ஹமாஸ் ஆயுதப் பிரிவான கஸ்ஸாம் படைப்பிரிவு டெலிகிராமில் தெரிவித்துள்ளது.

ஊடுருவிய படைகளுடன் மோதலில் ஈடுபட்டதோடு இரு புல்டோசர்கள் மற்றும் டாங்கி ஒன்றை தாக்கி அழித்ததாகவும் ஹமாஸ் ஆயுதப் பிரிவு தெரிவித்துள்ளது. இஸ்ரேலிய படையினர் தமது வாகனங்களை விட்டுவிட்டு கால்நடையாக கிழக்கில் எல்லை வேலியை நோக்கி ஓடியதாகவும் அது தெரிவித்துள்ளது.



காசாவின் கான் யூனிஸ் பகுதியில் ஹமாஸினால் பிடித்துவைத்திருக்கும் பணயக்கைதிகள் இருக்கும் இடத்தை கண்டறியும் முயற்சியாகவே இந்த தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் காசா எல்லை பகுதியில் இஸ்ரேல் ரோந்து நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் அது அந்த பகுதியின் பாதுகாப்பை பலப்படுத்துவது மற்றும் பணயக் கைதிகள் தொடர்பில் உளவு தகவல்களை சேகரிப்பதற்கும் இவ்வாறு செய்வதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில் காசா மீதான இஸ்ரேலின் தரைவழி தாக்குதல் ஒன்றை எதிர்கொள்ள ஹமாஸ் தயாராகி வரும் நிலையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 24ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.